விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 தை 27 வெள்ளிக்கிழமை (09.02.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 052

# கல்வியாளர் ஒன்றியம் என்று எதுவும் இல்லை மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும்

## யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

உள்ளூர் பத்திரிகை ஒன்றில் நேற்றைய தினம் (08.02.2018) யாழ்ப்பாணக் கல்வியாளர் ஒன்றியம் என்ற பெயரில் வெளிவந்த அறிக்கைக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்துக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் நேற்றைய தினம் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் நா.பிரதீபராஜ் அவர்களால் வெளியிடப்பட்ட அறிக்கையில்,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வியாளர் ஒன்றியம் என்றொரு அமைப்பு இல்லை என்பதை நாம் தெரிவித்துக்கொள்கிறோம்.

அத்துடன் இவ்வாறான அறிக்கைகள் தொடர்பில் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் சமூகப் பொறுப்பின் அடிப்படையில் இதனை மக்களின் கவனத்துக்கு கொண்டு வருகின்றோம் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## கறுப்புபட்டியலில் இலங்கை

(கொழும்பு)

நிதி முறைகேடுகள் மற்றும் பயங்கரவாத நிதியளிப்பு அதிகம் இடம்பெறும் நாடுகளை உள்ளடக்கிய கறுப்பு பட்டியலில் 23☛

## தேர்தலை கண்காணிக்க வெளிநாட்டு குழுவினர் இலங்கை விஜயம்

(கொழும்பு)

விகிதாசாரம் மற்றும் தொகுதி வாரியிலான கலப்பு முறையில் முதல் முறையாக நடைபெறும் 23☛

## வாக்களிப்பு நிலையத்தில் கையடக்கத் தொலைபேசி பயன்பாட்டுக்குத் தடை

(கொழும்பு)

நாளை 10-ம் திகதி நடைபெற இருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்களிப்பு இடம்பெறும் நிலையங்களில் கையடக்கத் தொலைபேசி பயன்பாடு தடை செய்யப்பட்டுள்ளதாக தேர் 23☛

# சர்வதேச விசாரணை நடந்திருந்தால் எங்களுக்கு ஒரு முடிவு கிடைத்திருக்கும்

## காணாமல் போனவர்களின் உறவினர்கள்

(யாழ்ப்பாணம்) வன்னிப்போரில் இடம்பெற்ற இன அழிப்பு தொடர்பில் சர்வதேச விசாரணை நடைபெற்று இருந்தால் காணாமல் போன எங்கள் உறவினர்கள் தொடர்பில் ஒரு முடிவு கிடைத்திருக்கும் என காணாமல் போனவர்களின் உறவினர்கள் கண்ணீருடன் தெரிவித்துள்ளனர்.



காணாமல் போனவர்களைத் தேடும் உறவினர்களின் தொடர் போராட்டம் இன்று 355 நாட்களாக நீண்டு செல்கிறது. இதுவரை முடிவு எதுவும் கிடைக்கவில்லை.

எனினும் எமது போராட்டத்தை தொடரப் போகிறோம். எங்களுக்காக கதைப்பார்கள் என்று நான் நம்பியவர்கள் சர்வதேச குற்ற விசாரணையை வலியுறுத்தத் தவறினர்.

அது மட்டுமன்றி ஐ.நா மனித உரிமைகள் பேரவை முன்வைத்த தீர்மானங்களை இலங்கை அரசு நிறைவேற்றுவதற்கு விதித் 23☛

## வாக்குரிமையை தடையின்றி பயன்படுத்த உதவவேண்டும்

### பப்ரல் அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

அரசியல் கட்சிகள் தமது செல் வாக்கை பயன்படுத்தி வாக்காளர்களுக்கு அசௌகரியத்தை 24☛

## யாழில் உள்ளூராட்சி தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி

### அரச அதிபர் வேதநாயகன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி தேர்தல் நாளை 10-ம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் அதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரச 23☛

## காங்கிரஸ் வேட்பாளர் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

### பொலிஸாரிடம் முறைப்பாடு

(கரணவாய்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் இனம் தெரியாத நபர்களினால் தாக்கப்பட்ட நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கரவெட்டி பிரதேசசபையில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் இராஜ கிராமத்தைச் சேர்ந்த கந்தப்பு கிரிதரன் என்பரே நேற்று முன்தினம் புதன் கிழமை இரவு 10 மணியளவில் தாக்கப்பட்டுள்ளார்.

அவர் வீட்டில் இருந்த வேளையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவரை வெளி 23☛

## சளி அடைப்பினால் மூன்று மாதங்களேயான ஆண் குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

சளி அடைப்பு ஏற்பட்டு சிகிச்சை பலனளிக்காத நிலையில் மூன்று மாதங்களேயான ஆண் குழந்தை ஒன்று யாழ் போதனா வைத்தியசாலையில் பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

கொடிகாமம் பாலாவி வடக்கை சேர்ந்த 3 மாதங்களும் 3 நாட்களுமான ஸ்ரீசாங்கர் லிங்காஷன் 24☛

## வாக்கினை அளிக்க வேண்டுவது ஒரேயொரு புள்ளடியை (X) இடுவதன் மூலமே.



## 15.8 மில்லியன் மக்கள் வாக்களிக்க தகுதி நான்கு பில்லியன் ரூபாய் செலவில் தேர்தல்

### தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு



(கொழும்பு)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 15.8 மில்லியன் மக்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு வின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

நூற்றுக்கு மேற்பட்ட கட்சிகளும் சுயேட்சைக்குழுக்களும் தேர்தலில் போட்டியிடவுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரி 23☛

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603, 021 567 1532**

சுன்னாகத்தில்
**பொருளியற் கல்லூரி**
(யாழ்ப்பாணத்தின் கிளை நிறுவனம்)
K.K.S வீதி-சுன்னாகம்.
(K.K.S வீதியிலிருந்து மயிலணி வீதி, பக்கம் 100M தூரத்தில்)

**A/L கலை-வர்த்தகம் தொழில்நுட்பம்**
A/L 2018, 2019, 2020
A/L Day Class
அனைத்துப் பிரிவுகளும் ஆரம்பம்
11.02.2018 ஞாயிறு
கலைப்பிரிவு-8.00 am
வர்த்தகப்பிரிவு-2.00pm
தொழில்நுட்பபிரிவு-11.00am
A/L Day Class
திங்கள் முதல் வெள்ளி வரை
உங்கள் அனுமதிகளை அன்றையதினம் பெற்றுக்கொள்ளலாம்.

**எமது வழமையான பிரபல ஆசான்கள்**
பொருளியல் :-Mr.S.மகேந்திரன்
:-Mr.R.தர்சன்
கணக்கீடு:-Mr.B.முகுந்தன்
வணிகக்கல்வி:-Mr.S.பிரதீபன்
I.C.T:-Mr.R.சுதர்சன்
தமிழ்:-Mr.N.சத்தியவேந்தன்
இந்துநாகரிகம்:-Mr.A.A.மேனன்
புவியியல்:-Mr.P.S.குமரன்
அரசியல்:-Mr.S.கோகுலன்
வரலாறு:-Mr.K.சுதன்
அளவையியல்:-Mr.S.சயந்தன்
நாடகமும் அரங்கியலும்:-Mr.S.ஜெயசுதன்
ஊடகவியல்:-Mr.N.கஜிதரன்
இந்துசமயம்:-Mr.S.மனோஜ்
விவசாயம்:-Mr.S.சஜீவன்
கிறிஸ்தவநாகரிகம்:-Mr.A.J.யுபின்சன்
சித்திரம்:-Mr.S.சிறிஸ்
மனைபொருளியல்:-Mrs.றஜிதா
ஆங்கிலம்:-Mr.N.நிசாந்தன்

Note:-யாழ்.பிரபல ஆசிரியர் குழாமினால் கணித-உயிரியல் பிரிவுகள் 19.02.2018 அன்று 3.30PM ஆரம்பமாகின்றன.

தொடர்பு:-**0773763511, 0759160417**
(த-1533)

# இலங்கையில் முதன்முறையாக வாய் வழியாக கமராவை செலுத்தி தைராக்சின் சத்திரசிகிச்சை

(கொழும்பு)

இலங்கையில் முதன்முறையாக குளியாப்பிட்டிய வைத்தியசாலையில் நேற்று தைராக்சின் சத்திரசிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விசேட சத்திரசிகிச்சை நிபுணர் டொக்டர் மொஹமட் ரிஸ்வி தலைமையிலான குழுவினரால் குளியாப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 56 வயதுடைய பெண்ணுக்கு தைராக்சின் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தெற்காசிய நாடுகளில் தொண்டை வழியாக துவாரமிட்டு, அதற்குள் கமராவை செலுத்தி இந்த சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

எனினும், வாய் வழியாக கமராவை செலுத்தி அதன் மூலம் தைராக்சின் சத்திரசிகிச்சை இலங்கையில் முதன்முறையாக நேற்று மேற்கொள்ளப்பட்டதாக டொக்டர் மொஹமட் ரிஸ்வி தெரிவித்தார்.

இந்த முறைமை மூலம் சத்திரசிகிச்சை மேற்கொண்டால் தழும்புகள் ஏற்படாது என டொக்டர் மொஹமட் ரிஸ்வி சுட்டிக்காட்டினார். (ம)

## இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் ஜனாதிபதிக்கு எதிராக முறைப்பாடு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளதாக நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பு தெரிவித்துள்ளது.

குறித்த முறைப்பாட்டை இன்றையதினம் மேற்கொள்ளவுள்ளதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

மத்திய வங்கி பிணைமுறி விவகாரம் தொடர்பில் இலங்கைப் பிரஜை அல்லாத நபர் ஒருவரை மத்திய வங்கியின் ஆளுனராக தெரிவு செய்தமை மற்றும் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றுச் சூழல் அமைச்சர் என்ற ரீதியில் குறித்த அமைச்சில் நடைபெறும் மோசடி மற்றும் ஊழல் தொடர்பாகவே ஜனாதிபதிக்கு எதிராக முறைப்பாடு செய்யவுள்ளதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

அத்துடன், மகாவலி அபிவிருத்தி அமைச்சின் பிரதி அமைச்சர் அநுராத ஜயரத்ன, மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் முன்னாள் தலைவர், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிரதி பணிப்பாளருக்கு எதிராகவும் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்படவுள்ளதாக நுகர்வோர் உரிமைகள் பாதுகாக்கும் அமைப்பு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம)

## சாவகச்சேரியில் விபத்து இரு இளைஞர்கள் படுகாயம்

யாழ்ப்பாணம் சாவகச்சேரி, பெருங்குளம் பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளும், முச்சக்கரவண்டியும் மோதியதிலேயே இவ் விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தில் 24 வயதுடைய நுணாவில் பகுதியை சேர்ந்த இளைஞரும் கைதடி நவபுரம் பகுதியை சேர்ந்த 18 வயதுடைய இளைஞரும் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## தேர்தல் கடமைகளுக்காக 1337 இ.போ.ச பஸ்கள்

நாளை 10ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தல் வாக்களிப்பிற்காக இலங்கை போக்குவரத்து சபை 1337 பஸ் களை தேர்தல் பணிகளுக்காக வழங்கியிருப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இந்த பஸ்கள் மூலம் தேர்தல் அதிகாரிகள் வாக்குபெட்டிகளை எடுத்துச்செல்வதற்கு பாதுகாப்பு பிரிவு பணிகளுக்காக இந்த பஸ்கள் பயன்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(த-1503)

## தச்சன்தோப்பு பகுதியில் கள்ளமண் ஏற்றிய 9 பேர் பொலிஸாரால் கைது

(சாவகச்சேரி)

நேற்று அதிகாலை 1 மணிமுதல் 4 மணிவரை சாவகச்சேரி பொலிஸார் தொடர்ச்சியான தேடுதலை மேற்கொண்ட போது கள்ள மண் ஏற்றிய 9 பேரை கைதுசெய்துள்ளனர்.

நேற்று அதிகாலை தச்சன் தோப்பு பகுதியில் மண் ஏற்றிவந்த லாறி வாகனத்தை மறித்த போது அதிலிருந்து பாய்ந்து தப்பிக்க முயன்ற இரு சந்தேக நபர்களை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்தனர்.

இதேபோன்று முகமாலை பகுதியில் இருந்து மணல் ஏற்றிவந்த லாரியை கைதடி பகுதியில் வைத்து மறித்த போது தப்பித்தோடிய 7பேரையும் சாவகச்சேரி பொலிஸார் கைது செய்து வழக்கு பதிவுசெய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவுள்ளனர்.

சாவகச்சேரி பிரதான பொலிஸ் பொறுப்பதிகாரி B.விக்கிரமசிங்க தலைமையில் பெரும் குற்றவியல் பிரிவு பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் A.விஜகோன் தலைமையில் உதவி பொலிஸ் பரிசோத கர் ஆர்.பிரதீப், மற்றும் பண்டார நட்ணாயக்கா செனவரத்தின பொலிஸ் சாரதி றங்க ஆகியோர் 4 மணிநேரம் தொடர்ச்சியான தேடு தலை மேற் கொண்டு குற்றவாளிகளை கைது செய்துள்ளனர். (ம)

**இரு சக்கர மோட்டார் வாகன திருத்துநர்கள் (மெக்கானிக்) தேவை**
யாழ்ப்பாணத்தில் உள்ள மோட்டார் வாகனம் திருத்தும் நிலையத்துக்கு திருத்துநர்கள் தேவையாக உள்ளனர்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:-
**0775087251, 0776041412**
(2703)

குருவே துணை
வாழ்க வையகம் வாழ்க வளமுடன்
உடல் உயிர் மனம்
தன் திறமையையும் வல்லமையையும் பெருக்கிக்கொள்ள
**மனவளக்கலை யோகா பயிற்சிகள்**
எளியமுறை உடற்பயிற்சிகள்

காயகல்ப்ப பயிற்சி

எளியமுறை தியானப் பயிற்சிகள்


10.02.2018 சனிக்கிழமை மாலை 05.00 மணிக்கு (மகளிர்க்கான பயிற்சிகளும்) நடைபெறுகின்றன.
அகத்தாய்வு 02
சனி மற்றும் ஞாயிறு தினங்களில் காலை 09.00-01.00 மணி வரை நடைபெறும்
யாழ்.அறிவுத் திருக்கோவிலில் தமிழ்நாடு மனவளக்கலைப் பேராசிரியர் ச.இந்திரா அவர்களால் நடத்தப்படுகின்றன.
அனைவரையும் பயிற்சிபெற்று பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்
**இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 2772**
(த-1531)

யாழ்.நகரில் இயங்கும் இர்ராஜேஸ்வரி மண்டபத்திற்கு வேலையாட்கள் தேவைப்படுவதனால் ஆண், பெண் இருபாலாரும் இணைத்துக் கொள்ளப்படுவர். ஆண்களிற்கு தங்குமிட வசதிகளும் செய்து கொடுக்கப்படும். விரும்புபவர்கள் நேரடியாக எமது அலுவலகத்திற்கு எதிர்வரும் 12, 13, 14ஆம் திகதிகளில் காலை 09 மணி முதல் 12 மணி வரை நேரில் சமுகமளிக்கவும். சம்பளம் நேரில் கதைத்து தீர்மானிக்கப்படும். பின்வரும் வெற்றிடங்களிற்கு எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.
01.(Waiter)-உணவு விடுதி பணியாளர்
02.(Cleaning Staff)-கிளினிங் ஸ்ராப்
03.(Receptionist)-வரவேற்பாளர்
04.(Accounts clerk)-கணக்கீட்டு பணியாளர்
சமுகமளிக்க வேண்டிய எமது அலுவலக முகவரி:
**இராஜேஸ்வரி மண்டபம்**
**இல.132, பலாலி வீதி, கோண்டாவில் சந்தி, கோண்டாவில்**
(269C)

**தவறிவிட்டது**
பாடசாலை வீதி, ஆறுகால்மடத்தை வசிப்பிடமாகக் கொண்ட சி.கலாறூபன் 662271624 எனும் இலக்கமுடைய அடையாள அட்டையும் திருமதி கலாறூபன் கமலாதேவி 705193096V எனும் இலக்கமுடைய அடையாள அட்டை மற்றும் இரண்டு மோட்டார் வாகன ஆவணங்கள், வங்கி ஆவணங்கள் மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய றோஸ் நிற கைப்பை பருத்தித்துறை சூர்யா ஹொட்டலுக்கும் நகரப்பகுதிக்கும் இடையில் 02.02.2018 வெள்ளிக்கிழமை 11 மணியளவில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
சன்மானம் வழங்கப்படும்
**தொடர்புகளுக்கு:-0776020622**
(2667)

## 11 தமிழர்கள் கடத்தல் விவகாரம்

# விசாரணைகளை விலக்குமாறு தசநாயக்க மன்றில் கோரிக்கை



(கொழும்பு)

**11 தமிழர்களை கடத்தி காணாமல் ஆக்கிய சம்பவம் தொடர்பில் முன்னாள் கடற்படைப் பேச்சாளர் கொமடோர் டீ.கே.பி.தசநாயக்க உள்ளிட்ட ஆறு பேருக்கு எதிரான விசாரணைகளை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்து விலக்கிக் கொள்ளுமாறு நீதிமன்றில் கோரப்பட்டுள்ளது.**

இந்த வழக்கு கொழும்பு-கோட்டை நீதவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் நேற்று எடுக்கப்பட்ட போதே பிரதிவாதி சார்பில் முன்னிலையான சட்டத்தரணி இந்த கோரிக்கையை முன்வைத்தார்.

இந்தக் கோரிக்கைக்கு சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணியால் கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டிருந்த நிலையில், அதன்படி பிரதிவாதி சட்டத்தரணியின் கோரிக்கை தொடர்பில் எதிர்வரும் 22ஆம் திகதி உத்தரவு பிறப்பிக்கப்படும் என கோட்டை நீதவான் அறிவித்துள்ளார். (இ-7)

## பிணைமுறி மோசடி தொடர்பாக ஜனாதிபதிக்கு எதிராக முறைப்பாடு



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவில் முறை பாடு செய்யவுள்ளதாக நுகர் வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பு தெரிவித்துள்ளது.

குறித்த முறைப்பாட்டை இன்று மேற்கொள்ளவுள் ளதாக அந்த அமைப்பு தெரி வித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி விவகாரம் தொடர்பில் இலங்கைப் பிரஜை அல் லாத நபர் ஒருவரை மத்திய வங்கியின் ஆளுநராக தெரிவு செய்தமை மற்றும் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றுச் சூழல் அமைச்சர் என்ற ரீதி யில் குறித்த அமைச்சில் நடைபெறும் மோசடி மற்றும் ஊழல் தொடர்பாகவே ஜனாதிபதிக்கு எதிராக முறைபாடு செய்யவுள்ளதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

அத்துடன், மகாவலி அபிவிருத்தி அமைச்சின் பிரதி அமைச்சர் அநுராத ஜயரத்ன, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் முன்னாள் தலைவர், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிரதி பணிப்பாளருக்கு எதிராகவும் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைபாடு செய்யப்படவுள்ள தாக நுகர்வோர் உரிமைகள் பாதுகாக்கும் அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

## வருமானம் இல்லை

# மன்னாரிலிருந்து தமிழ்க் குடும்பம் தனுஷ்கோடிக்கு இடப்பெயர்வு



(சென்னை)

பலத்த பாதுகாப்பையும் மீறி தனுஷ்கோடிக்கு இலங்கையிலிருந்து சென்ற குடும்பத்தினரிடம் பாதுகாப்பு தரப்பினர் தீவிர விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

நேற்று வியாழக்கிழமை அதிகாலை தனுஷ்கோடி அரிச்சல் முனைக்கடல் பகுதியில் பலத்த பாதுகாப்பையும் மீறி இலங்கையின் மன்னார் பகுதியிலிருந்து கண்ணாடியிலைப்படகில் வந்து இறங்கிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 9 மாத கர்ப்பிணித்தாய் உட்பட நான்கு பேரிடம் உளவுத்துறை ,கியூ பிரிவு சுங்கத்துறை மற்றும் பொலிஸார் ஆகியோர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

விசாரணையில் மன்னார் பகுதியைச்சேர்ந்த நிரோசன் கூலி வேலை செய்து வருவதாகவும் வருமானம் இன்றி கஷ்டத்தில் இருப்பதால் தனது மனைவி மேரிஸ்டெல்லா (வயது-23) ஒன்பது மாத கர்ப்பிணியுடன் தனது ஐந்து வயது பெண் குழந்தை ஜாஸ்மின் மற்றும் சகோதரர் ரீகன் உள்ளிட்ட நால்வர் மன்னார் பகுதியில் கண்ணாடியிலைப்படகு ஒன்றில் 60 ஆயிரம் ரூபாய் கொடுத்து தனுஷ்கோடிக்கு நேற்று அதிகாலை வந்ததாக தெரிவித்தார்.

இவர்களிடம் விசாரணை நடத்திய பொலிஸார் கடவுச்சீட்டு இன்றி இந்தியாவுக்குள் நுழைந்ததாக வழக்கு பதிவு செய்து கைது செய்துள்ளனர் .

கைது செய்யப்பட்டவர்களை இராமேஸ்வரம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## தேர்தல் கடமைகளிலிருந்து விலகிருக்கும் அதிகாரிகளுக்கு சிறைத் தண்டனை

# தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தேர்தல் கடமைகளிலிருந்து விலகியிருக்கும் அரச அதிகாரிகளுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல்கள் சட்டத்தின் கீழ் 3 வருடங்கள் சிறைத் தண்டனையும், ஒரு இலட்ச ரூபாய் வரையான அபராதப் பணமும் விதிப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அரசியலமைப்பினால் கிடைத்துள்ள அதிகாரத்திற்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என தேர்தல்கள் திணைக்களத்தின் மேலதிக ஆணையாளர் எம்.எம். மொஹமட் தெரிவித்துள்ளார்.

எனவே, அரச அதிகாரிகள் தேர்தல் கடமைகளில் ஈடுபடுவது அவசியம் எனவும், அவ்வாறு தேர்தல் கடமைகளில் ஈடுபடாத அரச அதிகாரிகளுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தேர்தல் கடமைகள் மற்றும் வாக்கு எண்ணும் நிலையங்களுக்கு 1,75000 அதிகாரிகளை ஈடுபடுத்த திட்டமிட்டுள்ள தாகவும் கொழும்பிலுள்ள அதிகாரிகளின் ஒரு தொகுதியினர் நேற்று நாட்டின் சகல மாவட்டங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## வாய்ப்புற்றுநோய் காரணமாக நாளொன்றுக்கு 3 மரணங்கள்

(கொழும்பு)

வாய்ப் புற்றுநோய் காரணமாக இலங்கையில் நாளொன்றுக்கு மூன்று பேர் மரணிப்பதாக வாய்ப்புற்றுநோய் மற்றும் முகம் தொடர்பான விசேட வைத்திய சங்கம் தகவல் வெளியிட்டுள்ளது.

வருடமொன்றில் வாய்ப் புற்றுநோய் தாக்கத்துக்கு உள்ளான 2 ஆயிரத்து 500 புதிய நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக அந்தச் சங்கத்தின் தலைவரான பற்சிகிச்சை நிபுணர் ஆனந்த ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டு காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இளைஞர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் இந்த நோய் தாக்கத்துக்கு அதிகமாக உட்படுகின்றனர் என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், புகையிலை மற்றும் புகைத்தலை புறக்கணித்து, வாய்ப்புற்று நோயிலிருந்து விடுபடுவோம் என்பதே இவ்வாண்டின் தொனிப் பொருளாக அமைந்துள்ளது என பற் சிகிச்சை நிபுணர் ஆனந்த ரத்நாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## டாக்கா டெஸ்ட்

# பந்துவீச்சாளர்கள் ஆதிக்கம்



சட்டஹொங்கில்மாறிமாறி ஓட்ட மழை பொழிந்த இலங்கை, பங்களாதேஷ் அணிகள் டாக்காவில் ஓட்டங்களுக்கு பதிலாக இம்முறை விக்கெட்டுக்களை பறிகொடுக்கின்றன.

பங்களாதேசுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி, அங்கு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

சிட்டஹொங்கில் நடந்த முதல் டெஸ்ட் சமனிலையான நிலையில்,

இரண்டாவது டெஸ்ட் டாக்காவில் நேற்று ஆரம்பமானது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பாட்டம் செய்த இலங்கை அணிக்கு கருணாரத்ன (3) ஏமாற்றினார். தனஞ்செய டி சில்வா (19), குணதிலக (13) நிலைக்கவில்லை. அணித் தலைவர் சண்டிமல் 'டக்-அவுட்' ஆனார். பொறுப்பாக ஆடிய குசல் மெண்டிஸ் (68) அரைசதம் கடந்தார். டிக்வெல (1) சொற்ப ஓட்டத்தில் ஆட்டமிழுந்தார். டில்ருவன் பெரேரா (31), அகில தனஞ்செய (20) ஓரளவு ஆறுதல் தந்தனர். ஹெரத் (2) சோபிக்கவில்லை. நிதானமாக ஆடிய ரோஷன் சில்வா (56), தன்பங்கிற்கு அரைச் சதமடித்து கைகொடுத்தார்.

முதல் இன்னிங்சில் இலங்கை அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 222 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது. லக்மல் (4) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பில் அப்துர் ரசாக், தையுல் இஸ்லாம் தலா 4, முஸ்தபிசுர் ரஹ்மான் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

**லக்மல் அசத்தல்**

பின், முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த பங்களாதேஷ் அணிக்கு லக்மல் தொல்லை கொடுத்தார். இவரது 'வேகத்தில்' தமிம் இக்பால் (4), முஷ்பிகுர் ரஹிம் (1) ஆட்டமிழந்தனர். மொமினுல் ஹக் (0), 'ரன்-அவுட்' ஆனார். டில்ருவன் பந்தில் இம்ருல் கெய்ஸ் (19) வெளியேறினார்.

இந்நிலையில் நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தபோது, முதல் இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடி வரும் பங்களாதேஷ் 4 விக்கெட்டுக்களை இழந்து 56 ஓட்டங்கள் எடுத்து, 166 ஓட்டங்களால் பின்தங்கி இருந்தது.

லிட்டன் தாஸ் (24), மெஹிடி ஹசன் மிராஸ் (5) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பில் லக்மல் 2, பெரேரா ஒரு விக்கெட் கைப்பற்றினர்.

## ஐஸ் கிரிக்கெட்

# அப்ரிடியின் றோயல்ஸ் வெற்றி



சுவிட்சர்லாந்தில் நடக்கும் ஐஸ் கிரிக்கெட் தொடரின் முதல் போட்டியில், அப்ரிடி தலைமையிலான றோயல்ஸ் அணி, சேவாக்தலைமையிலான பேலஸ் டயமன்ட்ஸ் அணியை 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி கொண்டது.

சுவிட்சர்லாந்தில் உள்ள அல்ப்ஸ் மலைப்பகுதியில், செயின்ட் மொரிட்ஸ் ஏரி உள்ளது. கடல் மட்டத்தில் இருந்து சுமார் 5910 அடி உயரத்தில் உள்ள இந்த ஏரி, ஆண்டின் 6 மாதங்கள் வரை உறைந்தநிலையில் இருக்கும்.

அதன்போது இங்கு ஐஸ் ஹொக்கி, குதிரைப் பந்தயம் உள்ளிட்ட போட்டிகள் நடத்தப்படும். முதன்முறையாக ஐஸ் கிரிக்கெட் தொடர் நடத்த முடிவு செய்யப்பட்டது.

**சேவாக் விளாசல**

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதல் போட்டி நேற்று நடந்தது.

இதில் சேவாக் தலைமையிலான பேலஸ் டயமண்ட்ஸ் அணி, அப்ரிடி வழிநடத்தும் றோயல்ஸ் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய டயமன்ட்ஸ் அணிக்கு அணித்தலைவர் சேவாக், அதிரடி ஆரம்பம் கொடுத்தார். இவர், 31 பந்துகளில் 5 சிக்ஸர், 4 பவுண்டரி உட்பட 62 ஓட்டங்கள் எடுத்து கைகொடுத்தார். டில்ஷான் (8), மஹேல ஜெயவர்த்தன (7), மைக்கல் ஹசி (1) சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். அன்ட்ரூ சைமண்ட்ஸ் (40) ஓரளவு கைகொடுத்தார். மொஹமட் கைப் (19), ஜோகிந்தர் சர்மா (18) நிலைக்கவில்லை.

20 ஓவர்கள் நிறைவில் பேலஸ் டயமன்ட்ஸ் அணி, 9 விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் றோயல்ஸ் அணி சார்பில் அப்துல் ரசாக் 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

**ஷா அபாரம்**

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய றோயல்ஸ் அணிக்கு மட் பிரையர் (8) ஏமாற்றினார். கிரேம் ஸ்மித் (23), கலிஸ் (36) ஓரளவு கைகொடுத்தனர். அணித் தலைவர் அப்ரிடி, 'டக்-அவுட்' ஆனார். அபாரமாக ஆடிய ஒவைஸ் ஷா, 34 பந்துகளில் 74 ஓட்டங்கள் (7 சிக்ஸர், 5 பவுண்டரி) எடுத்து அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார்.

றோயல்ஸ் அணி, 15.2 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 166 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. ஒவைஸ் ஷா (74), எலியட் (21) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இதன்மூலம் றோயல்ஸ் அணி, 1-0 என முன்னிலை பெற்றது. இரண்டாவது போட்டி இலங்கை நேரப்படி இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகிறது.

# மரண அறிவித்தல்

**திருமதி**

# சிவக்கொழுந்து தாமோதரம்பிள்ளை



தோற்றம்: 26.07.1927

மறைவு: 08.02.2018

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவக்கொழுந்து தாமோதரம்பிள்ளை நேற்று *(08.02.2018)* காலமானார்.

அன்னார் அமரர்களான விஸ்வநாதன் - சிவகாமி தம்பதியரின் அன்பு மகளும் அமரர்களான செல்லப்பா, இராமலிங்கம், தம்பு ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமரர் தாமோதரம்பிள்ளையின் அன்பு மனைவியும் பாலகிருஸ்ணன் (பிரான்ஸ்), தங்கராசா, நாகராசா, கோகுலமணி, செல்வராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் தனலட்சுமி (பிரான்ஸ்), விமலாதேவி, சுசிலா, சிவசுந்தரம், தேன்மொழி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் செந்தில்குமரன் (பிரான்ஸ்), அனுலா (பிரான்ஸ்), ரஜனி (ஜேர்மனி), பராபரன் (ஜேர்மனி), முகுந்தன் (டோஹா), சுவிதா, கோகுலன் (டோஹா), சிவரூபன் (லண்டன்), துவாரகா, சிவதர்ஷன், நிலானி (பிரான்ஸ்), நிருஷன் (பிரான்ஸ்), லதா, ஆனந்தகுமார், குமுதா (அமரர்), கண்ணதாசன், பிரதீபன், மதுரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் டனிஹா (பிரான்ஸ்), விதுஜன் (ஜேர்மனி), மிதுசன் (ஜேர்மனி), மிதேஸ், தக்சன்யா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று *(09.02.2018)* வெள்ளிக்கிழமை காலை *9.00* மணியளவில் பொன்னாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பொன்னாலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பொன்னாலை,
சுழிபுரம்.

தகவல்: குடும்பத்தினர்
077 469 4358

(2704)

# வித்தியா கொலை வழக்கு

## பொலிஸார் ஒருவரை அச்சுறுத்திய நபருக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா கொலை வழக்கில் முதலாவது சந்தேகநபராக குற்றஞ்சாட்டப்பட்டு ரயல் அட்பார் நீதிமன்றால் விடுவிக்கப்பட்ட பின்னர் பொலிஸார் ஒருவரை அச்சுறுத்திய வழக் கில் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க ப்பட்டுள்ள பூபாலசிங்கம் இந்திரகுமாரது விளக்கமறியல் எதிர்வ ரும் 21ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள் ளது.

குறித்த வழக்கானது நேற்றுமுன்தினம் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் நீதவான் ஏ.எம்.எம்.றியால் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே நீதவான் இவ் உத்தரவை பிறப்பித் தார்.

குறித்த வழக்கு தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து தெளி வான அறிக்கை கிடைக்கவில்லை என பொலிஸார் மன்றுக்கு தெரிவித்த னர். இதனையடுத்தே நீதவான் மேற்படி உத்தரவை பிறப்பித்தார்.

இதேவேளை குறித்த நபர், அம் மாண வியின் பாலியல் வல்லுறவு படுகொலை தொடர்பான வழக்கானது ஊர்காவற்றுறை நீதிமன்றில் இடம்பெறும்போது ஒருமுறை வழக்கு விசாரனை நிறைவடைந்து செல் லும் போது பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரது பெயரினை கூறி அவருக்கு அச் சுறுத்தல் விடுத்திருந்தார்.

இதனையடுத்தே குறித்த நபருக்கு எதி ராக சாட்சிகளை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் ஊர்காவற்றுறை நீதிமன்றில் பிறிதொரு வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த நபர் வித்தியா கொலை வழக்கில் நிரபராதியாக விடுதலை செய்யப்பட்ட போதும் பொலிஸாரை அச்சுறு த்திய வழக்கிலேயே தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். (2-4)



பிரான்ஸில் வசிக்கும் தில்லையம்பலம் ஜெகநாதனின் தாயார் தில்லையம்பலம் செல்லம்மாவின் நினைவாக பல இலட்சம் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை பணிப்பாளரிடம் அண்மையில் கையளித்ததைப் படத்தில் காணலாம்.

# பிரிகேடியர் பிரியங்கவின் விடயத்தில் ஜனாதிபதி மைத்திரியின் செயற்பாடு பேரதிர்ச்சி

## கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து தெரிவிப்பு



(கொழும்பு)

புலம்பெயர் தமிழர்களுக்கு கொடூர அச்சுறுத்தல் விடுத்த லண்டனிலுள்ள இலங்கைத்தூதரக பாதுகாப்பு ஆலோசகர் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவை மீண்டும் பணியாற்ற அனுமதித்த ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேனவின் செயற்பாடு, பேரதிர்ச்சியாக அமைந்துள்ளதென இலங் கையின் முன்னணி மனித உரிமை செயற் பாட்டாளர்களில் ஒருவரும் மாற்றுக்கொள் கைகளுக்கான ஆய்வுநிலையத்தின் நிறை வேற்றுப் பணிப்பாளருமான கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்தார்.

இலங்கை சுதந்திர தினத்தின் போது லண்டனிலுள்ள இலங்கைத்தூதரகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்த புலம்பெயர் தமிழர்களை நோக்கி கழுத்தை அறுப்பதைப் போன்ற சைகையை, தூதரகத்தின் பாதுகா ப்பு ஆலோசகராக செயற்படும் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ விடுத்திருந்தார்.

இதனை சமூக ஊடகத்தின் மூலமாக மனித உரிமை ஆர்வலர்கள், ஜனநாயக செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவிய லாளர்கள் கண்டித்து விமர்சித்ததையடுத்து பாதுகாப்பு ஆலோசகர் பதவியிலிருந்து பிரிகேடியர் பிரியங்க இடைநிறுத்தப்படுவ தாக வெளிவிவகார அமைச்சு நேற்று முன்தினம் விடுத்த அறிக்கையில் தெரி வித்திருந்தது.

எனினும், பிரிகேடியர் பிரியங்க லண் டனிலுள்ள இலங்கைத்தூதரகத்தில் பாது காப்பு ஆலோசகர் பணியை மீளப் பொறுப் பேற்பதற்கான அறிவுறுத்தல்களை ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன வழங்கியுள்ள தாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து நேற்று முன்தினம் காலை தெரி வித்திருந்தார். இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்த கலாநிதி பாக்கியசோதி சர வணமுத்து ஜனாதிபதியின் செயற்பாடு அதிர்ச்சியளிப்பதாக தெரிவித்தார்.

படைவீரர்கள் என்பவர்கள் மிகுந்த பொறுப்புணர்வுடன் செயற்படக் கடமைப்பட் டுள்ளவர்கள். அந்தவகையில் ஆர்ப்பாட்டக் காரர்களை நோக்கி கழுத்தை அறுப்பதைப் போன்ற சைகையை வெளிப்படுத்தி கொலை அச்சுறுத்தல் விடுத்தமைக்காக, உடனடியாக பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ பாது காப்பு ஆலோசகர் பதவியில் இருந்து இடை நிறுத்தப்பட்டு அவருக்கு எதிராக விசார ணைகளை முன்னெடுப்பது அவசியமாகும் என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-7)

# பிரியங்க பணி இடைநிறுத்தம் செய்யப்படவில்லை

## குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடைபெறுகிறது

(கொழும்பு)

பிரிட்டனுக்கான இலங்கை உயர்ஸ்தா னிகராலயத்தில் பாதுகாப்பு ஆலோசகராக கடமையாற்றி வரும் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவின் பதக்கங்கள் அகற்றப்பட வில்லை என தெரிவிக்கப்படுகிறது.

படைவீரர்களின் திறமைகளுக்கு அங் கீகாரமாக பதக்கங்கள், நட்சத்திரங்கள் வழங்கப்படுகின்றன.

அவ்வாறு பிரிகேடியர் பிரியங்கவிற்கு வழங்கப்பட்ட பதக்கங்கள், நட்சத்திரங்கள் அகற்றப்பட்டுள்ளதாக வெளியாகியிருந்த தகவல்கள் பொய்யானவை என செய்தி வெளியிட்டுள்ளது.

பிரிகேடியர் பிரியங்கவின் பணி இடை நிறுத்தப்படவில்லை எனவும், குற்றச்சாட் டுக்கள் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இலங்கையின் சுதந்திர தின நிகழ்வு லண்டனில் நடைபெற்ற போது புலம்பெயர் தமிழர்கள் எதிர்ப்பு போராட்ட மொன்றை நடத்தியிருந்தனர்.

இதன் போது கழுத்தை அறுப்பதாக பிரிகேடியர் பிரியங்க சைகை மூலம் போராட்டக்காரர்களை எச்சரித்திருந் தார்.

இந்த குற்றச்சாட்டு காரணமாக தற்காலிக அடிப்படையில் பிரியங்கவின் பணி இடை நிறுத்தப்பட்டிருந்தது.

எனினும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவிற்கு அமைய பணி இடைநிறுத்தம் இரத்து செய்யப்பட்டு கடமை யில் இருக்கும் போதே குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பிரிகேடியர் பிரியங்கவிடம் வாக்குமூலமொன்று பெற்றுக் கொள்ளப் பட்டுள்ளதாகவும், குற்றச்சாட்டு குறித்து விசாரணைகளை இராணுவம் மட்டுமே செய்ய வேண்டுமென வெளிவிவகார அமை ச்சு கோரினால் விசாரணைகள் நடத்தத் தயார் என இராணுவப் பேச்சாளர் தெரி வித்துள்ளார். (2-7)

# தேர்தல் பிரசார சூனிய காலப்பகுதியில் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும்

(கொழும்பு)

தேர்தல் பிரசார சூனிய காலப்பகுதியில் சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்து மாறு சகல பொலிஸ் நிலையங்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.


உள்ளூராட்சி தேர்தலுக்கான பிரசார பணிகள் நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடைந்துள்ளன.

இதனையடுத்து தேர்தல் வாக்குப் பதிவு இடம்பெறும் வரையிலான காலப்பகுதி தேர்தல் பிரசார சூனியப் பகுதியாகும். இக்காலப் பகுதியில் தேர்தல் சட்டங்களை மீறுபவர்களுக்கு எதிராக தராதரம் பாராது கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முதல் தேர்தல் பாதுகாப்பு முன் னேற்பாடுகளில் 4 ஆயிரம் விசேட அதிரடிப் படையினர் அடங்கலாக 65,758 பொலி ஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுவதாக குறிப்பிட்டுள்ளார். தேவை ஏற்பட்டால் கடமையில் ஈடுபடுத்துவதற்கென சகல மடக்கும் பொலிஸாரும் இராணுவத்தினரும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (2-7)



யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு நேற்று முன்தினம் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்ற போது...



# நல்லூரிலிருந்து திருக்கேதீஸ்வரம் வரை திருத்தல பாதயாத்திரை நேற்று ஆரம்பம்





(படங்கள்:-ஐ.சிவசாந்தன்.பொ.சோபிகா)





(யாழ்ப்பாணம்)

மகா சிவராத்திரியை முன்னிட்டு நல்லூர்க் கந்தன் ஆலயத்திலிருந்து திருக்கேதீஸ்வரம் ஆலயம் நோக்கிய திருதல பாதயாத்திரை நேற்றுக்காலை ஆரம்பமானது.

உலக சைவத்திருச் சபையின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த பாதயாத்திரை குழுத் தலைவர் வேல்சுவாமி தலைமையில் சிவலிங்கம் தாங்கிய ஊர்தி சகிதம் நேற்று முன்தினம் காலை செல்லச் சந்நிதி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகியது.

நேற்று முன்தினம் இரவு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை வந்தடைந்தது.

நல்லூரிலிருந்து நேற்றுக் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகிய இப்பாத யாத்திரை செம்மணி, நாவற்குழி, தனங்கிளப்பு, கேரதீவு, பூநகரி, பல்லவராயன்கட்டு, முழங்காவில், வெள்ளாங்குளம், மூன்றாம்பிட்டி, இலுப்பக்கடவை, ஆத்திமோட்டை, புதுக்குளம், கள்ளியடி, பள்ளமடு, பாப்பாமோட்டை, மாணிக்கத்திடல், ஊடாக எதிர்வரும் 13 ஆம் திகதி திருக்கேதீஸ்வரத்தை சென்றடையும்.

இப்பாதயாத்திரைக்காக பாதுகாப்பு ஒழுங்கை இலங்கை முதலுதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபையினர் மேற்கொண்டுள்ளனர். (இ-9)

# பருத்தித்துறை-கீரிமலை பேருந்துச்சேவை எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும்

## இ.போ.ச.அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை - கீரிமலை பேருந்து சேவை எதிர்வரும் 12 ஆம் திகதியில் இருந்து ஆரம்பிக்கப்படும் என இலங்கை போக்குவரத்து சபை அறிவித்துள்ளது.

29 வருடங்களின் பின்னர் பருத்தித்துறை - பொன்னாலை வீதி அண்மையில் இராணுவத்தினரால் திறந்து விடப்பட்டுள்ளது. இவ் வீதி வழியே பேருந்து சேவை மாத்திரம் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் இ.போ. சபையால் குறித்த வீதி ஊடாக செல்லும் 763 இலக்க பேருந்தின் நேர அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் குறித்த பேருந்து சேவை பருத்தித்துறையில் இருந்து காலை 06.45 மணிக்கும், முற்பகல் 11.00 மணிக்கும், பிற்பகல் 03.15 மணிக்கும் இடம்பெறும், அதேவேளை கீரிமலையில் இருந்து குறித்த பேருந்து சேவை காலை .08.30 மணிக்கும் பிற்பகல் 01.00 மணிக்கும் பிற்பகல் 05.00 மணிக்கும் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பேருந்து சேவையானது பருத்தித்துறை - வல்வெட்டித்துறை - ஊரிக்காடு - தொண்டைமனாறு -வளலாய் - பலாலி - மயிலிட்டி - காங்கேசன்துறை - மாவிட்டபுரம் - கீரிமலை வரை இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-9)

# கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலயச் சூழலில் நேற்று முன்தினம் புதன் கிழமை கணபதிப்பிள்ளை குணபூபதி என்பவருடைய (433300238-V) தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரி பத்திரிகை காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். (இ





இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்டத்திலுள்ள இராணுவத்தினரால் நேற்று முன்தினம் இரத்த தானம் வழங்கப்பட்டது. பாதுகாப்புப் படைகளின் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி தர்சன கெட்டியாராட்சியின் உத்தரவுக்கமைய இராணுவத்தின் 51 மற்றும் 52 ஆவது படைப்பிரிவை சேர்ந்த 250 இராணுவத்தினர் தத்தமது பிரிவுகளில் இரத்த தானத்தை வழங்கியிருந்தனர். (இ-9)

# கமத்தொழில் காணி இடாப்பு பொதுமக்கள் பார்வைக்காக

(யாழ்ப்பாணம்)

உடுவில் கமநல சேவைகள் நிலையப்பிரிவில் அமைந்துள்ள சுன்னாகம் மேற்கு ஜே-199 மற்றும் சங்குவேலி ஜே-187 ஆகிய பிரிவுகளின் வயற்காணிப் பதிவேடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

எனவே இப்பிரிவினைச் சேர்ந்த வயற்காணியினை உடைய விவசாயிகள் தமது காணி தொடர்பான விபரங்களை எதிர்வரும் 14.02. 2018 முதல் 13.03.2018 வரை காலை 9 .0()-மலை- 4.00 வரையான காலப்பகுதியில் பார்வையிடலாம் எனவும் உரிமை மற்றும் எதிர்ப்புக்களை 13.03.2018- 12.04.2018 வரையான காலப் பகுதியில் தெரியப்படுத்தலாம் எனவும் உடுவில் கமநல சேவைகள் நிலைய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (இ-7)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய ஆண்டிற்கான அங்கத்தவர் தெரிவும் எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரியின் விசாலாட்சி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இதில் சகல பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு கல்லூரியின் அதிபர் அறிவித்துள்ளார். (இ-7)

## கீரிமலை நகுலேஸ்வரம் ஆலய முன்றலில்

# சாலமன் பாப்பையா தலைமையில் சிவராத்திரியன்று சிறப்புப் பட்டிமன்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்திய அரசின் 69ஆவது குடியரசுத் தின நிகழ்வுகளின் தொடர்ச்சியாகவும் மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டும் பேராசிரியர் சாலமன் பாப்பையா நடுவராகப் பங்கேற்கும் மாபெரும் பட்டிமன்றம் எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு கீரிமலை நகுலேஸ்வரம் ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளது.

இதில் சமுதாய முன்னேற்றத்திற்கு பெரிதும் துணை செய்வது ''அறிவியலே!'' எனும் தலைப்பில் திருமதி பாரதி பாஸ்கர், தமிழருவி த.சிவகுமாரன், செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன் ஆகியோரும் "ஆன்மீகமே!'' எனும் தலைப்பில் ராஜா, பேராசிரியர் தி.வேல் நம்பி, ந.விஜயசுந்தரம் ஆகியோரும் வாதிடுவர். (இ-7)

# சுவரொட்டிகளை அகற்ற விசேட பொலிஸ் அணி

(கரணவாய்)

வாக்களிப்பு நிலையங்களை சூழ உள்ள பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ள கட்சிகளின் சுவரொட்டிகளை அகற்றுவதற்காக விசேட பொலிஸ் அணி ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

நாளை சனிக்கிழமை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் வாக்களிப்பு நிலையத்தை சூழவுள்ள பகுதிகளில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் அகற்றப்படாமை குறித்து பொலிஸாரிடம் கேட்ட போது பொலிஸார் இதற்காக ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதனால் சுவரொட்டிகள், பதாகைகள் விரைவில் அகற்றப்படும் எனத் தெரிவித்தனர். (இ-60)

# வீதிகளில் வீசப்பட்ட துண்டுப் பிரசுரங்கள்

(கரணவாய்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பிரசாரப் பணிகள் நேற்று முன்தினம் புதன்கிழமை நள்ளிரவுடன் நிறைவடைந்ததையடுத்து வீதிகள் எங்கும் கட்சிகளின் துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டுள்ளன. வடமராட்சியின் அநேக இடங்களில் ஒழுங்கைகள், வீதிகளில் இவை வீசப்பட்டு காணப்படுகின்றன. நேற்று முன்தினம் புதன்கிழமை நள்ளிரவுக்குப் பின்னர் எவ்வித பிரசாரமும் மேற்கொள்ள முடியாது எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-60)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை
## ஏலவிற்பனை அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்குரிய பின்வரும் பாவித்த பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

காலம் : 12.02.2018 திங்கட்கிழமை காலை 10.00 மணி

இடம் : தலைமை அலுவலகம்

பொருட்கள் விபரம்

இலத்திரனியல் பொருட்கள், ரைப்பிங் றிபன், றோனியா மை, வாகன ரயர்கள், பற்றறிகள், உலோகப் பொருட்கள், மரத் தளபாடங்கள்.

நிபந்தனைகள் :

01.ஏலதாரராகக் கலந்து கொள்பவர் ரூபா 100.00 (NBT தவிர) மீளளிக்கப்படாத வைப்புப் பணமாகச் செலுத்த வேண்டும்.

02.சித்தியடைந்த ஏலதாரர் அன்றைய தினமே ஒப்புக்கொண்ட ஏலத் தொகையின் முழுத் தொகையினையும் செலுத்திப் பொருட்களை அலுவலகத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.

03.மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் நேரில் பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி இலக்கம் 021 224 0017

தி.சுதர்சன்,
செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம். (சி-1529)

## சாவகச்சேரி பிரதேசசபை

### 23.02.2018 முதல் 31.12.2018 வரை மரக்கறிச் சந்தைகள், இறைச்சிக் கடைகள் என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான பகிரங்க மீள் ஏல அறிவித்தல்-2018

ஏலத்தில் பங்குபெறவிரும்புவோர் 09.02.2018 வெள்ளிக்கிழமை தொடக்கம் 22.02.2018 வியாழக்கிழமை (மு.ப.10.00) வரையான காலப்பகுதியில் சாவகச்சேரி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் வைப்புப் பணத்தினைச் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளவும்.

இடம்:- சாவகச்சேரி பிரதேசசபை தலைமைப் பணிமனை.

காலம்:- 22.02.2018 வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணி.

ஏலஅறிவித்தல் அட்டவணை

| இல | குத்தகை விபரம் | ஆரம்ப கேள்வி தொகை (VAT,NBT தவிர) | வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) |
|---|---|---|---|
| 01 | கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 790.651.00 | 7.900.00 |
| 02 | கொடிகாமம் சந்தை கோழி இறைச்சிக்கடை | 1.078.328.00 | 10.800.00 |
| 03 | வரணி பொதுச்சந்தை | 96.763.00 | 1.000.00 |
| 04 | வரணி இயற்றாலை பொதுச்சந்தை | 6.659.00 | 500.00 |
| 05 | கைதடி மாட்டிறைச்சிக்கடை | 161.274.00 | 1.600.00 |
| 06 | கைதடி பொதுச்சந்தை | 15.348.00 | 500.00 |
| 07 | மிருசுவில் மாட்டிறைச்சிக்கடை | 276.133.00 | 2.800.00 |
| 08 | மிருசுவில் கோழி இறைச்சிக்கடை | 52.378.00 | 500.00 |
| 09 | எழுதுமட்டுவாழ் கோழி இறைச்சிக்கடை | 37.611.00 | 500.00 |
| 10 | மிருசுவில் பொதுச்சந்தை | 4.274.00 | 500.00 |
| 11 | எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தை | 4.616.00 | 500.00 |
| 12 | நாவற்குழி பொதுச்சந்தை | 2.821.00 | 500.00 |

நிபந்தனைகள்:

1.கேள்விகோர விரும்புவோர் கோரிக்கைக் கடிதமும், ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் தேசிய அடையாள அட்டை பிரதியினையும் சமர்ப்பிக்க வேண்டும்.

2.இறைச்சிக் கடைகளுக்கு சபையால் விதிக்கப்படும் மாத வாடகை கேள்வித் தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.

3.சந்தை வளவில் உள்ள கடைகளுக்கு தெரிவுசெய்யப்படும் குத்தகைகாரர் எவ்வித வரி அறவீடுகளையும் மேற்கொள்ள முடியாது.

4.கால்நடைகள் சுகாதார பரிசோதகரின் அனுமதியுடன் கொல்களத்தில் வெட்டப்பட்டு இறைச்சிக்கு கொண்டுவரப்படல் வேண்டும். அத்துடன் சபையால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

5.தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் 1/3 பகுதியை முற்பணமாக செலுத்த வேண்டும். மிகுதித் தொகையினை பிரதேச சபையினால் வழங்கப்படும் அறிவுறுத்தலுக்கு ஏற்ப செலுத்துதல் வேண்டும்.

6.கேள்விகளை தகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் செயலாளருக்கு உண்டு.

7.மேலதிக விபரங்களை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

செயலாளர்,
சாவகச்சேரி பிரதேசசபை,
கொடிகாமம்.
09.02.2018 (சி-1528)

## இயலாமை மீதான கொள்கை- வட மாகாணம்-2018
## Policy on Disability- Northern Province-2018

வடமாகாண மாற்றுத்திறனாளிகளுக்கான அமைப்புக்களின் ஒன்றியம் (NPCODA) வடமாகாணம் கௌரவ சமூக சேவைகள் அமைச்சர் மற்றும் மாகாண சமூக சேவைகள் பணிப்பாளர் ஆகியோரின் அனுமதி பெற்று (World Vision Lanka) நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் வடமாகாணத்திற்கான இயலாமை மீதான கொள்கை ஒன்றை உருவாக்கி வடமாகாண சபைக்கு கையளிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

இக்கொள்கையில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் தொடர்பாக சமூக ஆர்வலர்கள், நிறுவனங்கள், பொதுமக்கள் போன்றோரிடமிருந்து ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன.

ஆலோசனைகளை (npcoda2013@gmail.com) என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது (NPCODA) இல. 126, ஏ-9 வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி எனும் அஞ்சல் முகவரிக்கு எதிர்வரும் 28.02.2018 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு தயவாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

தொலைபேசி அல்லது வேறு வகையிலான ஆலோசனைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

தொடர்புகளுக்கு:-
வெ.சுப்பிரமணியம்
தலைவர்
(NPCODA)
கொள்கை உருவாக்கல் தொழில்நுட்ப செயற்பாட்டுக் குழு.

(2681)


## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா:26<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: B/8201 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 46 செவ் 2 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: G/8203 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 41<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:O/L/<br>அவுஸ்திரேலியா PR<br>தொ.இ: B/8202 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா:செவ் 8 இல்<br>தகைமை/தொழில்:BScIT<br>தொ.இ: G/8208 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 57 செவ் 2 இல்<br>தகைமை/தொழில்:A/L/பிரான்ஸ் PR<br>தொ.இ: B/8204 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/8213 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 65சூரிசெவ் 1 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:NHDA/<br>அரசதொழில்<br>தொ.இ: B/8205 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 18செவ் 7 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L/LAB Asst<br>தொ.இ: G/8116 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# 9 ட்ரில்லியன் எங்கே?

## கண்ணாடி வீட்டிலிருந்து கல் எறிய வேண்டாம் அமைச்சர்களுக்கு ஜனாதிபதி கடும் எச்சரிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்தின் செயற்பாடும் அமைச்சுக்களின் நிலைப்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார். கண்ணாடி வீடுகளில் இருந்து கல் ஏறிய வேண்டாம் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கொழும்பு சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு எச்சரித்தார்.

கடந்த அரசாங்கத்தின் பொருளாதார முகாமைத்துவம் போன்று இன்றைய பொருளாதார முகாமைத்துவத்திலும் பலவீனங்கள் மற்றும் தவறுகள் உள்ளன. குறித்த இரண்டு தரப்பினருக்கும் மன்னிப்பு வழங்க முடியாத பல காரணங்கள் உள்ளன.

ஏற்படுத்தி கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டிற்கமைய கடந்த மூன்று வருடங்களுக்கும் பொருளாதார முகாமைத்துவத்தை நாங்கள் ஐக்கிய தேசிய கட்சிக்கே வழங்கியிருந்தோம்.

கடந்த அரசாங்கத்தின் பொருளாதார முகாமைத்துவத்தின் திறமை எந்தளவில் இருந்ததென்றால், 10 ட்ரில்லியனுக்கும் அதிகமான சொத்துக்கள் இருப்பதாக காட்டிய நிதி அமைச்சில், ஒரு ட்ரில்லியன் மாத்திரமே காணப்பட்டுள்ளது.

ஒரு ட்ரில்லியன் என்பது 10 கோடி. அப்படி என்றால் ஏனைய 9 ட்ரில்லியன் தொடர்பில் ஆவணங்களில் தகவல் இல்லை. இவ்வாறே கடந்த அரசாங்கத்தினர் பொருளாதார முகாமைத்துவத்தை மேற்கொண்டனர். அப்படி என்றால் ஆடை அணிந்து கொண்டு அந்த தரப்பினர் பொருளாதார முகாமைத்துவம் தொடர்பில் பேச முடியாது.

சில அமைச்சுக்கள் தற்போதும் ஒழுங்கான முறையில் செயற்படுவதில்லை. சில விடயங்களை நான் கடுமையாக எதிர்க்கின்றேன். ஒற்றுமையை காத்துக் கொள்ள வேண்டும் என்பதனாலும், அரசாங்கத்தை உடைக்க முடியாதென்பதனாலும் நான் மிகவும் பொறுமையாக இருக்கின்றேன்.

நான் சில மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும். அந்த மாற்றங்களை விரும்பவில்லை என்றால் உண்மைகளை நாட்டிற்கு கூற நேரிடும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## விளையாட்டு வீரர்களுக்கு அஞ்சலி




(கரணவாய்)

விபத்தில் உயிரிழந்த மைக்கல் விளையாட்டு வீரர்கள் நால்வரின் 31ஆம் நாள் நினைவஞ்சலி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்றது.

கடந்த 09.01.2018 அன்று கொக்காவில் பகுதியில் இடம் பெற்ற வாகன விபத்தில் பலி யான ச.ஜெயச்சந்திரன், ந.அருண், சி. கிருஸ்ண ரூபன், சி.சிந்துஜன் ஆகிய நால்வரின் உருவப்படங்கள் மைக்கல் மைதானத்தில் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில் விளையாட்டு வீரர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (இ-60)

## சிரியாவில் அமெ.கூட்டுப்படை தாக்குதல்

# 100 பேர் பலி!



(சிரியா)

சிரியாவில் கிளர்ச்சியாளர்களை குறிவைத்து அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படையினர் நடத்திய தாக்குதலில் சிரிய அரசு ஆதரவு படையை சேர்ந்த சுமார் 100 பேர் உயிரிழந்தனர்.

நேற்றுக்காலை குஷாம் பகுதியில் அமைந்துள்ள அமெரிக்கா கூட்டுப் படையின் முகாம்களை குறிவைத்து சுமார் 500 அரசு ஆதரவு படையினர் துப்பாக்கி, வெடிகுண்டு மற்றும் ஏவுகணை மூலம் தாக்குதல் நடத்தினர். இதையடுத்து அமெரிக்கா கூட்டுப் படையினர் பதில் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதில் சிரிய அரசு ஆதரவு படையை சேர்ந்த சுமார் 100 பேர் பலியானதாக அமெரிக்கா கூட்டுப் படையினர் தெரிவித்துள்ளனர். (இ-10)

## 100 வயது மூதாட்டிக்கு பணப்பரிசு வழங்கல்



(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 100 வயதைக் கடந்த மூதாட்டி ஒருவருக்கு 25,000 ரூபா பணப்பரிசும் 2000 ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்வதற்கான வவுச்சரும் வழங்கப்பட்டுள்ளன.

இலக்கணாவத்தை வல்வெட்டியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சின்னம்மா என்பவர் 100 வயது கடந்ததை பதிவுகள் மூலம் அறிந்த பிரதேச செயலக சமூக சேவைப் பகுதி அவருக்கான பணப்பரிசு மற்றும் வவுச்சரினை அவரது வீட்டிற்கு நேற்று முன்தினம் சென்று வழங்கினர்.

இதில் உதவிப் பிரதேச செயலர் எஸ்.ராஜீவ், சமூக சேவை உத்தியோகத்தர் வரத பாஸ்கரன், அப்பகுதி கிராம உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-60)


1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திருந.
கந்தையா நாகமணி
(ஓய்வுபெற்ற உடற்கல்வி விரிவுரையாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்)

மலர்வு: 1932-06-13 உதிர்வு: 2017-01-21

பார் போற்றும் உத்தமராய்
தரணியில் வந்துதித்த - எம்
அன்புச் செல்வமே
ஓராண்டு சென்ற
போதும் உம் நினைவுகள்
எப்போதும் எங்கள்
மனங்களில் கலந்திருக்கும்

குடும்பத்தினர்,
ஆலங்குழாய் வீதி,
சண்டிலிப்பாய்.

(3895)


## மதுபானசாலைகளுக்கு சனிக்கிழமை பூட்டு

(கொழும்பு)

நாளை 10ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு நாட்டிலுள்ள அனைத்து மதுபானசாலைகளும் மூடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைய குறித்த முடிவினை எடுத்ததாக கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான அறிவித்தலானது சகல மதுபான நிலையங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாக கலால் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-7)

## இராசி பலன்

**09.02.2018**

தை 27, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.36 மணிக்கு
நவமி பிற்பகல் 3.59 மணிவரை
அனுசம் முன்னிரவு 8.15 மணிவரை
சுபநேரம் 6.35-8.05 மணிவரை
இராகுகாலம் 11.05-12.35 மணிவரை

கிரகநிலை: சுக்., புத — ராகு — சூரி., கேது. — சனி — செவ., சந் — குரு.

சந்திராஷ்டமம்: பரணி, கார்த்திகை

**மேடம்:** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், தேவையற்ற பகைகள் ஏற்படலாம், பிரயாணத்தின் போது விழிப்புணர்வு அவசியம், சோர்வான நாள்.

**இடபம்:** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், தனவரவு திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்:** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் உண்டு, முயற்சிகள் கைகூடும்.

**கடகம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** நண்பர்கள் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**கன்னி:** செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**துலாம்:** தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், தொழிலில் ஆர்வத்துடன் செயற்படுவீர்கள், ரோக பயமுண்டு.

**விருச்சிகம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**தனுசு:** காரிய அலைச்சல்கள் ஏற்படும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**மகரம்:** புதிய பொருட் சேர்க்கையுண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன நன்மையுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**கும்பம்:** செய்தொழில் மேன்மையுண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், தன்னம்பிக்கை துளிர் விடும் நாள், போசன நன்மையுண்டு.

**மீனம்:** பயணங்களால் பலனுண்டு, பெரிய மனிதர்களின் தொடர்புகள் நன்மை தரும், எடுத்த காரியத்தில் முன்னேற்றம் உண்டு, ரோக பயமுண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

வளவன்


# தேர்தல் கடமையில் ஈடுபட 2 ஆயிரம் அரச அதிகாரிகள்

# 155 பேர் கொழும்பிலிருந்து அழைப்பு; ஏற்பாடுகள் பூர்த்தி

## வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(குருமன்காடு)

**வவுனியா மாவட்டத்தில் தேர்தல் கடமைகளில் 2 ஆயிரம் அரச அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் 155 பேர் கொழும்பில் இருந்து வரவழைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் விசேட அதிரடிப்படையினர், பொலிஸார் உள்ளடங்கலாக ஆயிரத்து 500 பேர் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் தெரிவித்துள்ளார்.**



வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபை தேர்தலுக்குரிய வாக்களிப்புக்கான அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தியாகியுள்ளன. வவுனியா நகரசபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, வவுனியா தெற்கு சிங்கள பிரதேசசபை, வெண்கல செட்டிகுளம் பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை என்பவற்றுக்கு 103 அங்கத்தவர்களை தெரிவு செய்வதற்கான தேர்தலுக்குரிய அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

தேர்தல் திணைக்களம், மாவட்ட செயலகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய திணைக்களங்களும் இணைந்து தேர்தல் கடமைக்கான ஏற்பாடுகளை செய்திருக்கின்றோம். இன்றைய தினம் வவுனியா மாவட்டத்தில் உள்ள 148 வாக்களிப்பு நிலையங்களுக்கும் வாக்குப் பெட்டிகள் கொண்டு செல்லப்படும். வாக்காளர்கள் சிரமமின்றி வாக்களிக்கக்கூடிய முறையில் இந்த 148 வாக்களிப்பு நிலையங்களிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தற்போதைய தேர்தல் சட்டத்தின் பிரகாரம் அந்த அந்த வாக்களிப்பு நிலையங்களில் தான் வாக்குகள் எண்ணுகின்ற நடவடிக்கைகள் இடம்பெறும். இருந்தாலும் நடைமுறை சார்ந்த பிரச்சினைகள் சிலவற்றை காரணமாகக் கொண்டு வவுனியா மாவட்டத்தில் 56 வாக்கு எண்ணும் நிலையங்களை ஏற்பாடு செய்துள்ளோம். அந்த நிலையங்களில் வாக்கு எண்ணப்பட்டு வட்டார முடிவுகள் மாவட்ட செயலகத்திற்கு அறிவிக்கப்பட்டு பின்னர் முடிவுகள் உத்தியோக பூர்வமாக மாவட்ட செயலகம் ஊடாக வெளியிடப்படும்.

இந்தத் தேர்தல் நடவடிக்கைக்காக வவுனியா மாவட்டத்தில் 2ஆயிரம் அரச அலுவலர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். கொழும்பில் இருந்து உதவி தேர்தல் அத்தாட்சி அலுவலர்கள் 155 பேரை அழைத்து இருக்கின்றோம். வவுனியா மாவட்டம் முழுவதும் 39 வலயங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வலயங்களுக்கும் ஒவ் வொரு உதவி தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களை நியமித்துள்ளோம். வாக்களிப்பு தொடர்பான தகவல்களை உடனுக்குடன் பெற்றுக் கொள்வதற்கும், அதனை கண்காணிப்பதற்கும் என 7 வலயங்களையும் உருவாக்கியிருக்கின்றோம். நாளை 10 ஆம் திகதி வாக்களிப்பு முடிந்தவுடனேயே வாக்குகள் எண்ணுகின்ற நடவடிக்கையும் இடம் பெறும்.

பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் என ஆயிரத்து 500 பேர் தேர்தல் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அசம்பாவிதங்கள் ஏதாவது ஏற்பட்டால் அதனை கட்டுப்படுத்த முப்படையினரும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-250)




## வர்த்தகர் ஒருவருக்கு ஆயுட்காப்புறுதி; காப்புறுதி நிறுவன முகவர் பணமோசடி

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் வர்த்தகருக்கு ஆயுட்காப்புறுதி செய்து தருவதாக தெரிவித்து பணத்தை முகவர் மோசடி செய்துள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் பிரபல்யமான புடைவைக்கடை வியாபாரம் மேற்கொண்டு வரும் வர்த்தகர் ஒருவரிடம் சென்ற பிரபல்யமான காப்புறுதி நிறுவனத்தின் முகவர் ஒருவர் வர்த்தகரின் குடும்பத்தினருக்கு ஆயுட்காப்புறுதி பெற்றுத் தருவதாகவும் பல அனுகூலங்களுடன் ஒரு தொகை வைப்பிலிடப்பட்டால் பில்லியன் கணக்கில் பெற முடியும் என்று தெரிவித்துள்ளார்.

இதையடுத்து குறித்த வர்த்தகரும் மனைவியின் பெயரில் ஆறு இலட்சம் ரூபாவிற்கு நிரந்தர வைப்பு காப்புறுதி ஒன்றினைப் பெற்றுக் கொண்டதுடன் இரண்டு இலட்சம் ரூபாவாக அப்பணத்தை மூன்றாகப் பிரித்து செலுத்தியுள்ளார்.

இதையடுத்து சில தினங்களின் பின்னர் வர்த்தகருக்கு காப்புறுதிப்புத்தகம் ஆங்கில மொழியில் வழங்கப்பட்டுள்ளது. காப்புறுதி முகவரின் நம்பிக்கையின் நிமித்தமும் வவுனியாவில் வசித்து வருவதையும்புரிந்து கொண்ட வர்த்தகர் புத்தகத்தை சந்தேகத்துடன் பார்வையிடாது வைத்துள்ளார்.

எனினும் சில காலமாகியதால் அப்பணத்தினை ஒரு தேவையின் நிமித்தம் திரும்பப் பெற்றுக் கொள்வதற்கு குறித்த காப்புறுதி நிறுவனத்திற்குச் சென்றுள்ளார். அப்போது தான் குறித்த் வர்த்தகருக்குத் தெரியவந்தது தன்னால் வழங்கப்பட்ட ஆறு இலட்சம் ரூபாவும் காப்புறுதி நிறுவனத்தில் வைப்புச் செய்யப்படவில்லை. தனக்கு வழங்கப்பட்ட காப்புறுதிப் புத்தகத்தில் அப்பணம் வைப்புச் செய்யப்படவில்லை என்று அங்கிருந்து முகவருடன் தொடர்பு கொண்டபோது அவர் அந்நிறுவனத்தில் பணியிலிருந்து விலகியதும் தெரிய வந்துள்ளது என குறித்த முகவரும் வழங்கிய பணத்திற்கு பொறுப்பேற்கவில்லை. நிறுவனமும் கைவிரித்துள்ளது.

இதையடுத்து குறித்த வர்த்தகர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றினை மேற் கொண்டார்.

வவுனியா வர்த்தகர் சங்கத்திலும் இதன் நிலைமைகளைத் தெரிவித்து சங்கத்தினூடாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்திருந்தார்.

இதற்கு குறித்த நிறுவனம் அங்கு பணியாற்றிய முகவருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை மேற்கொள்வதுடன் தக்க பதிலை பெற்றுத் தருமாறு வர்த்தகர் கோரியுள்ளார். (2-281)

## 14 முதிரை மரக்குற்றிகளுடன் ஒருவர் கைது



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேராவில் வனப்பகுதியில் சுமார் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான 14 முதிரை மரக்குற்றிகளுடன் நபர் ஒருவரை நேற்று முன்தினம் மாலை முல்லைத்தீவு விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது, முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேராவில் வனப்பகுதியில் மரக்கடத்தல் இடம்பெறுவதாக முல்லைத்தீவு விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவல் அடிப்படையில் முல்லைத்தீவு விசேட அதிரடிப்படை பொறுப்பதிகாரி ஆனந்த பிரேமசிறி மற்றும் ரணதுங்க உள்ளிட்ட அணியினர் சென்று புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேராவில் வனப்பகுதியில் கடத்துவதற்கு தயார் நிலையில் ஓரிடத்தில் 14 முதிரை மரக்குற்றிகளுடன் நபர் ஒருவரை கைது செய்ததோடு மோட்டார்சைக்கிள் ஒன்றையும் கைப்பற்றியுள்ளனர்

கைப்பற்றப்பட்ட 14 மரக் குற்றிகள், மோட்டார் சைக்கிள் ஒன்று என்பவற்றை புதுக் குடியிருப்பு பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதோடு சந்தேக நபரையும் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தியுள்ளனர். மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரும் புதுக்குடியிருப்பு பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவிக்கின்றனர். (2-281)

## தேர்தல் விதிமுறை மீறல்கள் குறித்து வவுனியாவில் 93 முறைப்பாடுகள்

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் முறைகேடுகள் தொடர்பில் 93 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக உதவி மாவட்ட செயலாளரும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு பிரிவு பொறுப்பதிகாரியுமான என். கமலதாசன் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முறைப்பாடு தொடர்பில் நேற்று வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் பாரிய குற்றச் செயல்கள், முறைகேடுகள் தொடர்பில் முறைப்பாடுகள் எதுவும் கிடைக்கவில்லை. எனினும் சிறியளவிலான தேர்தல் விதிமுறை மீறல் சம்பவங்கள் தொடர்பில் இது வரை 93 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அதில் அதிகமாக சுவரொட்டிகள் காட்சி யப்படுத்தியமை தொடர்பிலேயே கிடைக்கப்பெற்றுள்ளது. முறைப்பாடு கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-250-281)

## வாழ்வாதார உதவி வழங்கிவைப்பு



(கிளிநொச்சி )

தாயகத்தில் யுத்தத்தாலும் அனர்த்தங்களாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதில் கனடா செந்தில் குமரன் நிவாரண நிதியமும் கனடா வாழ் உறவுகளும் முனைப்போடு பணியாற்றி வரும் சூழலில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கு உதவி வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது.

இறுதி யுத்தத்தின் போது தனது இரு கால்களையும் இழந்து கிளிநொச்சியைச் சேர்ந்த ஹ. தங்கராசாவின் குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபா செலவில் கோழிக் கூட்டினையும், கோழிகளையும் வாழ்வாதாரமாக கனடாவைச் சேர்ந் செந்தில் குமரன் நிவாரண நிதியத்தினர் வழங்கினர்.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசத்தைச் சேர்ந்த சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டு காலமாகிய அமரர் தங்கையா சந்திரசேகரம் என்பவருடைய குடும்பத்தின் வாழ்வாதாரத்திற்காக 65ஆயிரம்ரூபா பெறுமதியான பசுமாடுகள் செந்தில் குமரனால் வழங்கப்பட்டன. (2)

# ஜி.ஜி.பொன்னம்பலத்தின் 41வது சிரார்த்ததினம் இன்று

அமரர் ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களைப் பற்றி பல நினைவுக் கட்டுரைகள் வெளிவந்திருந்தாலும் இன்றைய இளைஞர்களுக்கு அவரைப் பற்றிய தீர்க்க தரிசனம், தமிழ் பேசும் இனத்திற்காக அவர் செயற்பட்ட செயல்கள் தெரியாமல் இருக்கலாம் என்பதற்காகவும் நன்றிக் கடனாக சில முக்கிய விடயங்களை வெளிப்படுத்துவது எமது நன்றிக் கடனாகும்.

எழுபத்தொன்பது வயது நிரம்பிய யாழ்ப்பாணம், ஆனைக் கோட்டையைச்சேர்ந்த எஸ்.எஸ்.தியாகராஜா இளைப்பாறிய ஆசிரியர் அவர்கள் ஜி.ஜியைப் பற்றி "உலக மாமேதை ஜி.ஜி." என்ற தலைப்பில் 200 பக்கங்கள் கொண்ட கைநூல் எழுதி சென்ற வருடம் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டது. அந்நூலில் உள்ள ஒருசில முக்கிய விடயங்கள் கீழே வெளிப்படுத்தப்படுகின்றன.

"இலங்கையின் எரிமலை ஜி.ஜி."

இலங்கையில் எரிமலை இருக்கிறதா? ஆம்! இலங்கையில் ஒரு எரிமலை இருக்கிறது. அந்த எரிமலை புரட்சிப் பூகம்பம் தன்னை நீதியீனமாக எதிர்ப்பவர்களை அது எரிக்கிறது. தமிழன் வாழ்விற்காக தன்னையே எரிக்கிறது. சந்துபொந்து எல்லாவிடமும் அதன் சுவாலையே வீசுகிறது. இலங்கை எங்ஙனும் ஒளியைக் கொடுக்கிறது. அதனுடைய ஒளிப்பிழம்பிலே தமிழ் அன்னைக்குத் துரோகம் செய்பவனை எரித்து விடுகிறது. துரோகத்திற்கும் ஒரு எல்லை வேண்டாமா? ஈழத் தமிழர்களையும் மலைநாட்டுத் தமிழர்களையும் காப்பதற்கே அந்த எரிமலை உண்டானது.

அந்த எரிமலை தன்னாலான கடமையைச் செய்கிறது. எரிமலையின் அடியிலே பவுணும் பொன்னும் மலிந்திருப்பது போல் தமிழன் மூச்சு இந்த எரிமலையில் தான் தங்கிக் கிடக்கிறது. தமிழனை அது தன் சிறகால் மூடிக் காப்பாற்றுகிறது. அந்த எரிமலையின் ஒளி இந்து சமுத்திரத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. அதற்குக்கிட்ட எந்தச் சிங்கள இனவாதிகள் நெருங்க முடியாது. நெருங்கினால் அவர்களையே ஒழித்து விடும். சிங்கள இனவாதிகள் "தன்னையே தியாகம் செய்த சேர்.பொன். இராமநாதன் செய்த உதவியை மறந்து" அச் சிங்கள இனவாதிகள் தமிழ் மக்களுக்குத் துரோகம் செய்வதைக் கண்டு அது மனம் பொறாது அவர்களை எரித்து விடுகிறது. தமிழர் வாழ்விற்காக அது தன்னையே தியாகம் செய்கிறது. தீங்கு செய்பவரும் எவரையும் அது எரித்துக் கொண்டுதான் இருக்கிறது. அதுவேறெந்த எரிமலையும் அல்ல, ஈழத்து எரிமலை ஜி.ஜி.பொன்னம்பலம் தான். இந்தப் பொன்னம்பலம் என்ற எரிமலை தான் தமிழர்களைக் காத்து வந்தது.நான் (கல்வி ஆசிரியர்) இலங்கைக்குச் சென்றிருந்த போது ஜி.ஜி. பொன்னம்பலத்தை இலங்கையின் எரிமலையென்று பலரும் சொன்னார்கள். தீப்பொறி பறக்கும் படி சிங்கள மந்திரிகளைத் தாக்கியும் தமிழர் உரிமைகளைத் தாங்கியும் பேசுவார். இவர் போகுமிடங்களுக்கெல்லாம் நெருப்பணைக்கப் பின்னோடு ஒரு பயர் என்ஜின் போகுமென்று வேடிக்கையாகச் சொல்வார்கள்.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தோன்றியது ஏன்?

ஜி.ஜி.பொன்னம்பலம் அரசியலில் இறங்கிய நாள் தொடக்கம் இலங்கை அரசியல் வானில் மிகச் சக்தி வாய்ந்த ஒரு தலைவராகத் திகழ்ந்தார். அது மட்டுமல்லாது தமிழ் மக்களின் தலை சிறந்த தலைவனாகவும் திகழ்ந்தார். இவருடைய கையில் தமிழ்ச் சமூகத்தின் எதிர்காலம் தங்கியிருந்தது. இதனைத் பொன்னம்பலம் அப்பளுக்கற்ற முறையில் கருதியிருந்தார்.

இன்றைய அரசியல் உலகில் ஒருவன் தனித்து நின்று போராடுவதிலும் கட்சி மூலம் போராடுவதே தமிழருக்கு விமோசனம் அளிக்குமென்று பொன்னம்பலம் கருதினார். தனக்கென வாழாப் பிறருக்கென வாழும் பொன்னம்பலம் 1944 ஆம் ஆண்டு "அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்" என்ற ஸ்திரமான அரசியற் கட்சியை ஸ்தாபித்தார்.

இலங்கை வாழ் இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர், இலங்கை வாழ் முஸ்லிம்கள் ஆகிய மக்களை ஒன்று திரட்டி அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் என்ற ஸ்திரமான ஸ்தாபனத்தை ஆரம்பிக்கும் முகமாக 1944ஆம் ஆண்டில் தமிழ், முஸ்லிம் மக்கள் வாழ்ந்த பற்பல இடங்களில் பூர்வாங்க கூட்டங்களை நடத்தினர். இதில் சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஒரு ஸ்திரமான அரசியல்கட்சி வேண்டு மென்றார்கள். இக்கட்சி மூலம் தமிழ், முஸ்லிம்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றார்கள். இம் மூன்று சமூகத்தையும் ஒன்றுதிரட்டிய பெருமை ஜி.ஜியையே சாரும்.

அரசியல் நிபுணர்

சோல்பெரி ஆணைக்குழு இலங்கை வருகை

1939 ஆம் ஆண்டு சோல்பெரிப் பிரபுவைத் தலைவராகக் கொண்ட கமிஷன் ஒன்று இலங்கைக்கு வந்தது. இந்தக் கமிஷனில் சேர்.பிரெட்ரிக் பரோஸ் சேர்.பிரெடரிக்றீஸ் (பின்னர் வங்காள சுவர்ணராக நியமிக்கப் பெற்றவர்) என்பவர்கள் அங்கத்தவர்களாக இருந்தார்கள். குடியேற்ற நாட்டுக் காரியாலயத்து ரவோட் சிமித் இந்தக் கமிஷனுக்கு காரியதரிசியாக நியமிக்கப்பட்டார். 1941ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் தொடக்கம் 1945 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை இந்தக் கமிஷன் இலங்கையில் பல இடங்களையும் தரிசித்து அவர்கள் இந்நாட்டில் பல்வேறு ஸ்தாபனங்கள், அரசியல் கட்சிகள் ஆகியவற்றினதும் பொதுமக்களினதும் கருத்துக்களை ஆராய்ந்து இலங்கைக்குப் பொருத்தமான யாப்பு ஒன்றினைத் தயாரிக்க இருந்தனர்.



தன்னிகரில்லாத தனிப்பெரும் தலைவர் ஜி.ஜி.பொன்னம் பலம்

ஜி.ஜி.பொன்னம்பலம் சோல்பெரிக் கமிஷன் முன் சமநிலைப் பிரதிநிதித்துவத்திற்காக வாதிட்டார். தனக்கு ஒப்பாரும், மிக்காரும் இல்லாத தனிப்பெரும் தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலத்தை இலங்கைத் தமிழ், இந்தியத் தமிழ் முஸ்லிம், மலே, பறங்கியர் ஆகிய சிறுபான்மைச் சமூகத் தலைவர்கள் சோல்பெரிக் கமிஷன் முன் அவரே வாதாட வேண்டுமென்று நின்றனர். எங்கள் பலம் பொன்னம்பலம் என்றிருந்த காலம்.

இவரைத் தேர்ந்தெடுத்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் சேர். அ.மகாதேவா, ச.நடேசபிள்ளை, ஜனாப் ரி.பி.ஜாயா, தொண்டமான், அசீஸ், எஸ்.ஜே.செல்வநாயகம், டாக்டர் டி.ஈ. எம்.வி.நாகநாதன், ஓடிட்டர் ஜெனரல்கனகரத்தினம், ஏ.ஸ்.தம்பியையா, தம்பியப்பா, முதலியார் முத்துத்தம்பி இவர்கள் எல்லோரிலும் பார்க்க பொன்னம்பலம் வயதில் குறைந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சமப் பிரதிநிதித்துவக் கோரிக்கையை முன்வைப்பதற்கு தலைமை தாங்க சிம்மக்குரலோன் ஜி.ஜி. பொன்னம்பலம் அழைக்கப்பட்டார். அவரின் ஆங்கில நாவன்மைக்கு மயங்காதவர் யார்தான் உளர்? வெஞ்சினமாகச் சிலிர்த்தெழுந்து கங்கைநதி பெருக்கெடுத்தது போல் சமபலப் பிரதிநிதித்துவத்தை சோல்பெரி ஆணைக்குழு முன் எடுத்துரைத்தவர்.

ஒரு பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனம் ஒன்றின் மீது ஆதிக்கம் செலுத்தக் கூடாது என்பது அவரின் நோக்கமாகும். தமிழர்களுக்கு பின்னர் வரப்போகும் இன்னல்களை முன்கூட்டியே அறிந்த ஜி.ஜி.பொன்னம்பலம் இக்கோட்பாட்டை முன்வைத்தார். அந்தச் சாட்சியத்தில் டொனமூர் அரசியல் திட்டத்தின் கீழ் தமிழர்கள் எவ்வாறு புறக்கணிக்கப்பட்டனர் என்பதைப் பல ஆதாரங்களோடு விளக்கினார்.

சமப் பிரதிநிதித்துவம் கோட்பாடு பற்றி அவர் ஆற்றிய உரையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது.

"பரிந்துரைகள் குறித்து எனக்கிருந்த ஏமாற்ற உணர்வைச் சரியான வார்த்தை கொண்டு வர்ணிக்க முடியாதவனாய் இருக்கின்றேன். உண்மையான ஜனநாயகம் ஒருதலைப்பட்டு கட்டளையிடுவதால் ஆளுமை செய்பவர்களின் வாத முறைசாரா ஆணைக்கூற்று ஆளப்படுபவர்களின் சம்மதத்தின் இடத்தை எடுக்க இயலாதென்பதையும் எவ்வகை வடிவத்திலான ஜனநாயக அரசாங்கமாக இருந்தாலும் அதற்கான முறையான உறுதித் தன்மைக்கு அத்திபாரமாய் இருப்பது ஆளப்படுபவர்களின் ஒப்புதலே என்பதையும் மேதகு தேசாதிபதி அவர்கள் அறிந்திருக்க வேண்டும். இறுதியாக இந்நாட்டிலுள்ள சிறுபான்மையினரால் முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்களையும் கோரிக்கைகளையும் வழங்க வேண்டும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் எமது நாடாளுமன்றத்தை இந்தச் சபையை முரண்படுகின்ற பகைமையைக் கொண்ட நலங்களின் தூதுவர்களாகக் கொண்ட ஒரு சபையாக அல்லாமல், ஒட்டுமொத்தமான இலங்கையர்களின் நலன் ஒன்றையே தம் விருப்பமாகக் கொண்டு அதன்மூலம் உயிரூட்டப்பட்ட மக்களின் அனைத்துப் பிரிவினதும் பிரதி நிதிகளை உள்ளடங்கிய திட்டவட்டமான சபையாக ஆக்குமாறு பேரரசின் ஸ்தாபகர்களுக்கு, நான் வேண்டுகோள் விடுக்கின்றேன் என்றார். அரசமைப்பு சீர்திருத்தத்திற்கான சோல்பெரி ஆணைக்குழுவினால் தமிழ்க்காங்கிரஸின் சாட்சியம் வழங்கப்பட்ட மூன்று நாட்களில் ஒரு நாள் முழுவதும் மலைநாட்டுத் தமிழர்களுக்காக ஜி.ஜி.பொன்னம் பலம் வாதாடினார்.

சோல்பெரி ஆணைக்குழுவை மந்திரத்தால் கட்டுண்ட நாகத்தின் நிலைக்குத் தள்ளி அவர் உரையை மீண்டும் மீண்டும் ஆற்ற, அவர்களைக் கோரவைத்த பெருமை ஜி.ஜிக்கே உண்டு. சோல்பெரி ஆணைக்குழுவினர் இவர் மட்டும் ஒரு சிங்களவராக இருந்தால் வாழ்நாள் முழுவதும் இலங்கையின் பிரதமராக இருப்பார் என்று கூறினார். ஆனால் ஜி.ஜியின் சமநிலைப் பிரதிநிதித்துவக் கோரிக்கையை சோல்பெரி ஆணைக் குழுவினர் ஏற்காதபோதிலும் அரசியல் சாசனத்தின் 29ஆம் பிரிவு 1 இல் சில பாதுகாப்பு ஏற்பாடுகளை சிறுபான்மையினரின் நன்மை கருதி உட்புகுத்த வேண்டுமெனச் சிபார்சு செய்தனர். அதுமட்டுமல்ல, இந்தியப் பிரஜைகளுக்கு நாடாளுமன்றத்தில் 14 வீதமான ஆசனங்கள் ஒதுக்கப்பட வேண்டுமெனவும் சிபார்சு செய்தனர்.

1. "இவருடைய பேச்சைக் கேட்ட நாம் மகுடிக்குக் கட்டுண்ட நாகம் போலானோம்" -சோல்பெரிக் கமிஷனர்.

2. "இவர் மட்டும் ஒரு சிங்களவராக இருந்திருந்தால் தன் வாழ்நாள் முழுவதும் இலங்கையின் பிரதமராக இருந்திருப்பார்." -சோல்பெரிக் கமிஷனர்.

3. "இப்படியான ஒரு பேச்சை இன்னொருவர் பேசியதை நான் என் வாழ்நாளில் கேட்டதில்லை என்று கூறினார்" -றொபேட் மார்ஸ் வைஸ் சான்சலர்-பேராதனை பல்கலைக் கழகம், இலங்கை.

சோல்பெரிக் கமிஷனரின் அறிக்கையை ஜி.ஜி.நிராகரித்தார்.

ஜி.ஜியின் சமப் பிரதிநிதித்துவக் கோட்பாட்டை சோல்பெரிக் கமிஷனர் நிராகரித்ததையடுத்து ஜி.ஜி. பொன்னம்பலம் சோல்பெரிக் கமிஷன் அறிக்கையை தங்களால் ஏற்க முடியாதென்று தந்தி மூலம் பிரித்தானியா அரசாங்கத்திற்கு அறிவித்தார்.

சோல்பெரியை ஜி.ஜி.பின்வருமாறு வர்ணித்தார்.

சமநிலைப் பிரதிநிதித்துவக் கோட்பாட்டை நிராகரித்த சோல்பெரியை தமிழினத்தின் ஆன்மாவை புதைக்க வந்த சோல்பெரியை நாம் நம்ப முடியாது. சோல்பெரி ஒற்றைக் கண்ணுடையவராக இருந்ததினால் ஒற்றைக் கண்ணனின் ஒற்றையாட்சி தமிழினத்தை அடியோடு அழித்து விடும் என்றார். சோல்பெரி ஜி.ஜியின் சமப் பிரதிநிதித்துவம் கோரிக்கையை நிராகரித்ததை எதிர்த்து பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் வாதாடத்தன் சொந்தப் பணத்தில் லண்டன் பயணமானார்.

அந்நேரம் சமநிலைப் பிரதிநிதித்துவக் கொள்கையில் ஜி.ஜி. வெற்றி பெற்றால் தங்களுக்கு கிடைக்கப் போகின்ற ஏகபோக அரசியல் அதி காரங்களுக்கு பங்கம் ஏற்பட்டு விடும் என இனவாத சிங்களத் தலைவர்கள் வெதும்பினர். சிங்களத் தலைவர்கள் அரசியல் அதிகாரங்கள் யாவும் தங்கள் கைகளில் இருக்க வேண்டுமென்று விரும்பினர்.

சமநிலை பிரதிநிதித்துவக் கொள்கையை ஜி.ஜி.தலைமை தாங்க யாழ். குடாநாட்டுத் தமிழர் ஏகோபித்து ஆதரித்தனர். அதனால் யாழ்ப்பாண மக்களுக்கு வேண்டிய அபிவிருத்தியை நிறைவேற்றுவோம் எனக் குரல் கொடுத்தனர் தெற்கின் இனவாத அரசியல் தலைவர்கள். அதற்கு ஆதாரமாக ஒரு சில தமிழ்த் தலைவர்கள் ஆதரித்த படியால் அக்கொள்கை தோற்கடிக்கப்பட வேண்டிய நிலை தமிழினத்திற்கு ஏற்பட்டது.

தொகுப்பு:-க.மு.தர்மராசா

# மகா சிவராத்திரியை முன்னிட்டு இலவச நந்திக்கொடி விநியோகம்



எதிர்வரும் 13.02.2018 அன்று செவ்வாய்க்கிழமை மகா சிவராத்திரி தினமும் பிரதோஷ தினமும் இணைந்து வரும் சிறப்பான நன்னாளில் சைவப் பெருமக்களாகிய நாம் எமது வீட்டு முன்றலில் சைவக் கொடியை பறக்க விட்டு எமது சமயப் பெருமையைக் காப்போம். இதனையொட்டி இலவசமாக அகில இலங்கை ரீதியாக பின்வரும் இடங்களில் நந்திக் கொடியை இலவசமாக விநியோகிக்க அகில இலங்கை இந்து மாமன்றம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

நந்திக் கொடிகளை பெற்றுக் கொள்ளும் இடங்கள் :-

1.அகில இலங்கை இந்துமா மன்ற தலைமைக் காரியாலயம் - கொழும்பு

2.விவேகானந்த சபை - கொட்டாஞ்சேனை- கொழும்பு

3.சரஸ்வதி மண்டபம் - பம்பலப்பிட்டி -கொழும்பு

4.மாணிக்க விநாயகர் / கதிரேசன் ஆலயம் - பம்பலப்பிட்டி - கொழும்பு.

5.கொழும்பு சைவ முன்னேற்றச்சங்கம்கொழும்பு -02

6.இந்து மகா சபை - கொக்குவில், யாழ்ப்பாணம்.

7.தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானம் - யாழ்ப்பாணம்.

8.முத்துமாரியம்மன் கோவில் புவக்பிட்டிய அவிசாவளை.

9.அகில இலங்கை இந்து மாமன்றம் - யாழ்ப்பாண கிளை- நல்லூர்.

10.திருமுறிகண்டி பிள்ளையார் ஆலயம் - முறிகண்டி

11.சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயம் வவுனியா

12.நாவலப்பிட்டி இந்துமா மன்றம் - (18/4 8ஆவது ஒழுங்கை சொய்சாகல)

13.ஆலையடிவேம்பு இந்துமா மன்றம் - அம்பாறை

14.முள்ளியவளை கல்யாண வேலவர் ஆலயம் - முள்ளியவளை

15.R.K.Stores சொய்சாபுர மொரட்டுவ.

16.இந்து இளைஞர் பேரவை, மட்டக்களப்பு.

17.கட்டுகலை செல்வ விநாயகர் ஆலயம் - கண்டி.

18.திருக்கோணேஸ்வரம் - திருகோணமலை.

19.முன்னேஸ்வர தேவஸ்தானம் - சிலாபம்.

20.சிவன் கோயில் - கோயில்குளம்,வவுனியா.

21.திருமதி அ.தமயந்தி - ஹற்றன் கல்வி வயை இந்து மன்றம்.

22. இல 2. ஹென்சி பசார், டிக்கோயா ஆகிய இடங்களில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# பிரிகேடியர் விடயத்தில் மைத்திரியின் உத்தரவை பிரிட்டன் ஏற்கக்கூடாது

## நாடு கடந்த தமிழீழ அரசு வலியுறுத்து

(கொழும்பு)

லண்டனிலுள்ள இலங்கைத் தூதரக பாதுகாப்பு ஆலோசகர் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவிற்கு மீண்டும் இராஜதந்திர வரப்பிரசாதம் வழங்கப்பட்டுள்ளதை பிரித்தானிய அரசாங்கம் ஏற்கக் கூடாது என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.

நாடுகடந்த தமிழீழ அரசினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் பணியாற்ற அனுமதித்தமையானது, சர்வதேச சட்டத்திட்டமிருந்து அவருக்கு பாதுகாப்பு வழங்கும் செயற்பாடு என்றும் குறித்த அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

இலங்கை சுதந்திர தினத்தின் போது லண்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்த புலம்பெயர் தமிழர்களை நோக்கி கழுத்தை அறுப்பதைப் போன்ற சைகையை, தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகராக செயற்படும் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ விடுத்திருந்தார்.

இதனை சமூக ஊடகத்தின் மூலமாக மனித உரிமை ஆர்வலர்கள், ஜனநாயக செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் கண்டித்து விமர்சித்ததையடுத்து பாதுகாப்பு ஆலோசகர் பதவியிலிருந்து பிரிகேடியர் பிரியங்க இடை நிறுத்தப்படுவதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்தது.

எனினும், பிரிகேடியர் பிரியங்க லண்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகர்பணியை மீளப் பொறுப் பேற்பதற்கான அறிவுறுத் தல்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 4 கால்களுடன் விசித்திர கோழி



நான்குகால்களைக்கொண்ட கோழி ஒன்று நாத்தாண்டியா பிரதேசத்திலுள்ள கோழிப்பண்ணை ஒன்றில் வளர்ந்து வருகிறது. இது சாதாரண கோழியைப் போன்று இரண்டு கால்களில் நடந்து செல்வதுடன் மேலதிக கால்களைப் பின்புறமாக வைத்திருக்கும் என்று கோழிப் பண்ணையின் உரிமையாளர் தெரிவித்தார். (இ-7)

# மட்டக்களப்பில் மிக நீளமானதும் பாணந்துறையில் மிகச் சிறியதானதுமான வாக்குச் சீட்டு அச்சிடல்

(ஏறாவூர்)

நாளை 10 ஆம் திகதி சனிக்கிழமை நாடளாவிய ரீதியில் இடம்பெறப் போகின்ற நாட்டிலுள்ள 276 பிரதேச சபைகள், 24 மாநகர சபைகள், 41 நகர சபைகள் உள்ளிட்ட 341 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் மட்டக்களப்பு மற்றும் மூதூர் ஆகிய இரு இடங்களிலேயே அதி நீளமான வாக்குச் சீட்டு அச்சிடப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, மிகச் சிறியதான வாக்குச் சீட்டு பாணந்துறை நகர சபைக்காக போட்டியிடும் கட்சிகள் மற்றும் 3 சுயேட்சைக் குழுக்களை உள்ளடக்கிய வாக்குச் சீட்டு அச்சடிக்கப்பட்டுள்ளது.

அதி நீளமானது என்ற அடிப்படையில் மட்டக்களப்பில் மட்டக்களப்பு மாநகர சபைக்காக 11 அரசியல் கட்சிகள், 5 சுயேட்சைக் குழுக்கள் உள்ளிட்ட 16 போட்டித் தரப்புக்களை உள்ளடக்கிய வாக்குச் சீட்டும், அதேபோல் மூதூரில் 14 அரசியல் கட்சிகள் மற்றும் 2 சுயேட்சைக் குழுக்களுடன் 16 போட்டித் தரப்பாரை உள்ளடக்கிய நீளமான வாக்குச் சீட்டும் அச்சடிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாநகர சபைக்கு 33 உறுப்பினர்களும்மூதூர் பிரதேச சபைக்கு 21 உறுப்பினர்களும் தெரிவாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சைவத் தமிழ் பண்பாட்டு மாநாடு

(கொழும்பு)

உலக சைவத் திருச்சபையின் ஏற்பாட்டில் சைவத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு வைகாசி மாதம் 4,5,6 ஆகிய திகதிகளில் கனடா ஸ்காபரோ சைவ பண்பாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

உலகில் முதல்முறையாக உலகெங்கும் வாழ்கின்ற சைவசமய பெரியார்கள், தமிழ் அறிஞர்கள், அனைத்து மதத் தலைவர்கள், பல்வேறு நாடுகளின் அமைச்சர்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், தூதுவர்கள் பங்கேற்கவுள்ளனர்.

உலகெங்கும் வாழ்கின்ற தமிழர்களின் ஒற்றுமையை மேம்படுத்தவும் சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் நோக்கிலும் இம்மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என உலக சைவத் திருச்சபையினர் அறிவித்துள்ளனர்.(இ-7)





மல்லாகம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி வித்தியாலய மைதானத்தில் அண்மையில் நடைபெற்றபோது. (படங்கள்:- ஈச்சமோட்டை செய்தியாளர்)

# ஐ.நா.அமைதிகாக்கும் பணிகளுக்காக லெபனான் செல்லும் இலங்.இராணுவம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிகாக்கும் பணிகளில் ஈடுபடுவதற்காக இலங்கை இராணுவத்தின் குழுவொன்று லெபனான் செல்லவுள்ளது.

12 ஆவது பாதுகாப்புப் படையே இவ்வாறு லெபனான் பயணமாகவுள்ளது.

இலங்கையின் பாதுகாப்புப் படைப் பிரிவில் 10 அதிகாரிகள் மற்றும் 140 படையினர் போன்றோர் இலங்கை சிங்கப் படையணி, இலங்கை பொறியியலாளர் படையணி, இயந்திரவியல் காலாட் படையணி, கொமாண்டோ படையணி, விசேட படையணி, பொறியியலாளர் சேவைப் படையணி, இலங்கை இராணுவ சேவைப் படையணி, இலங்கை இராணுவ மருத்துவப் படையணி, இலங்கை மின்சார இயந்திர மற்றும் பொறியியல் படையணி, இலங்கை இராணுவ போர்க் கருவிப் படையணி, இலங்கை இராணுவ பொலிஸ் சேவைப் படையணி மற்றும் இராணுவ ஜெனரல் சேவைப் படையணி போன்ற படையணிகளை முன்னிலைப்படுத்தி கலந்து கொள்வதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் இதன் முதல் தரப்பினர் ஏழு அதிகாரிகள் உள்ளடங்கலாக கட்டளை அதிகாரிகள் மற்றும் நாற்பத்து மூன்று படையினர்) பெப்ரவரி மூன்றாம் வாரத்தில் பயணத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

இத்தக் குழுவிற்கான கட்டளை தளபதியான சிங்கப் படையணியின் லெப்டினன்ட் கேணல் ஆர்.டபிள்யூ. கே. ஹேவகே மற்றும் படையினர் 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி 18-19 முதல் 6 மார்ச் வரை பயணத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

லெபனான் நாட்டின் பாதுகாப்பு சேவைகள் நக்குரா எனும் பிரதேசத்தில் பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் ஒத்துழைப்புடன் இடம்பெறுகின்றது.

2010ஆம் ஆண்டு இலங்கை இராணுவமானது 11 படையினரை லெபனான் நாட்டின் சேவைக்காக வழங்கியிருந்தது.

இவை 1978 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன் இலங்கை இராணுவமானது 2010ஆம் ஆண்டு ஒரு நபரை அனுப்பி வைத்தது.

அந்த வகையில் முதல் இலங்கை இராணுவ சிங்கப் படையணியின் படைவீரர் 2012ஆம் ஆண்டு அனுப்பி வைக்கப்பட்டதுடன் இதன் இரண்டாம் கட்ட பகுதியே இதுவாகும் என இராணுவம் தெரிவித்துள்ளது. (இ-7)

# பாரதம்

## நாடாளுமன்றத் தேர்தல் முன்கூட்டியே வரலாம் காங்கிரஸ் எம்.பிக்கள் தேர்தலுக்கு தயாராக வேண்டும்

### சோனியா காந்தி அறைகூவல்

(டில்லி)

நாடாளுமன்றத் தேர்தல் முன்கூட்டியே வரலாம் என்பதால் காங்கிரஸ் எம்.பிக்கள் தேர்தலுக்கு தயாராக வேண்டும் என்று சோனியா காந்தி தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற குழு கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த சோனியா காந்தி,


நாடாளுமன்றத் தேர்தல் முன்கூட்டியே வரலாம் என்பதால் காங்கிரஸ் எம்.பிக்கள் தேர்தலுக்கு தயாராக வேண்டும். ராகுல் காந்தி எனக்கும் தலைவரே. அதில் எந்த சந்தேகமும் இல்லை.

அனைவரும் முன்பு இருந்த அதே அர்ப்பணிப்புடன் ராகுல் காந்தியுடன் இணைந்து பணியாற்றுவீர்கள் என்று எனக்கு தெரியும்.

காங்கிரஸின் எழுச்சிக்கு எடுத்துக்காட்டாக கர்நாடக தேர்தலை எதிர்பார்க்கிறேன். ராஜஸ்தான் இடைத் தேர்தல் முடிவுகள் காங்கிரஸ் கட்சிக்கு உத்வேகத்தை அளித்துள்ளது. இந்த அரசு ஆட்சிக்கு வந்து 4 ஆண்டுகள் ஆகியுள்ள நிலையில், பாராளுமன்றம், நீதித் துறை, ஊடகம் உட்பட அனைத்து அமைப்புகளும் தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றன. விசாரணை அமைப்புகள் எதிர்க்கட்சிகளுக்கு எதிராக பயன்படுத்தப்படுகிறது என மேலும் தெரிவித்துள்ளார். (8-10)



## சிரியாவில் விமானத் தாக்குதல் 40 பொது மக்கள் உயிரிழப்பு





(டமாஸ்கஸ்)

சிரிய தலைநகர் டமாஸ்கஸ்க்கருகில் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டிலுள்ள கிழக்கு கௌடா (Ghouta) பகுதியில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதல்களில் 12 சிறுவர்கள் உட்பட 40 அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்துள்ளதாக சிரிய மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டிலுள்ள புறநகர் பகுதிகளான டியுமா (Douma), பெய்ட் சவா (Beit Sawa) உள்ளிட்ட பகுதிகளில் சிரிய அரசாங்கப் படைகள் நேற்று முன்தினம் புதன்கிழமை நடத்திய விமானத் தாக்குதல்கள் மற்றும் பீரங்கித் தாக்குதல்களில் மேற்படி பொதுமக்கள் உயிரிழந்ததாக சிரிய மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை குண்டுத் தாக்குதல்களில் 65 பேர் காயமடைந்துள்ளதாக பிரித்தானியாவை தளமாக கொண்டு இயங்கும் கண்காணிப்புக் குழு அறிவித்துள்ளது.

எனினும் கிளர்ச்சியாளர்களை இலக்கு வைத்தே தாக்குதல் நடத்தப்பட்டதாக சிரிய அரசாங்கம் கூறியுள்ளது.

இவ்வாறிருக்க டியுமாவில் இடம்பெற்ற விமானத் தாக்குதல்களை தொடர்ந்து காயமடைந்த சிறுவர்கள் விமானம் மூலம் அழைத்துச் செல்லப்படும் காணொலி சிரிய குழு இணையத்தில் வெளியிட்டுள்ளது. (8-10)

## தாய்வா[ன்] பலியானோ[ர்]




(தைபே).

தாய்வானில் கடந்த செவ்வாய்க் கிழமை ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தில கட்டடங்கள் இடிந்தன. 9 பேர் பலி ஆகினர்.

250 பேர் படுகாயம் அடைந்தனர். 50-க்கும் மேற்பட்டோரை காணவில்லை.

தாய்வான் நாட்டில் கிழக்கு கடலோரப்பகுதியில் கரைக்கு அப்பால் 20 கி.மீ. தொலைவில் ஹுவாலியன் நகர் அருகே கடந்த செவ்வாய்க்கிழமை உள்ளூர் நேரப்படி இரவு 11.50

## தமிழகத்தின் சிஸ்ரம் சரி செய்ய வேண்டும் நடிகர் ரஜினிகாந்த் தெரிவிப்பு



(சென்னை)

சிஸ்ரம் இந்தியாவில் சரியில்லையா, தமிழகத்தில் சரியில்லையா என்ற கேள்விக்கு ரஜினிகாந்த் பதிலளித்துள்ளார்.

புதிய அரசியல் கட்சி ஆரம்பிக்கப் போவதாக நடிகர் ரஜினிகாந்த் கடந்த டிசெம்பர் மாதம் அறிவித்தார். இதையடுத்து தனக்கு ஆதரவை அதிகரிப்பதற்காக ரஜினி மக்கள் மன்றம் என்ற அமைப்பை ஆரம்பித்து உறுப்பினர்களை சேர்த்து வருகிறார்.

கடந்த ஆண்டு ரஜினி ரசிகர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில், தமிழ் நாட்டில் சிஸ்ரம் சரியில்லை என்று கூறினார். அவரது இந்த பேச்சு பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த நிலையில் நேற்று ரஜினி நிருபர்களுக்கு பேட்டியளித்தார்.

கேள்வி:- சிஸ்ரம் சரியில்லை என்று கூறி இருந்தீர்களே.. இந்தியாவில் சிஸ்ரம் சரியில்லையா? தமிழ் நாட்டில் சிஸ்ரம் சரியில்லையா?

பதில் :- தமிழ்நாட்டில் தான் சிஸ்ரம் சரியில்லை. நான் சொல்வது தமிழ்நாட்டுக்கு மட்டும்தான். முதலில் இதை சரி செய்ய வேண்டும். அரசியலில் கமல்ஹாசனுடன் இணைந்து செயற்படுவது பற்றி காலம்தான் முடிவு செய்யும்.

பாராளுமன்ற தேர்தலில் போட்டி யிடுவது குறித்து உரிய நேரத்தில் முடிவு செய்யப்படும் எனத் தெரிவித்துள்ளார். (8-10)

## விரைவில் மரணத்தை சந்திக்க போகிறேன் முன்னாள் போப் பாண்டவர் பெனடிக்ட் கவலை



(ரோம்)

விரைவில் மரணத்தை சந்திக்கப்போவதாகவும், கடவுளின் இல்லத்திற்கு புனித பயணம் செல்வதற்கு தயாராகிக் கொண்டிருப்பதாகவும் முன்னாள் போப் பெனடிக்ட் அறிவித்துள்ளார்.

உலக கத்தோலிக்க மத தலைவராக (போப்) ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த 16-ம் பெனடிக்ட் தேர்வு செய்யப்பட்டிருந்தார். ஆனால் சில ஆண்டுகாலம் பணியாற்றிய அவர் 5 ஆண்டுகளுக்கு முன்பு போப் பணியில் இருக்க விரும்பவில்லை என்று அறிவித்து ஓய்வுபெற்றார். இதையடுத்து பிரான்சிஸ் புதிய போப் ஆக தேர்வு செய்யப்பட்டார்.

முன்னாள் போப் பெனடிக்ட் தொடர்ந்து ரோம் நகரில் உள்ள சிறிய மடத்தில் தங்கி இருக்கிறார். அவருக்கு உதவி செய்வதற்காக 4 கன்னியாஸ்திரிகளும், தனி செயலாளர் ஒருவரும் உள்ளனர்.

தற்போது பெனடிக்டுக்கு 91 வயது ஆகிறது. இந்த நிலையில் அவர் ஒரு அறிவிப்பு வெளியிட்டுள்ளார். அதில் நான் எனது கடைசி கால வாழ்க்கை எப்படி செல்கிறது என்பதை பலரும் அறிவதற்கு ஆவலாக இருக்கிறார்கள். என்னை சுற்றி எல்லாமே நன்றாக நடந்து கொண்டிருக்கிறது. என்மீது மக்கள் மிகவும் அன்பு காட்டி என்னைப்பற்றி விசாரிப்பது மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கிறது.

அதே நேரத்தில் நான் இப்போது 90 வயதை கடந்து விட்டேன். எனது உடல் உள்உறுப்புகள் பணி செய்வதை குறைத்துக் கொண்டுள்ளன. நான் வலிமை குன்றி வருகிறேன். நான் மரணத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறேன். நான் கடவுளின் இல்லத்திற்கு புனித பயணம் செல்வதற்கு தயாராகிக் கொண்டிருக்கிறேன் எனக் கவலையுடன் தெரிவித்துள்ளார். (8-10)

## வட கொரியாவி[ல்]



(சியோல்)

குளிர்கால ஒலிம்பிக் இன்று தொடங்கவுள்ள நிலையில், வடகொரியா இராணுவ அணிவகுப்பு நடத்தியுள்ளது.

வட கொரியாவுக்கும், தென் கொரியாவுக்கும் இடையே நீண்ட காலமாக பகைமை நிலவி வந்தது. வட கொரியாவின் தொடர் அணு ஆயுத திட்டங்கள், ஏவுகணை திட்டங்கள் காரணமாக இரு நாடுகள் இடையே எப்போதுமே பதற்றம் தொற்றிக்கொண்டு உள்ளது. இந்த சூழ்நிலையில், தென் கொரியாவில் உள்ள பியாங்யாங் நகரில் குளிர்கால ஒலிம்பிக் போட்டி இன்று ஆரம்பமாகி 25 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்த போட்டியில் வடகொரியாவும் பங்கேற்கிறது. இதற்காக தடகள வீரர்கள், வீராங்கனைகள், பயிற்சியாளர்கள்,

## பாராளுமன்றில் 8 மணி நேரம் உரையாற்றி அமெ.ஜனநாயக கட்சித் தலைவி சாதனை

(வோஷிங்டன்)

அமெரிக்க பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையில், ஜனநாயகக் கட்சி எம்.பியான நான்சி பெலோசி, 8 மணி நேரம் 7 நிமிடங்களுக்கு தொடர்ச்சியாக உரையாற்றி சாதனை படைத்துள்ளார்.

பிரதிநிதிகள் சபையின் முன்னாள் தலைவரும், பிரதிநிதிகள் சபையின் தற்போதைய ஜனநாயகக் கட்சி தலைவருமான நான்சி பெலோசிக்கு தற்பொழுது 77 வயதாகிறது.

நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் உரையாற்ற ஆரம்பித்து மாலை 6.11 மணிக்கு தனது உரையை முடித்துள்ளார்.

முறையான ஆவணங்கள் இன்றி மிகச்சிறு வயதில் குடியேறியவர்களை அமெரிக்காவில் இருந்து வெளியேற்றக் கூடாது என வலியுறுத்தியே நான்சி பெலோசி, நீண்ட உரையை ஆற்றியுள்ளார்.

இதற்கு முன்னர், அமெரிக்க பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையில் 1909 ஆம் ஆண்டு சாம்ப் கிளார்க் என்ற எம்.பி., தொடர்ச்சியாக 5 மணி நேரம் 15 நிமிடங்கள் உரையாற்றியுள்ளார். அதன் பிறகு 108 ஆண்டுகள் கழித்து மிக நீண்ட உரையாற்றியவர் என்ற பெருமையை நான்சி பெலோசி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (8-10)

## காஷ்மீர் விவகாரம் கிடப்பி[ல்] ஐ.நா.சபையையே பலவீனம[ாக்குகிறது]

### ஐ.நாவுக்கான பாக்.பிரதிநி[தி]

(நியூயோர்க்)

ஐக்கிய நாடுகள் சபையின் (ஐ.நா.) பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் காஷ்மீர் விவகாரத்தை பாகிஸ்தான் மீண்டும் எழுப்பி யுள்ளது.

ஐ.நா. பாதுகாப்புச் சபைக் கூட்டம் அமெரிக்க தலைநகர் நியூயோர்க்கில் நடைபெற்று வருகிறது. இந்தக் கூட்டத்தில், ஐ.நா.வுக்கான பாகிஸ்தானின் நிரந்தரப் பிரதிநிதி மலீஹா லோதி.

காஷ்மீர் விவகாரம் தொடர்பாக ஐ.நா. பபாதுகாப்புச் சபையின் தீர்மானங்கள் கிடப்பில் போடப்பட்டுள்ளன. வெகுசில தீர்மானங்கள் மட்டுமே செயற்பாட்டில் உள்ளன. தமது சொந்தத் தீர்மானத்தையே வெற்றிகரமாக செயற்படுத்த முடியாத இந்தத் தன்மையானது, ஐ.நா. பாதுகாப்புச் சபையை மட்டுமன்றி ஒட்டுமொத்த ஐ.நா. அமைப்பையே பலவீனமாக்குகிறது. எனவே, காஷ்மீர் விவகாரத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் செயற்படுத்தப்படுவதை ஒரு குறிப்பிட்ட கால



# வெளிநாடு

## வான் நிலநடுக்கத்தில் சிக்கி
## னோர் எண்ணிக்கை 10 ஆக உயர்வு





மணிக்கு சக்தி வாய்ந்த நில நடுக்கம் ஏற்பட்டது. இந்த நில நடுக்கம் ரிக்டர் அளவு கோலில் 6.4 புள்ளிகளாக பதிவானது.

இந்த நிலநடுக்கத்தால் ஹுவாலியன் நகரம் மிகுந்த பாதிப்புக்குள்ளானது. மூன்றரை இலட்சம் பேர் வசிக்கின்ற இந்நகரத்தில் அடுக்குமாடி கட்டங்கள் பல சேதமடைந்தன.

நிலநடுக்கத்தை தொடர்ந்து 15 முறை கடும் அதிர்வுகள் ஏற்பட்டன. அவை ரிக்டர் அளவுகோலில் 4.8 புள்ளி அளவுக்கு பதிவாகியுள்ளன. நில நடுக்கம் தலைநகர் தைபே யிலும் உணரப்பட்டதாக தகவல்கள் கூறுகின்றன. நில நடுக்கத்தில் இடிபாடுகளில் சிக்கி 2 பேர் பலியான நிலையில் தற்போது பலி எண்ணிக்கை 7 ஆக உயர்ந்துள்ளது. 250 பேர் படுகாயம் அடைந்தனர். 51 பேரை காணவில்லை என அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

படுகாயம் அடைந்தவர்களில் 14 பேர் தென் கொரியர்கள், 9 பேர் ஜப்பானியர், 2 பேர் செக்கோஸ்லோவேகியா நாட்டினர், 2 பேர் சிங்கப்பூர்வாசிகள், ஒருவர் பிலிப்பைன்ஸ் நாட்டை சேர்ந்தவர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

நில நடுக்கத்தால் நிலைகுலைந்து போயுள்ள ஹுவாலியன் நகருக்கு தாய்வான் ஜனாதிபதி சாய் இங் வென் நேற்று முன்தினம் காலை நேரில் சென்று பார்வையிட்டார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர் ஆறுதலும் நம்பிக்கையும் தெரிவித்தார்.

மீட்பு பணிகளையும், நிவாரண பணிகளையும் அவர் துரிதப்படுத்தினார்.

ஹுவாலியன் நகரில், 600 இராணுவ வீரர்கள், 750 தீயணைப்பு படை வீரர்கள் தொடர்ந்து மீட்பு பணியில் ஈடுபட்டு உள்ளதாக அங்கு இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (8-10)

## மாலைதீவு நட்பு நாடுகளில் இந்தியாவுக்கு இடமில்லை

(மாலே)

மாலைதீவின் தற்போதைய நிலவரம் குறித்து தகவல் தெரிவிக்க நட்பு நாடுகளுக்கு தூதர்களை அனுப்புவதாக தெரிவித்துள்ள அந்நாடு, இந்தியாவுக்கு தூதரை அனுப்ப போவது இல்லை எனத் தெரிவித்துள்ளது.

மாலைதீவில் தண்டிக்கப்பட்டு உள்ள அரசியல் தலைவர்களை விடுதலை செய்ய வேண்டும் ஜனாதிபதி யாமீன் அப்துல் கயூமின் மாலைதீவு முன்னேற்ற கட்சியின் 12 எம்.பி.க்களை தகுதி நீக்கம் செய்தது செல்லாது என கடந்த முதலாம் திகதி அந்த நாட்டின் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. இதனை மாலைதீவு ஜனாதிபதி யாமீன் அப்துல் கயூம் ஏற்க மறுத்தார்.

இதைத் தொடர்ந்து அங்கு அரசியல் நெருக்கடி ஏற்பட்டு உள்ளது. தீர்ப்பை வழங்கிய தலைமை நீதிபதி அப்துல்லா சயீத், நீதிபதி அலி ஹமீத், முன்னாள் ஜனாதிபதி மாமூன் அப்துல் கயூம் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் மாலைதீவு விவகாரத்தில் இந்திய இராணுவ உதவியை மற்றொரு முன்னாள் ஜனாதிபதி முகமது நஷீத் நாடி உள்ளார்.

ஆனால் இதற்கு சீனா எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக பீஜிங்கில் சீன வெளியுறவுத் துறை அமைச்சக செய்தி தொடர்பாளர் கெங்க் சுவாங்க கருத்து தெரிவிக்கையில், அங்கு தற்போது உள்ள நிலைமையை மேலும் குழப்பத்தில் ஆழ்த்தும் விதத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக அந்த நாட்டின் இறையாண்மையை மதித்து, ஆக்கபூர்வமான பங்களிப்பு செய்ய வேண்டும் என்றார். முன்னாள் ஜனாதிபதி முகமது நஷீத் இதை கண்டு கொள்ளாமல், இந்தியாவின் இராணுவ உதவியை மீண்டும் கோரி உள்ளார்.

இதற்கிடையே முன்னாள் ஜனாதிபதி முகமது நஷீத் உள்ளிட்டவர்களின் தண்டனையை ரத்து செய்ததை உச்சநீதிமன்றம் எஞ்சிய 3 நீதிபதிகள் அமர்வு விலக்கிக் கொண்டது.

மாலைதீவில் தற்போது இருக்கும் சூழல் குறித்து தனது நேச நாடுகளுக்கு தகவல் தெரிவிக்க ஜனாதிபதி யாமீன் முடிவு செய்துள்ளார். இதன்படி, நட்பு நாடுகள் என மாலைதீவு அறிவித்துள்ள பட்டியலில் இந்தியாவுக்கு இடம் இல்லை. சீனா, பாகிஸ்தான் மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடுகளுக்கு தூதர்கள் சென்று மாலைதீவில் நிலவரம் பற்றி தகவல் தெரிவிப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மாலைதீவு, நட்பு நாடுகள் பட்டியலில் இந்தியாவை சேர்க்காமல் அறிவித்து இருப்பது, சர்வதேச அளவில் கவனிக்கப்படுகிறது.

மாலைதீவு விவகாரத்தில் இந்தியா தலையிடக்கூடாது என்று சீனா அறிவித்த சில மணி நேரங்களில் மாலைதீவு இந்த பட்டியலை வெளியிட்டுள்ளது.

மாலைதீவின் தற்போதைய ஜனாதிபதி யாமீன், சீனா மற்றும் சவுதி அரேபிய நாடுகளுடன் நெருங்கிய நட்பு பாராட்டி வருகிறார்.

குட்டித் தீவு நாடான மாலைதீவில் சீனா மற்றும் சவுதி அரேபியா ஆகிய இரு நாடுகளும் அதிக அளவில் முதலீடு செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (8-10)

## ாவின் திடீர் இராணுவ அணிவகுப்பால் பரபரப்பு



பத்திரிகையாளர்கள் என 280 பேரை கொண்ட வட கொரிய குழு, நேற்று முன்தினம் தென்கொரியா சென்று அடைந்தது.

குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் இன்று ஆரம்பமாக உள்ளது. இந்த சூழலில் வடகொரியா தனது இராணுவத்தின் 70ஆவது ஆண்டு விழாவை கொண்டாடியுள்ளது.

இராணுவ படைகள் உருவாக்கப்பட்ட தினத்தை அனுசரிக்கும் விதமாக பியாங்யாங்கில் 40 வருடங்களாக ஆண்டு தோறும் நடைபெறும் அணி வகுப்பு, கடந்த வருடம் ஏப்ரல் மாதம் நடைபெற்றது. இந்த வருடம், நேற்று அணி வகுப்பு மாற்றப்பட்டுள்ளது.

உலகில் உள்ள எந்த ஒரு நாடும் தனது இராணுவம் உருவாக்கப்பட்ட தினத்தை முக்கியமானதாக கருதி, ஆடம்பர நிகழ்ச்சிகள் மூலம் அந்நாளை கொண்டாடும். அது ஒரு வழக்கமான பாரம்பரியம் மற்றும் அடிப்படை அறிவு" என ஆளும் கட்சியின் பத்திரிகை நோடான் ஷின்முன் செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் ஐ.நா. சபை விதித்துள்ள பொருளாதார தடைகளை பல வீனப்படுத்தும் நோக்கில் வட கொரியா இதுபோன்ற இரட்டை நிலைப்பாட்டை கடைப்பிடிப்பதாக நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். (8-10)

## குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் வடகொரிய ஜனாதிபதியின் தங்கை



(சியோல்)

தென்கொரியாவில் இன்று நடைபெறும் தொடக்க விழாவில், வட கொரிய தலைவர் கிம் ஜாங் உன்னின் தங்கை கிம்யோ ஜாங் கலந்து கொள்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வட கொரியாவுக்கும், தென்கொரியாவுக்கும் இடையே நீண்ட காலமாக பகைமை நிலவி வந்தது. வட கொரியாவின் தொடர் அணு ஆயுத திட்டங்கள், ஏவுகணை திட்டங்கள் காரணமாக இரு நாடுகள் இடையே எப்போதுமே பதற்றம் தொற்றிக் கொண்டு உள்ளது.

இந்த சூழ்நிலையில், தென்கொரியாவில் உள்ள பியாங்யாங் நகரில் குளிர்கால ஒலிம்பிக் போட்டி இன்று ஆரம்பமாகி, 25ஆம் திகதி முடிவடைகிறது.

இந்த போட்டியில் வட கொரியாவும் பங்கேற்கிறது. இதற்காக தடகள வீரர்கள், வீராங்கனைகள், பயிற்சியாளர்கள், பத்திரிகையாளர்கள் என 280 பேரை கொண்ட வடகொரிய குழு, நேற்று முன்தினம் உள்ளூர் நேரப்படி காலை 9.28 மணிக்கு தென்கொரியா சென்று அடைந்தது.

இந்த குழுவுக்கு வட கொரிய விளையாட்டு துறை அமைச்சர் கிம் இல் கக் தலைமை தாங்குகிறார். இன்று நடைபெறும் தொடக்க விழாவில், வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னின் தங்கை கிம் யோ ஜாங் கலந்துகொள்கிறார்

கிம்யோஜாங் வட கொரியாவை ஆளும் தொழிலாளர் கட்சியின் அரசியல் விவகார உயர் மட்டக்குழு உறுப்பினராக உள்ளார்.

தென்கொரியாவில் நடைபெறும் குளிர்கால ஒலிம்பிக் போட்டி தொடக்க விழாவில் இவர் பங்கேற்பது முக்கியத்துவம் பெறுகிறது. ஏனெனில் தொடக்க விழாவில் அமெரிக்க துணை ஜனாதிபதி மைக் பென்சும் கலந்து கொள்கிறார். (8-10)

## ப்பில் இருப்பது
## வீணமாக்குகிறது
## திநிதி விசனம்



இடை வேளையில் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் கண்காணிக்க வேண்டும் என தெரிவித்தார்.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் 1948 ஆம் ஆண்டின் தீர்மானத்தின்படி, காஷ்மீரின் எதிர்காலத்தை தீர்மானிப்பது குறித்து அம்மாநில மக்களின் கருத்தை அறியும் வகையில் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆனால், இதற்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியான காஷ்மீரில் ஜனநாயக முறையில் நடைபெறும் தேர்தல்களில் அம்மாநில மக்கள் வாக்களித்து வரும்போது, பொது வாக்கெடுப்பு தேவையற்றது என இந்தியா தெரிவித்து வருகிறது. (8-10)

## ரொக்கெட்டில் பறந்த விண்வெளியின் முதல் கார்



(புளோரிடா)

பால்கோன் ஹெவி ரொக்கெட்டில் ஸ்போர்ட்ஸ் காரை வைக்கப்பட்டது. இதுவே விண்வெளிக்கு செல்லும் முதல் காராகும்.

பால்கோன் ஹெவி என்ற உலகின் மிகவும் சக்தி வாய்ந்த ரொக்கெட் அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள கென்னடி விண்வெளி நிலையத்திலிருந்து வெற்றிகரமாக ஏவப்பட்டது.

ஸ்பேஸ் எக்ஸ் என்ற தனியார் நிறுவனத்தால் இந்த ரொக்கெட் தயாரிக்கப்பட்டது.

ஸ்பேஸ் எக்ஸ் மற்றும் டெஸ்லா நிறுவனம் அமெரிக்காவைச் சேர்ந்த, தொழில் முனைவர் எலான் மஸ்க்குக்கு சொந்தமானதாகும். எலான் மஸ்க்குக்கு சொந்தமான சிவப்பு வண்ண காரே ரொக்கெட்டில் பறந்து சென்றது.

70 மீற்றர் உயரம் கொண்ட இந்த ரொக்கெட்டால், 64 மெட்ரிக் தொன் எடையை பூமியின் சுற்றுவட்டப்பாதையில் நிறுத்த முடியும்.

இந்த எடை, ஐந்து இரட்டை அடுக்கு பேருந்துகளின் எடைக்கு சமமானதாகும். எதிர்காலத்தில் செவ்வாய்க்கு செல்லும் திட்டத்திற்கு, பால்கோன் ஹெவி ரொக்கெட்டை பயன்படுத்த எலான் மஸ்க் திட்டமிட்டுள்ளார். (8-10)

## முறையாக விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதனால்

# அரசை கவிழ்க்க சதி

## மகிந்த மீது ராஜித குற்றச்சாட்டு

(கொழும்பு)

விசாரணைகள் முறையாக முன்னெடுக்கப்படுவதால் தான் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ஒவ்வொரு பிரதேச சபையாகச் சென்று அரசை கவிழ்க்க சதி முயற்சி செய்கிறார் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பில் முன்னாள் பொலிஸ்மா அதிபர் ஒருவரும் மற்றும் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவரும் விரைவில் கைது செய்யப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பான விசாரணை வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகிறது. இதன்படி சந்தேக நபர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளனர். அவர்கள் துரிதமாக கைது செய்யப்படவுள்ளார்கள் எனவும் களுத்துறை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# தேர்தலில் பெண்களுக்கான ஒதுக்கீடு மகிழ்ச்சியானதே

## அடுத்த விஜயத்தில் வடக்கிற்கு முன்னுரிமை-ஆஷ்லி ஜுட்






(கொழும்பு)

இலங்கையில் முதன் முறையாக உள்ளூராட்சி மன்ற தேர்தலில் பெண்களுக்கு 25 சதவீத ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளமை எனக்கு மிக்க மகிழ்ச்சியையளித்துள்ளதென ஐக்கிய நாடுகள் சபையின் சனத்தொகை நிதியத்தின் நல்லிணக்கத் தூதுவர் ஆஷ்லி ஜுட் தெரிவித்தார்.

இதேவேளை, அதிகளவில் பெண்கள் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ள பகுதியாக இலங்கையின் வடபகுதி காணப்படுவதாகவும் அப் பகுதிக்கு விஜயம் மேற்கொள்ளாமை குறித்து வருத்தமடைவதாக தெரிவித்த ஆஷ்லி, தனது அடுத்த விஜயத்தின் போது அதற்கு முன்னுரிமை கொடுப்பதாகவும் தெரிவித்தார்.

கொழும்பு ஜெட்விங் நட்சத்திர ஹோட்டலில் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே ஆஷ்லி ஜுட் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஹொலிவூட் விருது பெற்ற சிறந்த நடிகையும் எழுத்தாளரும் ஐக்கிய நாடுகள் சபையின் சனத்தொகை நிதியத்தின் நல்லிணக்கத் தூதுவர் ஆஷ்லி ஜுட் கடந்த 3 ஆம் திகதி இலங்கை வந்தார்.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு வந்துள்ள ஆஷ்லி, நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று பெண்களின் நிலை தொடர்பாக ஆராய்ந்து கருத்துக்களை பெற்றுக் கொண்டதோடு விழிப்புணர்வு கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டுள்ளார்.

மேலும் பெரதெனிய பல்கலைக்கழகத்திற்கு சென்று இளம் மாணவிகள் எதிர்நோக்கும் பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பாக கேட்டறிந்ததோடு எதிர்காலத்தில் அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களையும் வகுத்துள்ளார்.

கொழும்பிலுள்ள பெண்கள், மகளிர் வைத்தியசாலைக்கு சென்று கர்ப்பிணித் தாய்மார்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கேட்டறிந்துள்ளார்.


பிரபல பெண்கள் தொழிற்சாலையொன்றிக்கு சென்றும் வேலை செய்யும் இடங்களில் பெண்களின் நிலை, வாழ்வாதாரம், பாலியல் தொல்லைகள் மற்றும் தற்காப்பு செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடியுள்ளார்.

தொடர்ந்து இலங்கை பெண்களுக்கு பல வழிகளிலும் ஆதரவாக இருக்கப் போவதாகவும் அவர்களுக்கு விழிப்புணர்வு கல்வி வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கப் போவதாகவும் தெரிவித்தார்.

பாலியல்சமத்துவம், இனம், மதம், மொழி வேறுப்பாட்டைக் கடந்து ஒவ்வொருவரது உள்ளத்திலும் பெண்களை பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணப்பாடு தோன்ற வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

ஊடகவியலாளர் ஒருவரினது கேள்விக்குப் பதிலளித்த ஆஷ்லி, தனது இந்த விஜயத்தின் போது யுத்தகளமாக இருந்த வட பகுதிக்கு விஜயம் மேற்கொள்ளாததையிட்டு தான் மிக வருத்தமடைவதாகவும் எதிர்கால இலங்கை விஜயத்தின் போது வடபகுதிக்கு சென்ற அங்கு பாதிக்கப்பட்ட பெண்களை சந்தித்து பேச முன்னுரிமை வழங்குவதாகவும் தெரிவித்தார். (இ-7)

# உதயங்கவிற்கும் கோத்தபாயவிற்கும் தொடர்புள்ளதாக ஜே.வி.பி.சந்தேகம்



(கொழும்பு)

உதயங்க வீரதுங்கவிற்கும் கோத்தபாய ராஜபக்ஷவிற்கும் தொடர்புகள் உள்ளன என்ற சந்தேகம் எழுகின்றது. எனவே விசாரணைகளை முன்னெடுத்து உண்மைகளைக் கண்டறிய வேண்டும் என விஜித ஹேரத் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று முன்தினம் கட்சி தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

குமரன் பத்மநாதன் விடயத்தை போன்றே உதயங்க வீரதுங்கவின் குற்றமும் மூடிமறைக்கப்பட்டு விரையில் சுதந்திரமாக நடமாடுவார்.

இவர்களின் கைதுகள் அனைத்தும் கண்துடைப்பு நாடகம். இன்று நாட்டின் பிரதான கோசமாக ஊழலை ஒழிப்போம் என்ற கோசமே காணப்படுகின்றது.

இதில் மக்கள் விடுதலை முன்னணி ஆரம்பத்தில் இருந்தே பாரிய போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

உதயங்க வீரதுங்க விடயத்தில் இன்று கோத்தபாய ராஜபக்ஷ அவசரப்பட்டு கருத்து தெரிவித்து வருகின்றார். இத்தனை காலமாக உதயங்க விடயத்தில் கருத்து முன்வைக்காத கோத்தபாய ராஜபக்ஷ இன்று உதயங்கவின் கைதின் பின்னர் வாய் திறக்கின்றார். இந்த கால கட்டத்தில் கோத்தபாய ராஜபக்ஷ அமெரிக்காவில் தான் இருந்தார். உதயங்க வீரதுங்கவும் அமெரிக்கவிற்கு தப்பி செல்லவே முயற்சித்துள்ளார். ஆகவே இவை அனைத்தின் பின்னணியிலும் தொடர்பு இருக்கலாம். விசாரணைகள் மூலமாக கண்டறியுங்கள். எவ்வாறு இருப்பினும் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். நிதி ஊழல் குற்றவாளிகள், கொலையாளிகள், கொள்ளைக்காரர்கள் என அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### ஒரு விடயமும் தங்காதா?

சில பேர்களிடம் பேசவே தயக்கமாக இருக்கிறது. எதை இவர்களிடம் சொன்னாலும் சரி மறுநாளே அது தண்டோரோ போடப்படுகிறது.

இவர்கள் மிக ஆபத்தானவர்கள். இந்தக் குணம் நம்மிடம் கொஞ்சமாக இருந்தால் கூட அதை விரட்டியடிக்கப் பார்க்க வேண்டும். நாம் ஏன் ஒன்றையும் தங்கவிடாத ஓட்டைப் பாத்திரமாக இருக்க வேண்டும்?

இந்த ஓட்டைகளைக் கொஞ்சம் அடைக்கப் பார்ப்போமா? நம்மை எல்லோரும் விரும்ப வேண்டுமானால் அதற்கு இரண்டு அடிப்படை விடயங்கள் அவசியம். முதலாவது அவர்களுக்கு மிக உதவியாக இருப்பது. இரண்டாவது உபத்திரவம் தராமல் இருப்பது.

மற்றவர்கள் நம்மை நெருக்கமானவர்கள் என்று கருதிக் கொண்டு நம்மிடம் மனம்விட்டுப் பகிர்ந்து கொண்ட செய்திகளை மற்றவர்களுக்குச் சொல்லும் உரிமையை நமக்கு யார் தந்தார்கள்?

இப்படிப் பகிர்ந்து கொள்வதால் நமக்குக் கிடைக்கும் சிறுசிறு சந்தோசம் முக்கியமா? அவரது நட்பு முக்கியமா?

இப்படிச் சொல்லப்படுகிற விடயங்கள் அனைத்தையும் பரப்பிக் கொண்டே இருந்தால் நமக்கென்று யார் மிஞ்சுவார்கள்.

மற்றவர்களைப் பற்றிய விடயங்களைப் பகிர்ந்து கொள்வதுதான் தலையாய சந்தோசம் என்று நினைக்கிற மனோபாவம் எப்போது மாறப் போகிறது?

இந்தப் பழக்கத்தைத் தொடர்ந்தால் எப்படி மற்றவர்களுடன் நெருக்கம் வரும்? இந்த நெருக்கத்தினால் நாம் அடையப் போகும் நன்மைகளை ஏன் விட்டுக் கொடுக்க வேண்டும்?

ஒருவரைப் பற்றிய செய்திகளை நாம் சொல்லச் சொல்ல அட! அப்படியா! என்று அவர் வியப்பதற்கும் அவர்கள் முகத்தில் தோன்றும் சில அதிர்ச்சியைப் பார்ப்பதற்கும் நம் நலன்களையா விலையாகக் கொடுப்பது? இது மடமையல்லவா?


இதைவிட அவர்களது அன்புக்குப் பாத்திரமாகி இவரிடம் எதைச் சொன்னாலும் அது விவகாரமாகிவிடாது. மாறாக நம் மனச் சுமையை இறக்கி வைக்கும் சுமை தாங்கியாக இவர் இருக்கிறார் என்கிற நல்ல நினைப்பை அடுத்தவர்களிடம் விதைக்கிற சந்தோசமல்லவா நிரந்தரமான சந்தோசம்.

**லேனா தமிழ்வாணன்**

## பதிவு செய்யப்பட்ட கடன்தொகை 10 ட்ரில்லியன்

# உண்மையான கடன்தொகையை கணக்கெடுக்க முடியவில்லை

## -கணக்காய்வாளர் நாயகம் காமினி-



(கொழும்பு)

தற்போது பதிவு செய்யப்பட்டதற்கமைவாக நாட்டின் கடன் தொகை 10 ட்ரில்லியன்களாக காணப்படுகின்ற போதிலும் உண்மையான கடன்தொகையை கணக்கெடுக்க முடியாதுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் எச்.எஸ்.காமினி விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னைய ஆட்சியாளர்களின் நடவடிக்கைகள் காரணமாக இன்று பெரும் பொருளாதார நெருக்கடிகள் எழுந்துள்ளதாக சுட்டிக்காட்டிய கணக்காய்வாளர் நாயகம், நாட்டின் கடன் தொகையை கணக்கெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

முன்னைய ஆட்சிக்காலத்தில் அளவுக்கு அதிகமாக கடன்களை பெற்றதாலும், கடன் விபரங்களைப் புத்தகங்களில் இருந்து நீக்கியதாலும், கடன்களை இடமாற்றியதாலுமே இந்த பிரச்சினைகள் தோன்றியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

குறிப்பாக நிதியமைச்சின் முன்னாள் செயலாளர் நாட்டின் பொருளாதார கட்டுக்கோப்புக்களை முழுமையாக சீர்குலைத்துள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-7)

## அரச நடன விழா போட்டிகளில் வெற்றியீட்டியோர் விபரம் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மட்ட அரச நடன விழா - 2018 போட்டிகளில் வெற்றியீட்டியவர்களின் பெயர் விபரங்கள் யாழ்.மாவட்ட கலாசார பிரிவால் வெளியிடப்பட்டுள்ளன.

உள்ளக அலுவல்கள் வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் அரச நடனம் மற்றும் நாட்டிய நாடக ஆலோசனைக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட 2018 ஆம் ஆண்டின் அரச நடன விழாவுக்கான மாவட்ட மட்ட போட்டிகள் நாடளாவிய ரீதியில் இடம்பெற்று வருகின்றன.

யாழ்.மாவட்டத்துக்கான போட்டிகள் கடந்த 5 ஆம் திகதி சங்கானை கலாசார மத்திய நிலையம் மற்றும் சங்கானை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. அந்த வகையில் அன்றைய தினம் 88 போட்டிகள் இடம்பெற்றன. அதில் வெற்றியீட்டியவர்களின் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**தனி நடனம் சப்தம்**-முதலாம் இடம் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, 2 ஆம் இடம் சண்டிலிப்பாய் கலாசார மத்திய நிலையம், 3 ஆம் இடம் உடுவில் மகளிர் கல்லூரி. **ஒயிலாட்டம்**-முதலாம் இடம் ஹிமாலயா நடனாலயம், 2 ஆம் இடம் கொக்குவில் இந்துக்கல்லூரி, 3 ஆம் இடம் யாழ்.உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, **கோலாட்டம்**- முதலாமிடம் யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை , 2 ஆம் இடம் சென்.ஜோன்ஸ் கல்லூரி , 3 ஆம் இடம் நர்த்தனாலயா. **புதிய நிர்மானம் சாஸ்திரிய நடனம்**- முதலாமிடம் வேம்படி மகளிர் கல்லூரி, 2 ஆம் இடம் தாணிகா கலைக் கல்லூரி, 3 ஆம் இடம் பதஞ்சலி சேத்ர நடனாலயம்.

**கீர்த்தனம்**- முதலாமிடம் நர்த்தன சித்திர கலை மன்றம், 2 ஆம் இடம் தெல்லிப்பழை கலாசார மத்திய நிலையம், 3 ஆம் இடம் நடனேஸ்வராலயா. **குறவன் குறத்தி**-முதலாமிடம் ஹிமாலயா நடனாலயம், 2 ஆம் இடம் ஹெல்தி என்ரர்ரைமன்ற்மீடியா. **தில்லானா**-முதலாமிடம் நர்த்தனாலயா.

**வர்ணம்**-முதலாமிடம் நர்த்தன ஹேத்திரா, 2 ஆம் இடம் யாழ்ப்பாண அரங்க கலையகம். **கரகாட்டம்**-முதலாமிடம் நர்த்தன ஹேத்திரா, 2 ஆம் இடம் வசந்தம் இசைக்குழு. **புதிய நிர்மானம் தனிவாத்தியம்**-முதலாமிடம் சென்.ஜோன்ஸ் கல்லூரி, 2 ஆம் இடம் யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரி. **புதிய நிர்மானம்**- முதலாமிடம் ஆனந்தா இசைக்கல்லூரி, 2 ஆம் இடம் யாழ்.விக்ரோரியாக் கல்லூரி. **தனிவாத்தியம்**-முதலாமிடம் தொன்மம் கலைக்குழு, 2 ஆம் இடம் வசந்தம் இசைக்குழு. **குழு வாத்தியம்**- ஸ்ரீசாயி கலைக் கழகம் ஆகியன போட்டிகளில் வெற்றியீட்டியுள்ளன.

இவர்களில் முதலாமிடம் பெற்றவர்கள் தேசிய ரீதியிலான போட்டிக்கு தெரிவு செய்யப்படவுள்ளனர். தேசிய ரீதியிலான போட்டி எதிர்வரும் மார்ச்மாதம்24 ஆம்திகதி வவுனியா நகராட்சி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ-9)

## கூட்டு பாலியல் குற்றவாளிகளுக்கு இருபது ஆண்டுகள் கடூழியச்சிறை

(கொழும்பு)

கூட்டுப் பாலியல் வன்புணர்வுக் குற்றச்சாட்டில் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்ட நான்கு பேருக்கு 20 வருடங்கள் கடூழிய சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

அரலங்கவில பகுதியில் 2004ஆம் ஆண்டு பெண் ஒருவர் நான்கு பேரால் கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார். இது குறித்த வழக்கு விசாரணைகள் அண்மையில் நிறைவுற்றன.

இவ்வழக்கில் சந்தேக நபர்களாகக் கருதப்பட்டவர்கள் நீதிபதியால் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டனர். இதையடுத்து, நான்கு பேருக்கும் இருபது ஆண்டு கால கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், குற்றவாளிகள் நால்வரும் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு தலா இரண்டு இலட்ச ரூபாய் அபராதம் செலுத்த வேண்டும் எனவும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## இலங்கையுடனான எதியோப்பிய நல்லுறவு மேம்படுத்தப்படும்



(கொழும்பு)

இலங்கையுடனான நல்லுறவை மேம்படுத்துவதற்காக எதியோப்பிய அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக ஆசிய மற்றும் ஓசியானியா பிரிவின் பணிப்பாளர் நாயகம் Tsegab Kebebew தெரிவித்துள்ளார்.

எதியோப்பியா இலங்கையுடன் அரசியல், பொருளாதாரம், கலாசாரம் உள்ளிட்ட விடயங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க திட்டமிட்டுள்ளது.

எதியோப்பிய தூதரகத்தில் இடம்பெற்ற இலங்கையின் 70ஆவது சுதந்திர தின வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஆசிய மற்றும் ஓசியானியா பிரிவின் பணிப்பாளர் நாயகம் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய இலங்கைக்கான எதிரோப்பிய தூதுவர் சுமித் திசாநாயக்க இலங்கைக்கும் எதியோப்பியாவிற்கும் இடையில் கடந்த சில வருடகாலமாக ஏற்பட்ட நல்லுறவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக விபரித்தார். (இ-7)

## நட்டஈடு வழங்கும் நடவடிக்கை பூர்த்தி

(கொழும்பு)

உமா ஓயா வேலைத்திடம் காரணமாக பாதிக்கப்பட்டோருக்கு நட்டஈடு வழங்கும் நடவடிக்கை பூர்த்தி யடைந்துள்ளதாக, சட்டமா அதிபர் உயர் நீதிமன்றில் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

உமாஓயா வேலைத்திட்டத்தால் பாதிக்கப்பட்டோர் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த மனு எதிர்வரும் மார்ச் மாதம் 28 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (இ-7)

# "கழுத்தை அறுக்கும் பிரிகேடியர் பிரியங்க"

# ஜனாதிபதி மைத்திரி உத்தரவு குறித்து எந்தத் தகவலும் கிடைக்கவில்லை

## -வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மஹிஷினி-

(கொழும்பு)

பிரித்தானியாவிலுள்ள இலங்கைத் தூதரகப் பாதுகாப்பு ஆலோசகர் பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட்ட, பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவை மீண்டும் பணியில் அமர்த்தும், ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவின் உத்தரவு தொடர்பாக தமக்கு எதுவும் தெரியாது என்று வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மஹிஷினி கொலன்ன தெரிவித்துள்ளார்.



புலம்பெயர் தமிழர்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்ட பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவை, பாதுகாப்பு ஆலோசகர் பணியில் இருந்து இடைநிறுத்துவதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவித்திருந்தது.

எனினும், இந்த உத்தரவை இரத்துச் செய்து, மீண்டும் அவரைப் பணியில் சேர்த்துக் கொள்ளுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் உத்தரவிட்டிருந்தார்.

இது தொடர்பாக வெளிவிவகாரச் செயலருக்கு, ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன அறிவித்திருந்தார்.

ஆனால், பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவை மீண்டும் பணியில் சேர்க்கும் ஜனாதிபதி உத்தரவு தொடர்பாக தமக்கு எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என்று வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மஹிஷினி கொலன்ன தெரிவித்துள்ளார். (இ-7)

# அர்ஜூன் மகேந்திரனுக்கு எதிரான சட்ட நடவடிக்கை தாமதமாகலாம்

## ஐ.தே.க.பிரதியமைச்சர் எரான் கூறுகிறார்



(கொழும்பு)

அர்ஜூன் மகேந்திரனுக்கு எதிரான சட்டநடவடிக்கைகள் சற்று தாமதப்படலாம் என்று பிரதியமைச்சர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் புதன் கிழமை மாலை கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட பிரதியமைச்சர் எரான் விக்கிரமரத்ன, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன் மகேந்திரனுக்குப் பிணை முறி மோசடி விவகாரம் தொடர்பில் நீதிமன்றம் உத்தரவொன்றைப் பிறப்பித்துள்ளது.

எனினும் இலங்கையின் சட்டதிட்டங்களின் பிரகாரம் அர்ஜூன் மகேந்திரனுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் மெதுவாகவே முன்கொண்டு செல்லப்படும். அவருக்கு எதிராக உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள சட்டத்தில் இடமில்லை.

அதே நேரம் இந்த ஆண்டு ஓகஸ்டில் நிறுவப்படவுள்ள விசேட உயர் நீதிமன்றக் கட்டமைப்பு மூலமாக மோசடிகளில் ஈடுபட்டவர்கள் அனைவரும் தண்டிக்கப்படுவார்கள். அர்ஜூன் மகேந்திரனுக்கும் அது பொருந்தும்.

பிணைமுறி மோசடிகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் கடந்த ஆட்சியிலும் பிணைமுறி மோசடிகள் இடம் பெற்றுள்ளமை குறித்து விசாரணை நடத்த சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் இந்த விவகாரத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ



மற்றும் அவரது உறவினர்கள், அவருடைய அரசாங்கத்தில அமைச்சர்களாக இருந்தவர்கள் என பலரும் எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கைகளில் சிக்கிக் கொள்ள நேரிடும் என்றும் பிரதியமைச்சர் எரான் விக்கிரமரத்ன மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# பட்டப்பகலில் மகிந்த பாரிய கொள்ளை!

## துமிந்த குற்றச்சாட்டு

(கொழும்பு)

மத்திய வங்கி பிணை முறி மோசடியை விடவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஊழல் மோசடிகளில் ஈடுபட்டார் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் இடம்பெற்ற மிகப் பெரிய மோசடி மத்திய வங்கி பிணைமுறி மோசடி கிடையாது. பிணைமுறி கொடுக்கல்-வாங்கல்களிலும் பார்க்க பாரிய மோசடி இடம்பெற்றது.

பட்டப்பகலில் மகிந்த பாரிய கொள்ளையில் ஈடுபட்டுள்ளார்.



மகிந்தவின் நடவடிக்கைகள் சரியில்லை என்ற காரணத்தினால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை மக்கள் ஜனாதிபதியாக நியமித்தனர்.

நாட்டை பாதுகாத்துக் கொடுத்த காரணத்திற்காக கிராமங்களின் அபிவிருத்தியை தடுத்து நிறுத்த முடியாது என துமிந்த திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# மகிந்தவின் மேலதிக செயலருக்கு பிணை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மேலதிக செயலாளர் கே.டீ. குணரத்னவுக்கு நேற்றுப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்துக்கு வாகனங்களை கொள்வனவு செய்யும்போது 157 இலட்சம் ரூபாய் அரச நிதியை மோசடி செய்த சம்பவத்தில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கே. டீ. குணவர்தனவை பிணையில் விடுவிக்க கோட்டை நீதவான் லங்கா ஜயரத்ன நேற்று உத்தரவிட்டுள்ளார். 50,000 ரூபாய் ரொக்கப் பிணையிலும், 5 இலட்சம் ரூபாய் வீதம் 2 சரீரப் பிணையிலும் பிணை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.


குறித்த வழக்கின் இரண்டாவது சந்தேகநபரான ஜனாதிபதி செயலகத்தின் முன்னாள் கணக்காய்வாளர் எல். ஜீ. குணவர்தனவின் பிணை மனுவினை நீதிமன்றம் நிராகரித்துள்ளது. (இ-7)

# தொடர்ந்து குறிவைக்கப்படும் ஐ.தே.க. மலிக்கிற்கு எதிராகவும் முறைப்பாடு

(கொழும்பு)

காணி முறைகேடு தொடர்பாக அமைச்சர் மலிக் சமரவிக்ரமவிற்கு எதிராக இலஞ்ச ஊழல் எதிர் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கோட்டை நகர சபையின் முன்னாள் தலைவர் ஜனக்க ரணவக்க, நேற்று முன்தினம் புதன்கிழமை இந்த முறைப்பாட்டை முன்வைத்துள்ளார்.



கோட்டை நகரசபைக்கு சொந்தமான காணியொன்றை அமைச்சர் மலிக் சமரவிக்ரம தமது தேவைக்காகப் பயன்படுத்தியதாக குறித்த முறைப்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதனால் அரசாங்கத்திற்கு பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் இதற்கெதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி விவகாரத்தில் ஏற்கனவே ஐ.தே.க வினர் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டதோடு குறிப்பாக மலிக் சமரவிக்ரமவிற்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தமிழர்களை கழுத்தை அறுத்துக் கொல்வேன் என்ற பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவை பிரிட்டன் நாடு கடத்த வேண்டும்

## வைகோ கடும் காட்டம்

(சென்னை)

லண்டனில் ஈழத் தமிழர்களுக்கு கொலை மிரட்டல் விடுத்த சிங்கள இராணுவப் பிரிகேடியரை நாடு கடத்த வேண்டும் என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி 4ஆம் திகதி பிரிட்டனிலுள்ள இலங்கைத் தூதுவர் அலுவலகத்தில் சிறப்பு நிகழ்ச்சிகள் நடந்தன.

தமிழீழத்தில் இலட்சக்கணக்கான தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டதைக் கண்டித்தும், இனப் படுகொலைக்கு நீதி கேட்டும் பிரிட்டன் இலங்கை தூதராலயம் முன்பு ஆயிரக்கணக்கான புலம்பெயர் ஈழத் தமிழர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது அங்கு வந்த இலங்கைத் தூதரக இராணுவப் பாதுகாப்பு ஆலோசகர் பிரியங்க பெர்னாண்டோ, ஈழத் தமிழர்களைப் பார்த்து, "கழுத்தை அறுத்து விடுவேன்" என்று சைகை காட்டினார்.

இதைக் கண்டு கொதித்து எழுந்த ஈழத் தமிழர்கள், மிரட்டல் விடுத்த இலங்கை இராணுவ அதிகாரி பிரியங்க பெர்னாண்டோவை பிரிட்டன் அரசு பணி நீக்கம் செய்து பிரிட்டனை விட்டு வெளியேற்ற வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளனர்.

இலங்கையில் நடைபெற்ற தமிழினப் படுகொலையில் பிரியங்க பெர்னாண்டோ, குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட வேண்டிய கொலைகாரன் ஆவார்.

2008 ஆம் ஆண்டு நடந்த இறுதிக்கட்டப் போரின் போது, முல்லைத்தீவிலுள்ள வைத்தியசாலைகள் மீது வெடிகுண்டுகள் வீசி நோயாளிகளையும், பொது மக்களையும் கொன்ற இலங்கை இராணுவத்தின் 59ஆவது பிரிவுக்கு பிரியங்க பெர்னாண்டோதான் தலைமை வகித்தவர்.



முள்ளிவாய்க்காலில் ஈழத் தமிழர்கள் படுகொலையில் இவருக்குத் தொடர்பு இருக்கிறது. போர்க்குற்றம் செய்து, ஈழத் தமிழர் இனப் படுகொலையை முன்னின்று நடத்தியமைக்காக பிரியங்க பெர்னாண்டோவுக்கு 2014 இல் மகிந்த ராஜபக்ஷ, பிரிகேடியர் என்ற உயர் விருது அளித்து பாராட்டியிருக்கிறார்.

ஈழத்தமிழர் இனப் படுகொலைக்காகப் பன்னாட்டு நீதிமன்றத்தில் போர்க் குற்றவாளியாக நிறுத்தப்பட வேண்டிய மகிந்த ராஜபக்ஷவுடன் பிரியங்க பெர்னாண்டோ போன்ற சிங்கள இராணுவத் தளபதிகளும் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் ஆவர்.

இத்தகைய கொலைக் குற்றவாளி, பிரிட்டனில் உள்ள இலங்கைத் தூதுவர் அலுவலகத்தின் பாதுகாப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டது இலங்கை அரசின் கோர முகத்தை வெளிப்படுத்துகிறது. இது மன்னிக்கவே முடியாத மாபாதக நடவடிக்கையாகும்.

புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களின் தேசிய சுய நிர்ணய உரிமைப் போராட்டத்தின் நியாயத்தையும், தமிழீழத்துக்காக நடத்தப்படும் அறவழி ஆர்ப்பாட்டத்தின் நோக்கத்தையும் பிரிட்டன் அரசு பரிவுடன் உணர்ந்து கொண்டிருக்கிறது.

கடந்த 30 ஆண்டு காலமாக இலங்கை சிங்களப் படைகளின் கொலைவெறியிலிருந்து தப்பி ஈழத் தமிழர்கள் பிரிட்டனுக்கு அகதிகளாக வந்தபோது அரவணைத்துக் கொண்டது பிரிட்டன்.

அத்தகைய நாட்டின் தலைநகரம் லண்டனில், 'ஈழத் தமிழர்களின் கழுத்தை அறுப்பேன்' என்று மிரட்டல் விடுக்கும் இலங்கை இராணுவத் தளபதி பிரியங்க பெர்னாண்டோ இலங்கையில் அப்பாவி ஈழத் தமிழர்களுக்கு எதிராக நடந்த போரில் எப்படியெல்லாம் தமிழ் மக்களை துன்பப்படுத்தியிருப்பார் என்பதை உணர முடிகிறது.

லண்டனில் 'ஈழத் தமிழர்களைக் கொல்வேன்' என்று மிரட்டல் விடும் வகையில், சைகை காட்டிய இலங்கை இராணுவ அதிகாரி பிரியங்க பெர்னாண்டோவை பிரிட்டன் உடனடியாக நாடு கடத்த வேண்டும்.


இந்திய அரசு, சிங்கள இராணுவ அதிகாரி பிரியங்க பெர்னாண்டோவின் நடவடிக்கைக்காக சிங்கள அரசுக்குக் கடும் கண்டனத்தைப் பதிவு செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1324

Search for people, places and things | Nagendram Home

### விஷ்ணுப்பிரியா

எல்லா பஸ்லயும் "திருடர்கள் ஜாக்கிரதை"னு போட்டிருங்காங்களே?



நியாயமா பயணிகள் ஜாக்கிரதைனுதானே போடணும்

### பிரியங்கா


நைட்டு தூக்கமே வரமாட்டேங்குது... ஏன்னு தெரியாம இருந்தேன்... அப்புறம்தான் தெரிஞ்சுது...



உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காதாம்... இது தெரியாம நான் வேற பயந்தே போய்ட்டேன்...

### சோபிகா

பொய் சொல்றவன் மனுஷன்...



பொண்டாட்டி நம்பிற மாதிரி பொய் சொல்றவன் பெரிய மனுஷன்

### ஹர்ஷினி

எல்லோருக்கும் வாழ்க்கை வட்டமா இருக்கும்



எனக்கு மட்டும் ரொம்ப மட்டமா இருக்கு என்னானு தெரியலயே...

### ஹரீஷ்

போனவருசம் வெயிலுக்கு மூஞ்சி ஆதார் கார்ட்ல உள்ள மாதிரி மாறிச்சு



இந்த வருஷம் அடிக்கிற வெயிலுக்கு மூஞ்சி ஆதார் கார்ட் ஜெராக்ஸ்ல உள்ள மாதிரி மாறிடும் போல...

### ரேஷ்மிக்கா

உன் இஷ்டம்ன்னு கணவன் சொல்லிட்டா விடயம் முடிந்ததுன்னு அர்த்தம்...



உங்க இஷ்டம்னு மனைவி சொல்லிட்டா விடயமே அப்போதான் ஆரம்பிக்குதுன்னு அர்த்தம்...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கழுத்தை அறுத்துக்கொல்வேன் என்று புலம்பெயர்ந்துள்ள விடுதலைப் புலிகளுக்கு பிரியங்க போன்று பதில் கூற வேண்டும்

## தூதரக அதிகாரிகள், சிங்களவர்களுக்கு முலுகல்லே தேரர் அறிவுரை

(கொழும்பு)


**இலங்கை தூதரக அதிகாரிகளும் சிங்களவர்களும், புலம்பெயர்ந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பதில் கூற பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவை முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டும் என பௌத்த தகவல் கேந்திர நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப் பாளர் முலுகல்லே ஸ்ரீ ஜினானந்த தேரர் தெரிவித்துள்ளார்.**

லண்டனில்துாதரக சேவையில் மீண்டும் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவை இணைத்தமைக் காக நன்றி தெரிவிப்பதற்காக நேற்றுக் காலை கொழும்பிலு ள்ள வெளிவிவகார அமைச்சிற்கு சென்றிருந்த அவர் குறித்த நடவடிக்கையை பாராட்டி கடிதமொன்றை கையளித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "புலம்பெயர் தமிழ் மக்களுக்கு மரண அச்சுறுத்தல் விடுத்ததாக குற்றம் சாட்டப்பட்ட பிரித்தானியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் பாதுகாப்பு விவகாரங்களுக்கு பொறுப்பான அதிகாரி பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவை மீண்டும் பணியில் அமர்த்த முடிவெடுக்கப்பட்டதையிட்டு வெளிவிவகார அமைச்சுக்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

அவரை மீண்டும் அப்பதவியில் நியமிக்கும்படி ஏற்கனவே நாங்கள் வலியுறுத்தியிருந்தோம். அந்த வகையில் மிகவிரைவில் அவரை அப்பதவிக்கு திரும்பச் செய்வதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பிரசாத் பிரியதர்ஷன எமது கோரிக்கை கடிதத்தை ஏற்றுக் கொண்டார்.

உண்மையிலேயே புலம்பெயர்ந்துள்ள விடுதலைப் புலிகளின் குழுக்களால் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தின்போது அவர்களின் கழுத்தை அறுப்பதாக பிரிகேடியர் எச்சரிக்கை விடுக்க வில்லை. ஆனால் அப்படியொரு எச்சரிக்கையையே தங்களுக்கு விடுத்திருப்பதாக பிரித்தானிய நாடாளுமன்றத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.



இருந்த போதிலும் விடுதலைப் புலிகளின் தலைவர்களுக்கு நேர்ந்ததைப் போன்றே உங்களது தலையையும் இழக்கநேரிடும் என்ற செய்தியையே பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ வழங்கியிருக் கின்றார்.

விடுதலைப் புலிகளின் புலம்பெயர்ந்த குழுவினர் இலங்கைக்கு எதிராக வெளிநாட்டு அமைச்சுக்கள், நாடாளுமன்றங்களில், முறைப்பாடு செய்யப்படுவதை புலம்பெயர் சிங்களவர்கள் உன்னிப்பாக பார்க்க வேண்டும்.

எனவே புலம்பெயர்ந்த விடுதலைப் புலிகளின் குழுவினர் செய்வதை பார்க்கிலும் அதிகமாக அவர்களுக்கு பதில் வழங்க புலம்பெயர் சிங்களவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவை முன்னுதாரணமாக எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்" எனத் தெரிவித்தார். (இ-7)

## ஊழல் வழக்கில் சிக்கிய பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் கலதாவுக்கு 5 ஆண்டுகள் சிறை



(டாக்கா)

அறக்கட்டளைக்கு முறைகேடாக நன்கொடை பெற்றதாக தொடரப்பட்ட வழக்கில் பங்களாதேச முன்னாள் பிரதமர் கலிதா ஜியாவுக்கு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ்நாட்டின் பிரதமராக பதவி வகித்த கலிதா ஜியா ஆட்சிக் காலத்தின் போது அவரது பெயரால் இயங்கிவரும் அறக்கட்டளைகளுக்காக வெளிநாடுகளில் இருந்து முறைகேடாக பல இலட்சம் அமெரிக்க டொலர்கள் நன்கொடை பெற்றதாக குற்றச்சாட்டு எழுந்தது. இது தொடர்பாக கலிதா ஜியா அவரது மகன் தாரிக் ரஹ்மான் மற்றும் உதவியாளர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு டாக்காவில் சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றது.

அரசியல் காழ்ப்புணர்ச்சியால் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும், மறுவிசாரணைக்கு உத்தரவிட வேண்டும்என்றும்கலிதா ஜியா சார்பில் உயர் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. ஆனால், மறு விசாரணைக்கு உத்தரவிட முகாந்திரம் இல்லை என்று கூறிய உயர் நீதிமன்றம் கலிதா ஜியாவின் மனுவை தள்ளுபடி செய்தது.

உச்ச நீதிமன்றம் இந்த தீர்ப்பை உறுதி செய்தது. இதையடுத்து சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வந்தது.

இந்நிலையில், ஜியா அநாதை இல்ல அறக்கட்டளைக்கு முறைகேடாக 2.5 இலட்சம்டொலர்கள்நன்கொடை பெற்றதாக தொடரப்பட்ட வழக்கின் விசாரணை முடிவடைந்ததையடுத்து நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

கலிதா ஜியா (வயது 72) மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதால் அவருக்கு 5 ஆண்டுகள்சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. கலிதா ஜியாவின் மகன் தாரிக் ரஹ்மான் மற்றும் 4 பேருக்கு தலா 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கலிதா ஜியா வழக்கில் தீர்ப்பு வழங்கப்படுவதையொட்டி டாக்காவின் அனைத்து பகுதிகளிலும் ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (இ-8-10)

## லசந்த படுகொலை வழக்கு மீது குற்றப்புலனாய்வு பிரிவு கூடுதல் கவனம்

(கொழும்பு)

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பாக விளக்கமளிக்க முன்னாள் பொலிஸ்மா அதிபர் ஜயந்த விக்ரமரட்ன மற்றும் முன்னாள் உதவி பொலிஸ்மா அதிபர் பிரசன்ன நாணயக்கார ஆகியோருக்கு அழைப்பாணை அனுப்பும் முயற்சியில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் இறங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

லசந்த விக்மரதுங்க படுகொலை செய்யப்பட்ட காலப்பகுதியில், இவ்விருவருமே கல்கிஸ்ஸ பொலிஸ் பிரிவுக்குப் பொறுப்பு வகித்திருந்தனர்.



லசந்தவின் கொலை தொடர்பான முக்கிய தடயங்களைத் தடுத்து வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்களிடமிருந்து விளக்கங்கள் பெறப்படவுள்ளன.

ஏற்கனவே; மேற்படி கொலைச் சம்பவம் குறித்த விசாரணைக்காக இவ்விருவரும் மற்றொரு உயரதிகாரியும் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்களாக குற்றப் புலனாய்வுப் பொலிஸார் கல்கிஸ்ஸ நீதவான் நீதிமன்றில் மனு அளித்திருந்தனர்.

அதன் பேரில், இவர்கள் மூவருடைய கடவுச் சீட்டுக்களையும் நீதிமன்றம் பறிமுதல் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சர்வதேச பொலிஸாரின் அனுமதியுடன் நான் விடுதலை செய்யப்பட்டேன்

### உதயங்க வீரதுங்க அறிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச பொலிஸாரின் அனுமதியுடன் தான் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது பேஸ்புக் பக்கத்தில் தெரிவித்துள்ளதாவது,

கடந்த 4ஆம் திகதி அமெரிக்காவுக்கு பயணமாகும் போது டுபாய் விமான நிலையத்தில் வைத்து, அந்நாட்டு சர்வதேச பொலிஸாரால் நிறுத்தப்பட்டு. விசாரணைகளை மேற்கொண்டு. சர்வதேச ரீதியான குற்றச்சாட்டு இல்லை எனவும், சர்வதேச சிவப்பு பிடியாணை இல்லை என்பது உறுதி செய்யப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டேன் எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

## பங்களாதேஷ் ஜனாதிபதி அப்துல் ஹமீது மீண்டும் தேர்வு

வங்கதேஷத்தின் ஜனாதிபதியாக, தற்போதைய ஜனாதிபதி அப்துல் ஹமீது மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நாட்டில் இரண்டாவது முறையாக ஜனாதிபதி பொறுப்பை ஏற்கவிருக்கும் முதல் தலைவர்.

அப்துல் ஹமீதை எதிர்த்துப் போட்டியிட யாரும் முன்வராத நிலையில், அவர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

74 வயதாகும் அப்துல் ஹமீது கடந்த 2013 ஆம்ஆண்டு ஜனாதிபதியாகப் பதவியேற்றார். தற்போது அவர் மீண்டும் 5 ஆண்டுகளுக்கு ஜனாதிபதியாகப் பதவி வகிப்பார். (8-10)

# தமிழர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்த பிரியங்கவை பதவிநீக்கக்கோரி லண்டனில் இன்று போராட்டம்

## மகிந்த வழியில் மைத்திரி என்று விசனம்

(லண்டன்)

லண்டனில் தமிழர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்த பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவை உடன் பதவி நீக்கம் செய்யுமாறு வலியுறுத்தி இன்று 9ஆம் திகதி லண்டனில் போராட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

தமிழ் ஒற்றுமை (Tamil Solidarity) பிரிட்டனின் தமிழ் இளைஞர்கள் அமைப்பு உள்ளிட்ட அமைப்புகள் இந்தப் போராட்டதை முன்னெடுக்க உள்ளன. குறித்த போராட்டமானது இன்று வெள்ளிக்கிழமை லண்டனிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்துக்கு முன்னால், ஆரம்பித்து வெளி விவகார மற்றும் பொதுநலவாய அலுவலகத்துக்கு முன்னால் நிறைவடையும் என தமிழ் ஒற்றுமை அமைப்பு அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

குறித்த பிரிகேடியர் பதவி நீக்கப்பட்டு, பின்னர் ஜனாதிபதியின் தலையீட்டுடன் மீண்டும் சேவையில் இணைக்கப்பட்டதை அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

காணொலி காட்சி ஆதாரங்களை புறக்கணித்து, விசாரணைகளை முன்னெடுக்காததன் ஊடாக ராஜபக்ஷ ஆட்சியின் தடத்தையே இந்த அரசாங்கமும் பின்பற்றுகின்றது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவை உடன் பதவி நீக்குவதுடன், அவருக்குரிய இராஜதந்திர சிறப்புரிமைகளை நீக்குதல், போர்க்குற்றம் தொடர்பான சுதந்திரமான விசாரணை, காணி அபகரிப்பை நிறுத்துதல், அரசியல் கைதிகள் விடுதலை, நல்லாட்சி மீது நம்பிக்கை இல்லை முதலான மேலும் சில விடயங்களை உள்ளடக்கி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.




இதேவேளை, தமிழர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்து பிரிகேடியர் சைகை செய்யும் காணொலியை தமிழகத்தின் ஊடகமொன்று வெளியிட்டுள்ளதாகவும், அதனை ஒரு இலட்சம் பேர் பார்த்துள்ளதுடன், 4 ஆயிரம் பேர் பகிர்ந்துள்ளதாகவும் குறிப் பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இலங்கை வெளிவிவகார அமைச்சு மற்றும் பிரிட்டனில் முறைப்பாடு செய்வதற்காக ஆயிரம் கையொப்பங்களை திரட்டும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தமிழ் ஒற்றுமை அமைப்பு தெரிவித்துள்ளது. (இ-7)

## இந்தியா-இலங்கை இடையே பாதுகாப்பு கலந்துரையாடல்

(கொழும்பு)

இந்தியா - இலங்கை கடற்படை அதிகாரிகளுக்கிடையிலான பாதுகாப்பு கலந்துரையாடல் 7ஆவது தடவையாக கொழும்பில் இடம் பெற்றது.



நேற்று முன்தினம் வெற்றிகரமாக நிறைவு பெற்ற இப்பாதுகாப்பு கலந்துரையாடலில், கடற்படை நடவடிக்கைகளுக்கான பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் பியால் டி சில்வா தலைமையிலான இலங்கை குழுவினரும் ரியர் அட்மிரல் திரேன் விக் தலைமையிலான இந்திய குழுவினரும் பங்குபற்றினர்.

அயல் நாடுகள் என்ற வகையில் இருநாடுகளுக்கும் இடையிலான கடற் பாதுகாப்பு, உறவுகளை மேம்படுத்தல் போன்ற விடயங்களை பரிமாறிக் கொள்வதே இக் கலந்துரையாடலின் முக்கிய இலக்காக அமைந்தது.

இந்து சமுத்திரத்தில் ஒத்துழைப்பு, ஒன்றிணைந்த செயற்பாடு ஆகியவற்றின் மூலம் பிராந்தியத்தில் செயற்றிறன் மிக்க கடல்வழி பாதுகாப்பை நிலை நாட்டுவதற்காக இரு தரப்பினரும் பரஸ்பரம் இணைந்து செயற்பட வேண்டிய அவசியம் தொடர்பாகவும் இதன்போது கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. (இ-7)

## மாநாட்டில் பங்கேற்பதற்கு பிரதமர் இந்தியா பயணம்

(கொழும்பு)


பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இம்மாத நடுப்பகுதியில் இந்தியாவுக்குப் பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இந்தியாவின் ஐதராபாத் நகரில், எதிர்வரும், 19ஆம் திகதி தொடக்கம், 21 ஆம் திகதி வரை, உலக தகவல் தொழில்நுட்ப காங்கிரசின் 22 ஆவது மாநாடு நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பங்கேற்பார் என்று இந்திய ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த மாநாட்டுக்கு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டுள்ளார். எனினும், இந்தியப் பிரதமர் செயலகம் இன்னமும், அவர் பங்கேற்பதை உறுதிப்படுத்தவில்லை.

உலக தகவல் தொழில்நுட்ப காங்கிரசின் மாநாடு முதல் முறையாக இந்தியாவில் நடக்கவுள்ளது. இந்த மாநாட்டில் 30இற்கும் அதிகமான நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்பர் என்று



எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7)

## இறப்பர் தொழிற்சாலையில் தீ

(கொழும்பு)

காலி - போகஹகொட பிரதேசத்தில் அமைந்துள்ள இறப்பர் தொழிற்சாலையில நேற்றுக்காலை தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

தொழிற்சாலை வளாகத்தில் குவிக்கப்பட்டிருந்த இறப்பரில் இவ்வாறு தீப்பரவல் ஏற்பட்டுள்ள நிலையில் தொழிற்சாலை கட்டடம் அமைந்துள்ள பகுதிக்கு அது பரவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் , தீயினை கட்டுப்படுத்துவதற்காக சம்பவ இடத்திற்கு காலி தீயணைப்பு பிரிவினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## சிம்பாவே பிரஜை கொழும்பில் கைது

(கொழும்பு)

நீர்கொழும்பு பொலிஸ் எல்லைக்குட்பட்ட கடோல்கெலே என்ற இடத்தில் குடிவரவு குடியகல்வு சட்டவிதிகளுக்கு மாறாக விசா அனுமதி இன்றி தங்கியிருந்த வெளிநாட்டைச் சேர்ந்த ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

27 வயது சிம்பாவே நாட்டைச் சேர்ந்தவர். இவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (இ-7)

## இலங்கையில் இலகு ரயில் சேவை

### அமைச்சர் சம்பிக்க தகவல்



(கொழும்பு)

உலகின் பல வளர்ச்சியடைந்த நாடுகளில் பயணிகளின் போக்குவரத்திற்காக பயன்படுத்தப்படும் இலகு ரயில் சேவை இலங்கையிலும் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

அதற்கான ஆரம்ப கண்காணிப்பு நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் எதிர்வரும் ஜூலை மாதம் வரையில் அதன் முக்கிய பணிகள் நிறைவடையும் என அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, இந்த வருட நடுப் பகுதியில் புதிய ரயில் சேவைத் திட்டம் ஆரம்பிக்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

இந்த ரயில் கட்டமைப்பு தற்போதைய திட்டமிடலுக்கமைய 6 வீதி கட்டமைப்புகளில் நிர்மாணிக்கப்படவுள்ளது. அதன் ஆரம்பகட்ட நடவடிக்கையாக மாலபேயில் இருந்து பொரளை வரை ரயில் வீதி நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்த திட்டத்திற்கு 1.3 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் உதவி கிடைக்கவுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் மாலபேயில் இருந்து கொழும்பு கோட்டைக்கு 40 நிமிடங்களில் பயணிக்க முடியும்.

அதற்கமைய 2021ஆம் ஆண்டு வரையில் இந்த திட்டம் நிறைவடையவுள்ளது. இன்னும் 3 வருடங்களில் மின்சார ரயில் பயணிக்கும் சந்தர்ப்பம் இலங்கை மக்களுக்கும் கிடைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது (இ-7)

## தேர்தலுக்காக தேசிய ஆளடையாள அட்டைகள் விநியோகிப்பதற்கான ஒருநாள் சேவை பணிகள் மும்முரம்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக தேசிய ஆளடையாள அட்டையின் முக்கியத்துவம் கருதி அவற்றை ஒருநாள் சேவையில் கிடைக்கச் செய்வதற்கான மும்முரமான பணிகள் இடம் பெற்று வருவதாக ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் வியனி குணதிலக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அரசாங்க தகவல் திணைக்களத்திற்கு அவர் விபரம் வெளியிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தேர்தலில் வாக்களிக்கும்போது நபரொருவர் தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதற்கு 7 வகையான ஆவணங்களை தேர்தல்கள் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

இதில் தேசிய ஆளடையாள அட்டை மிக முக்கிய மானதாகும். அதன் காரணமாக வாக்காளர்களுக்கு தேசிய ஆளடையாள அட்டைகளை ஒருநாள் சேவையின் மூலம் வழங்குவதற்கு ஆட்பதிவுத் திணைக்களம் மும்முரமாக நடவடிக்கையில் ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

தினமும் 1500 தொடக்கம் 2000 வரையிலான தேசிய ஆளடையாள அட்டைகள் ஒருநாள் சேவையின் மூலம் விநியோகிக்கப்படுகின்றன.

ஒருநாள் சேவையில் தேசிய ஆளடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்காக சேவை வழங்குவதற்கு திணைக்களத்தில் மேலதிக பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

பத்தரமுல்ல இசுறுபாய கட்டடத்தில் இயங்கும் ஆட்பதிவுத் திணைக்கள அலுவலகத்தில் ஒருநாள் சேவையைக் கையாள்வதற்கான தேவையான அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)



# சிறுவர் அரங்கம்

## பூங்காவில் ஒரு பாடம்

பூங்காவுக்குள் நுழையும்போதே ஜனனிக்கு உற்சாகம் தொற்றிக் கொண்டது. அப்பாவின் கையிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு சறுக்கு விளையாட ஓடினாள்.

"பார்த்துப் போம்மா, கீழே விழுந்திடப் போறாய்" பதற்றப்பட்டார் அம்மா.

"பயமுறுத்தாதே. விளையாடிட்டு வரட்டும். வீட்டுக்குள்ளேயே அடைஞ்சு கிடக்கிறா. இன்னைக்கு ஒரு நாளாவது சுதந்திரமா ஓடி விளையாடட்டும்" அப்பா உற்சாகப்படுத்தினார்.

சின்ன சறுக்கு விளையாட்டு, பெரிய சறுக்கு விளையாட்டு, சின்ன ஊஞ்சல், பெரிய ஊஞ்சல், ராட்டினம், ஏற்றுமரம், இறக்கு மரம் என அங்குமிங்கும் ஓடி விளையாடினாள் ஜனனி. அவளை வேடிக்கை பார்த்துக்கொண்டே அம்மாவும் அப்பாவும் சிமெண்ட் பெஞ்சில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

விளையாடிவிட்டு மூச்சு வாங்கியபடி ஓடிவந்த ஜனனிக்கு வியர்த்திருந்தது. கொஞ்ச நேரம் உட்கார்ந்து ஆசுவாசப்படுத்திக் கொண்டு அம்மாவிடமிருந்து தண்ணீர் வாங்கிக் குடித்தாள்.

பின்னர், "வாங்கப்பா! பெரிய ஊஞ்சல்ல எல்லோரும் உட்கார்ந்து விளையாடலாம்" எனக்கூப்பிட்டாள்.

ஜனனியின் ஆசையைத் தீர்ப்பதற்கு மூவரும் சேர்ந்து உட்கார்ந்து பெரிய ஊஞ்சலில் ஆடினார்கள். அந்த ஆசையும் தீர்ந்த பிறகு ஜனனிக்கு நொறுக்குத் தீனி சாப்பிட வேண்டும் போல இருந்தது.



மீண்டும் சிமெண்ட் பெஞ்சுக்கு மூவரும் வந்தனர். தன் கைப் பையில் வைத்திருந்த பிளாஸ்டிக் பையை வெளியே எடுத்தார் அம்மா. அதனுள் இருந்த சிறிய பிளாஸ்டிக் பைகளை ஆளுக்கொன்றாக எடுத்துக் கொண்டார்கள். பிளாஸ்டிக் பையைப் பல்லால் கடித்துக் கிழித்துப் பிரித்துப் பூந்தியைச் சாப்பிட ஆரம்பித்த ஜனனி, எதிர் வரிசையில் கண் பார்வையற்ற கணவனும் மனைவியும் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தாள். அவர்கள் அருகில் ஒரு சிறுவன் உட்கார்ந்திருந்தான். அவர்களும் பிளாஸ்டிக் பையில் இருந்த புளிச்சோறு பொட்டலத்தைப் பிரித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

"அப்பா! அந்தப் பையன் அவங்களோட மகனாப்பா?" சந்தேகத்துடன் கேட்டாள் ஜனனி.

"முக ஜாடையைப் பார்க்கும் போது அப்படித்தாம்மா தெரியுது" பதிலளித்தார் அப்பா.

"அப்புறம், அவனுக்கு மட்டும் கண் தெரியுது?" வியப்புடன் கேட்டாள் ஜனனி.

"கண் பார்வை இழந்தவங்களுக்கு கண்பார்வை இழந்த பிள்ளைதான் பிறக்கும்னு உனக்கு யாரும்மா சொன்னது? எந்தக் குறையுமில்லாத ஆரோக்கியமான குழந்தையும் பிறக்கும்மா!"

"ஓ! அப்படியாப்பா. பாவம்பா அவங்க!" எனக் கூறிக் கொண்டே பொட்டலத்தைப் பிரித்து முழுவதையும் சாப்பிட்டு முடித்த பிறகு பிளாஸ்டிக் பையையும் காகிதத்தையும் புல்வெளியில் தூக்கி வீசினாள் ஜனனி. அது காற்றில் பறந்து பாதையில் விழுந்தது.

"ஜனனி குப்பையை இப்படியா பாதையில் வீசிறது?" அதட்டினார் அப்பா.

"நான் மட்டுமா குப்பையைப் பாதையில் போட்டிருக்கேன். அங்கே பாருங்கப்பா எத்தனை பேரு பிளாஸ்டிக் பையைப் போட்டுருக்காங்கன்னு!" என்று சுட்டிக் காண்பித்தாள் ஜனனி.

"அவங்கதான் தப்பு செய்றாங்கன்னா நாமும் செய்யலாமா? ஒழுங்கா நீ வீசின குப்பையை எடுத்து அங்க இருக்கிற குப்பைத் தொட்டியில போட்டிட்டு வா!"

"போங்கப்பா! வீட்டிலதான் இதைச் செய், அதைச் செய்னு வேலை சொல்லிக்கிட்டே இருப்பீங்க. இங்கே வந்தும் அதையே சொல்லாதீங்கப்பா" சிணுங்கினாள் ஜனனி.

(தொடரும்)

## 02.2018 09 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1822 - ஹெயிட்டி புதிதாக அமைக்கப்பட்ட டொமினிக்கன் குடியரசை முற்றுகையிட்டது.
- 1885- முதலாவது ஜப்பானியர் ஹவாய் தீவை வந்தடைந்தனர்.
- 1895- வில்லியம் மோர்கன் volleyball ஐக் கண்டுபிடித்தார்.
- 1897- பெனின் மீது பிரித்தானியர் தாக்குதலை ஆரம்பித்தனர்.
- 1900 - இலங்கையிலும், இந்தியாவிலும் நிலநடுக்கம் உணரப்பட்டது.
- 1900- டேவிஸ் கோப்பை டென்னிஸ் பந்தயம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1904- போர்ட் ஆர்தர் சமர் ஆரம்பித்தது.
- 1942- ஐக்கிய அமெரிக்காவில் பகலொளி சேமிப்பு நேரம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1962- பொதுநலவாய அமைப்பினுள் ஜமெய்க்கா விடுதலை பெற்றது.
- 1965- வியட்நாம் போர்: ஐக்கிய அமெரிக்க தாக்குதல் படைப்பிரிவு முதற்தடவையாக தென் வியட்நாமிற்கு அனுப்பப்பட்டது.
- 1971- அப்பல்லோ 14 விண்கலம் மூன்று அமெரிக்கர்களுடன் பூமி திரும்பியது.
- 1986 - ஹேலியின் வால்மீன் சூரியனுக்க அண்மையில் எட்டரைக் கோடி கி.மீ. தூரத்தில் வந்தது.

**பிறப்புகள்**

- 1773- வில்லியம் ஹென்றி ஹரிசன், ஐக்கிய அமெரிக்காவின் 9வது அரசுத்தலைவர் (இ. 1841)
- 1873- பம்மல் சம்பந்த முதலியார், தமிழ் நாடகத் தந்தை (இ. 1964)
- 1919- மதுரை சோமு, தமிழகக் கர்நாடக இசைப் பாடகர் (இ. 1989)
- 1944 - ஆலிஸ் வாக்கர், அமெரிக்க எழுத்தாளர்
- 1950- ஆதி குமணன், மலேசிய எழுத்தாளர் (இ. 2005)
- 1964- ம. ஆ. சுமந்திரன், இலங்கைத் தமிழ் அரசியல்வாதி, வழக்கறிஞர்
- 1970- கிளென் மெக்ரா, அவுஸ்திரேலியத்துடுப்பாளர்
- 1989-சரண்யாமோகன், இந்தியத்திரைப்பட நடிகை.

**இறப்புகள்**

- 1977- ஜி. ஜி. பொன்னம்பலம், இலங்கைத் தமிழ் அரசியல்வாதி, வழக்கறிஞர் (பி. 1901)
- 1981- எம். சி. சாக்ளா, இந்திய அரசியல்வாதி (பி. 1900)
- 1984- பாலசரஸ்வதி, தமிழக பரதநாட்டியக் கலைஞர் (பி. 1918)
- 1986- ச. ராஜாபாதர், இந்திய விடுதலைப் போராட்ட வீரர், பொதுவுடைமைவாதி (பி. 1916)
- 1987- லூயிஸ் ஹாம்மெட், அமெரிக்க வேதியியலாளர் (பி. 1894)
- 1996-சிட்டி பாபு, தென்னிந்திய வீணைக் கலைஞர் (பி. 1936)
- 2008- பாபா ஆம்தே, இந்திய சமூக சேவகர் (பி. 1914)
- 2010- செல்லையா மெற்றாஸ்மயில், ஈழத்து நாட்டுக் கூத்துக் கலைஞர்
- 2011- வ. விஜயபாஸ்கரன், தமிழக எழுத்தாளர் (பி. 1926)
- 2012-ஹெப்சிபா ஜேசுதாசன், புதின எழுத்தாளர். (பி. 1925)
- 2013- மலர் மன்னன், பத்திரிகையாளர், எழுத்தாளர்
- 2016 - சுசீல் கொய்ராலா, நேபாளத்தின் 37வது பிரதமர் (பி. 1939)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 50 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 50 | 50 | 60 | 60 | 70 |
| பச்சைமிளகாய் | 80 | 50 | 70 | 100 | 80 |
| தக்காளி | 30 | 50 | 60 | 60 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 20 | 50 | 40 | 40 |
| கோவா | 80 | 50 | 80 | 60 | 80 |
| கரட் | 80 | 50 | 90 | 160 | 80 |
| பூசணி | 60 | 50 | 30 | 60 | 40 |
| புடோல் | 80 | 50 | 70 | 80 | 80 |
| வாழைக்காய் | 60 | 50 | 70 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 160 | 100 | 180 | 200 | 160 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 80 | 100 | 150 |
| பாகற்காய் | 150 | 100 | 130 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 80 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | 50 | 60 | 50 |
| பயற்றங்காய் | 80 | 50 | 80 | 60 | 100 |
| லீக்ஸ் | 150 | 250 | 200 | 200 | 160 |
| பீற்றூட் | 60 | 50 | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 160 | 100 | 150 | 160 | 160 |
| முருங்கைக்காய் | 450 | 300 | 600 | 800 | 800 |
| போஞ்சி | 50 | 100 | 100 | 120 | 180 |
| கத்தரிப்பிஞ்சுள்ள | 50 | 30 | – | 50 | 50 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 20 | 10 | 40 | 30 | 20 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 50 | 75 | 75 | 80 |
| இராசவள்ளி | 180 | 100 | 140 | 200 | 180 |
| வெங்காயப்பூ | 60 | 50 | 90 | 120 | 80 |
| முள்ளங்கி | 20 | 50 | 60 | 60 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 | 40 | 30 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 50 | – | 80 | 70 |

உன் மனச்சாட்சிக்கு ஒப்பான கடமையைச் செய்தாலும் சூழ்நிலையை அனுசரித்துச் செய்.

– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வாக்களிப்பது உங்கள் ஒவ்வொருவரினதும் கடமை

நாளை 10ஆம் திகதி உள்ளூராட்சி சபைத் தேர்தல். தேர்தலுக்கான அத்தனை ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஒரு நாட்டில் ஜனநாயக ஆட்சி தேர்தல் மூலமே அமைக்கப்படுகிறது. அதேநேரம் தேர்தலில் வாக்களிப்பதென்பது ஒவ்வொருவரினதும் உரிமையும் கடமையுமாகும்.

எனினும் ஒரு பகுதியினர் வாக்களிப்பில் ஆர்வமற்றவர்களாக இருந்து விடுகின்றனர். இவ்வாறான நிலைமை ஆரோக்கியமானதல்ல.

ஒரு தேர்தலை நடத்தி முடிப்பதற்காக இந்த நாடு பெருந்தொகையான பணத்தைச் செலவிட வேண்டியுள்ளது.

வாக்களிக்கும் உரிமையுடைய அத்தனை பேரும் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்போது, வாக்களிப்பது தொடர்பில் மக்கள் விருப்பமற்றவர்களாக இருப்பதென்பது நல்லதல்ல.

எனவே நாளை பெப்ரவரி 10ஆம் திகதி உள்ளூராட்சி சபைக்கான தேர்தல் நடைபெறும்போது உரிய நேரத்தில் வாக்காளர்கள் அனைவரும் தத்தம் வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று தமது வாக்குகளை அளிக்க வேண்டும்.

அத்துடன் தேர்தல் நேர்மையாகவும் அமைதியாகவும் ஒழுங்காகவும் நடைபெறுவதற்கு ஒவ்வொரு பொதுமகனும் தனது ஒத்துழைப்பை வழங்குவதும் அவசியமாகும்.

அதேநேரம் தேர்தல் பணியில்; வாக்களிப்பு நிலையங்களில் கடமையாற்றுவோர், வாக்குகளை எண்ணுபவர்கள், அவற்றைப் பதிவு செய்பவர்கள் என தேர்தல் பணிகளில் ஈடுபடும் அத்தனை உத்தியோகத்தர்களும் உயர் அதிகாரிகளும் நேர்மையாகத் தேர்தல் நடைபெறுவதற்கு தங்களின் பூரண ஒத்துழைப்பை நல்க வேண்டும்.

தேர்தல் என்றால் இப்படியல்லவா நடைபெற வேண்டும். யாரும் எவரும் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஒரு குறையும் சொல்ல முடியாத அளவில் தேர்தல் நடைபெற்றது என்று கூறப்படுமாக இருந்தால், அது தேர்தல் பணியில் ஈடுபட்ட அத்தனை பேருக்கும் கிடைத்த மிகப் பெரும் வெகுமதியாகும்.

எனவே, மக்கள் வாக்களிக்கின்றனர். அந்த வாக்களிப்பின் அடிப்படையில் கடவுள் நீதிக்கு தலைவணங்கி, நிதானமாக வாக்களிப்பு இடம்பெறுவதற்கு; வாக்குகளை எண்ணுவதற்கு; அவற்றின் பதிவுகளைச் செய்வதற்கு; பெறப்பட்ட வாக்குகளை அறிவிப்பதற்கு என ஒவ்வொரு பணிகளிலும் உண்மை, நேர்மை, நீதி, கடவுளுக்குக் கணக்குக் கொடுத்தல் என்ற சத்தியங்களைப் பின்பற்றி தேர்தல் பணியைச் செய்வது தேர்தல் பணியில் ஈடுபடும் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

எல்லாவற்றுக்கும் மேலாக தேர்தல் அமைதியாக, சுமுகமாக நடைபெற அத்தனை பேரும் உதவ வேண்டும்.

# கொள்ளையுடன் தொடர்புபட்டவர் வவுனியா பொலிஸாரால் கைது

(குருமன்காடு)

பல கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய நபர் ஒருவரை வவுனியா பொலிஸார் அதிரடியாகக் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது,

செட்டிகுளம், மன்னார், யாழ்ப்பாணம் பகுதிகளில் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தை 06.02.2018 அன்று வவுனியா குற்றத் தடுப்பு பொலிஸாரால் கிளிநொச்சியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் கொள்ளையடிக்கப்பட்ட ஒரு தொகை தங்கமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலும் இந்நபர் யாழ்ப்பாணத்தில் கொள்ளைச் சம்பவம் ஒன்றிற்காக யாழ் நீதிமன்றில் ஆஜர்படுத்த கொண்டு சென்ற போது தப்பித்து சென்றிருந்ததுடன் யாழ் நீதிமன்றத்தால் குறித்த நபருக்கு எதிராக 7 பிடிவிறாந்துகள் பிறப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தப்பித்து சென்ற நபர் மன்னார், செட்டிகுளம், கொழும்பு, திருகோணமலை, கிளிநொச்சி பிரதேசங்களில் வாழ்ந்து வந்துள்ள நிலையில் 04 மாதமாக பொலிஸாரின் தீவிர தேடுதலின் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இக் கொள்ளை சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை வவுனியா பொலிஸாரால் மேற்கொள்ளப்படுகின்றது. (ம-250)

## லஞ்சம் வாங்கிய அதிகாரி கைது

வவுனியா, நெடுங்கேணி பிரிவுக்குட்பட்ட வன இலாகா அதிகாரி லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கொழும்பில் இருந்து வருகை தந்த லஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழு அதிகாரிகளால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

மரம் வெட்டுவதற்கான அனுமதி வழங்குவதற்கு லஞ்சம் பெற்ற நிலையிலேயே வவுனியா, நெடுங்கேணி பிரிவுக்குட்பட்ட வெடிவைத்தகல் பகுதியில் வைத்து வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியில் வசிக்கும் 36 வயதுடைய வன இலாகா அதிகாரியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (ம-250)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 6 மணிவரை **கிளிநொச்சி பிரதேசத்தில** சிலாவத்தை, உடுப்பிக்குளம், அளம்பில், குமுழமுனை, செம்மலை, நாயாறு, கொக்குத் தொடுவாய், கருநாட்டுக்கேணி, கொக்கிளாய், கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## பிரம்மஞான மகத்துவம்

சிவபெருமானுடைய அவதார மகிமையை உள்ளவாறு எடுத்துரைக்கும் ஞானத்தைப் பெற்று மனதை ஒருமுகப்படுத்தி, சிவன் நினைவில் லயித்து மகா சிவராத்திரி விரதிகளின் கடமையாகும். ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ராஜாவாகிய சிவ பகவானுடன் சாதாரண மனிதருக்கும்கூட நேரடித் தொடர்பை ஏற்படுத்தித் தரவல்ல இந்த ஞானம், சிவபிரானால் நேரடியாகப் பிரம்மனுக்குப் போதிக்கப்பட்டது.


சிவபெருமான் எப்போது, எவ்வாறு பிரம்ம ஞானத்தைப் போதித்தார் என்பது வெகுசிலரே அறிந்த ஒரு இரகசியமாகும்.

எளியவராகிய சிவபெருமான் அருளும் ஆன்மீக ஞானம் மிகவும் எளிமையானது. எவருக்கும் மிகச் சுலபமாக எட்டக்கூடியது. அந்த எளிமையே மகிமை. நடைமுறை வாழ்வில் அதனைக் கடைப்பிடிப்பவர்களுக்கு எல்லையற்ற வளங்களைக் கொடுக்கக்கூடிய மகிமை வாய்ந்தது.

13 ஆம் திகதி செவ்வாய் மாலை 6 மணி முதல அடுத்த நாள் காலை 6 மணி வரை சுகதாமம் மண்டபத்தில் இடம்பெறவிருக்கும் 12 மணித்தியால நிகழ்வுகளில் நாம் ஒவ்வொருவரும் வீரமும் விவேகமும் பொருந்தியவர்கள் ஆகலாம.

தொடர்புகளுக்கு: 077 923 4562

**பிரம்மகுமாரிகள்**



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### ஒரு குழந்தையாக இறைவன்

நீங்கள் எப்போதும் இறைவனை ஒரு தந்தையாக, எங்கோ சுவர்க்கத்தில் (தேவலோகத்தில்) இருப்பதாக எண்ணுகிறீர்கள். ஆனால் இறைவனை ஒரு குழந்தையாக உங்களால் பார்க்க முடியுமா?

நீங்கள் இறைவனை ஒரு தந்தையாக நினைக்கும்போது அவரிடமிருந்து எதையாவது உரிமையுடன் கேட்டுப் பெறவேண்டுமென்று விரும்புகிறீர்கள். ஆனால், இறைவனை நீங்கள் ஒரு குழந்தையாகப் பார்க்கும்போது உஙகளுககு எநத உரிமைக கோரிககையும இலலை.

உங்களுடைய வாழ்க்கையின் மையமே இறைவன். நங்கள இறைவனைக கருவல கொணடுளளாகள. இந்தக் கருவுற்ற நிலையில் நீங்கள் அக்கறையுடன் இருத்தல் வேண்டும். இந்த இறைவன் என்னும் குழந்தையைப் பெறறெடுதது உலகிறகு அளிததல வேணடும. பலா இறைவன எனனும குழநதையைப பெறறெடுபபதிலலை. யார் இறைவனைப் பெற்றெடுத்து உலகிற்கு அளிக்கிறார்களோ, அவர்களால் மற்றவர்களு டைய விருப்பத்தை நிறைவேற்ற முடியும்.

இறைவன் உங்களுடைய குழந்தை. நீங்கள் முதுமையடைந்து இறக்கும் வரை ஒரு குழந்தையைப் போன்று உங்களை விடாது கெட்டியாகப் பற்றிக் கொண்டிருக்கின்றான். இந்தக் குழந்தை பக்தனைப் பற்றிக் கொளகிறது. சாதனை, சதசஙகம, சேவை எனனும ஊட்டத்தை நாடி அழுகிறது.

பெல்மா: நீங்கள் ஒரு குழந்தையிடம் பிரார்த்திக்க முடியாது. நீங்கள் உங்களுடைய தந்தையிடம் மாத்திரமே பிரார்த்திக்க முடியும்.

ஸ்ரீஸ்ரீ: நீங்கள் ஏன் பிரார்த்திக்க விரும்புகிறீர்கள்? நீங்கள் என்ன கேட்க விரும்புகிறீர்கள்? என்ன கொடுக்க வேண்டும் என்று ஒரு நல்ல தந்தை ஏற்கனவே அறிவான்.

பெல்மா: சரணாகதி பற்றி கருத்து என்ன?

ஸ்ரீஸ்ரீ: குழந்தையிடம் சரணடைவது மிகவும் உண்மையானது. ஏனெனில் அங்கு கட்டாயம் ஏதும் இல்லை.

உங்களுடைய இறைவனைப் பற்றி அக்கறை கொள்ளுங்கள். நாத்திகர்கள் சுற்றிலும் பதுங்கியிருக்கிறாாகள. சநதேகஙகள, நமபிககையினமை, அறிவினம ஆகியவைதான் உங்களுடைய மனதில் உள்ள நாத்திகர்கள். ஆகையால் கவனத்துடன் இருப்பது நல்லது.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### சிவபெருமானுக்கு இந்தப் பொருட்களைக் கொண்டு அபிஷேகம் செய்யுங்கள், பலன்கள் இதுதான்?

சிவபெருமானை தரிசித்து அபிஷேகம் செய்யும் போது எந்த பொருட்களை கொண்டு செய்கின்றோமோ அதற்கு என்ன பலன்கள் கிடைக்கும் என்பதை தெரிந்துக் கொளவோம.

எந்த பொருளுக்கு என்ன பலன்?

பசும்பால் கொண்டு சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்தால் நீண்ட ஆயுள் உண்டாகும்.

பசுந்தயிர் கொண்டு சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்தால் மகப்பேறு வாய்ப்பு கிடைக்கும்.

பஞ்சா மிருதம் கொண்டு சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்தால் பலம், வெற்றி உண்டாகும்.

தேன் கொண்டு சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்தால் சுகமளிக்கும், சங்கீத விருத்தி கிடைக்கும்.

நெய் கொண்டு சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்தால் முக்தி அளிக்கும்.

சர்க்கரை கொண்டு சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்தால் எதிரியை ஜெயிக்கும் ஆற்றல் கிடைக்கும்.

இளநீர் கொண்டு சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்தால் நல்ல சந்ததி அளிக்கும்.

கருப்பஞ்சாறு கொண்டு சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்தால் உடல் ஆரோக்கியம் அளிக்கும்.

நார்த்தம்பழம் கொண்டு சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்தால் சந்ததி வாய்ப்பு உண்டாகும்.

சாத்துக்குடி கொண்டு சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்தால் துயர் துடைக்கும்.அபிஷேகம் செய்தால் நோய்கள் குணமாகும். (தொடரும்)




### வீண் செலவு செய்யாதீர்

- ✦ உணவு வைக்கப்பட்டால் உங்களின் செருப்புகளை கழற்றிவிடுங்கள். அது உங்களின் பாதங்களுக்கு இன்பத்தை அளிக்கும்.
- ✦ நீங்கள் இரவில் பட்டினியாக இருக்காதீர்கள். பட்டினி இருப்பதால் விரைவில் உங்களுக்கு முதுமை தட்டிவிடும்.
- ✦ வீண் செலவும் ஆடம்பரமும் இல்லாத முறையில் உணணுங்கள். முடிந்தவரை தருமமும் செய்யுங்கள்.
- ✦ மக்களுக்கு தேவைப்படுகின்ற நேரத்தில் உணவை பதுககி வைபபவரகள குஷடரோகியாகவும வறுமைப பிடியிலும் துன்பப்படுவார்கள்.
- ✦ பழிததுரைததல, ஒழுககம கெடட முரட்டுததனமான பேச்சுக்கள் ஆகிய இரண்டும் நயவஞ்சகத்தின் இரு கிளைகளாகும்.
- ✦ உனக்காக எதை விரும்புகிறாயோ அதையே மற்றவர்களுக்கும் விரும்பு.
- ✦ இறைவனை நீ பார்க்காவிட்டாலும் உன்னை அவன் பார்த்துக் கொண்டே இருக்கின்றான்.
- ✦ ஏழைகளின் பிரார்த்தனை இல்லை என்றால் செல்வந்தர்கள் அழிந்தே போவார்கள்.

# மாகாண மரதன் ஓட்டம்
## முல்லைத்தீவு பெண்கள் சாதனை



வடக்கு மாகாண பெண்களுக்கான 42 கிலோ மீற்றர் மரதன் ஓட்டப் போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட பெண்கள் அணியினர் முதலாம் இடத்தைப் பெற்று கொண் டனர்.

மாகாண விளையாட்டு திணைக்களத்தினால் வடமாகாண ஐந்து மாவட்டங்களுக்கு இடையிலான கிளிநொச்சி -பரந்தன் வீதியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஆண்,பெண்களுக்கான 42· km மரதன் ஓட்டப் போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட பெண்கள் அணியினர் தொடர்ந்து நான்கு இடங்களான முதல் இடம் சிவனுகேமா (குரவயல்), இரண்டாவது இடம் சிவ சோதிநாதன் விதுசா( கெரடமடு) ,மூன்றாவது இடம் சிவனேஸ்வரன் டிலஷ்சனா (புதுக்குடியிருப்பு) , நான்காம் இடம் யோகேஸ்வரன் புவேந்தினி (மன்னாகண்டல்) ஆகியோர் பெற்று முல்லைத்தீவு அணியினர் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டனர். போட்டி விதிக்கமைய ஏனைய மாவட்டவர்கள் இடங்களை பெற்று ஓட்டத்தை பூர்த்திசெய்ய முடியாமையால் ஏனைய மாவட்டவர்களுக்கு இரண்டாம் மூன்றாவது நிலைகள் பெற்று கொள்ள முடியாமல் போய் விட்டது. ஆண்களுக்கான போட்டியில் கே.கிருஷ்ணரூபன்( யாழ்ப்பாணம்) முதலாம் இடத்தையும், இரண்டாவது இடத்தை கே. நவநீதன் (வவுனியா), மூன்றாவது இடத்தை எஸ். விந்துயன்(வவுனியா) பெற்றிருந்த போதும் மாவட்ட ரீதியாக இடங்களை பெற்று ஓட டத்தை பூர்த்தி செய்ய முடியாமையால் ஆண்களுக்கான மாவட்டங்களுக்கான இடங்கள் வழங்கப்படவில்லை.

முல்லைத்தீவு மாவட்ட பெண் மரதன் ஓட்டப் போட்டி அணியினருக்கு மட்டும் முதலாவது இடம் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.(க)

# சுழல்பந்து வீச்சாளர்கள் அபாரம்
# விராட்கோலி புகழாரம்



விராட் கோலியின் சதத்தாலும், சுழற்பந்து வீரர்களின் அபாரமான பந்துவீச்சாலும் தென்னாபிரிக்காவுக்கு எதிராக இந்தியாவின் ஆதிக்கம் நீடிக்கிறது.

இந்த வெற்றி இந்தியா பெற்ற ஹாட்ரிக் வெற்றியாகும். ஏற்கனவே முதல் 2 ஆட்டத்தில் வெற்றி பெற்று இருந்தது.

இதன்மூலம் 6 போட்டி கொண்ட தொடரில் இந்தியா 3-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இந்த வெற்றி குறித்து இந்திய அணித் தலைவர் விராட் கோலி கூறியதாவது.

தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் தொடங்கியது சிறப்பாக அமையவில்லை. 3ஆவது டெஸ்டில் பெற்ற வெற்றியில் இருந்து நம்பிக்கை அதிகரித்தது. இந்த ஆடுகளத்தில் துடுப்பெடுத்தாட எளிதாக இருந்தது. அதற்கு ஏற்ற வகையில் பந்துகள் எனக்கு அமைந்தது.

தலைவர் என்ற முறையில் நான் கடைசி வரை நின்று ஆடியது அற்புதமானதே. தவான் தொடக்கத்தில் நல்ல ஜோடி கொடுத்தார். புவனேஷ்வர் குமார் இறுதியில் நல்ல ஜோடியை எனக்கு கொடுத்தார். இதனால் கடைசி வரை நின்று 300 ஓட்டங்களுக்கு மேல் குவிக்க முடிந்தது.

சுழற்பந்து வீரர்கள் (சாஹல், குல்தீப்) சிறப்பாக பந்து வீசினார்கள். எங்களது விருப்பத்துக்கு ஏற்றவாறு அவர்கள் நெருக்கடியை கொடுத்தனர். 4ஆவது ஆட்டத்திலும் தீவிரம் காட்டி தொடரை வெல்ல முயற்சிப்போம். இதில் நாங்கள் உறுதியாக இருப்போம் என அவர் தெரிவித்தார்.

இந்தியா- தென்னாபிரிக்கா மோதும் 4ஆவது ஒருநாள் போட்டி நாளை ஜோகன்ஸ்பர்க்கில் நடக்கிறது. (க)


# டெஸ்ட் போட்டி விளையாடாவிடின் உடன் சம்பளத்தைக் குறையுங்கள்
## சங்கக்கார வேண்டுகோள்

டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாடும் எல்லா நாட்டு வீரர்களுக்கும் குறைந்தபட்ச ஊதியம் கொடுக்கும் முறையை அமுல்படுத்த வேண்டும் என இலங்கை ஜாம்பவான் சங்கக்கார கூறியுள்ளார்.

குமார் சங்கக்கார அளித்துள்ள பேட்டியில், இளம் வீரர்கள் இருபது- 20 போட்டிகள் தான் தங்களுக்கு லாபகரமாக உள்ளது என நினைத்து டெஸ்ட் போட்டிகளை புறக்கணிக்கிறார்கள்.

இதை தடுக்க டெஸ்ட் போட்டியில் விளையாடும் வீரர்களுக்கு குறைந்தபட்ச ஊதியத்தை வழங்கும் முறையை அமுல்படுத்த வேண் டும்.


இருபது-20 போட்டிகளால் கிரிக்கெட் பிரபலமாவது பாராட்டப்பட வேண்டிய ஒன்றுதான். ஆனால், இதன் காரணமாக டெஸ்ட் கிரிக்கெட்டை இளம் வீரர்கள் விரும்பாமல் போகும் நிலை ஏற்படக் கூடாது.



பல இளம் வீரர்கள் சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடுவதை விட இருபது-20 போட்டிகளில் விளையாட அதிக ஆர்வம் காட்டுகிறார்கள்.

இதற்கு பல காரணங்கள் இருந்தாலும் ஊதியம் தான் முக்கிய காரணமாக உள்ளது.டெஸ்ட் கிரிக்கெட் என்பது வீரர் கள் மற்றும் ரசிகர்கள் பார்வையில்எப்படி உள்ளது என்பதை நாம் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும் என அவர் கூறியுள்ளார். (க)

# மும்பை அணியில் இணைந்தார் வேகப்பந்து வீச்சாளர் மலிங்க



இலங்கை அணியின் வேகப் பந்து வீச்சாளரான மலிங்க, கடந்த பத்து ஆண்டுகளாக ஐபிஎல் தொடரில் மும்பை அணிக்காக விளையாடி வந்தார்.

இதையடுத்து இந்த ஆண்டு நடைபெறவுள்ள ஐபிஎல் தொடரில் மும்பை அணி, அவரை அணியில் தக்க வைத்து கொள்ளவும் இல்லை. ஏலத்தில் எடுக்கவுமில்லை;ஒரு காலத்தில் ஐ.பி.எல். தொடரில் மலிங்கவை எடுக்க போட்டி அணிகள் தற்போது அவரை திரும்பிகூட பார்க்கவில்லை, இந்த வரிசையில் மேற்கிந்திய தீவு வீரர் கெய்லையும் கூறலாம்.

ஏனெனில் அவரையும் முதலில் எந்த அணியும் எடுக்கவில்லை. அதன் பின் இறுதியாக பஞ்சாப் அணி போனா போகிறது என்பது போல், கெய்லை தங்கள் அணிக்கு எடுத்துக் கொண்டது.

இந்நிலையில் மும்பை அணி தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில், மலிங்க மீண்டும் எங்கள் அணியில் இணைந்துவிட்டார் என்றும், ஒரு வீரராக அல்ல ஆலோசகராக அதாவது பந்து வீச்சு ஆலோசகராக செயற்படவுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளது.

மலிங்க இது குறித்து கூறுகையில், 10 ஆண்டுகளாக மும்பை எனது இரண்டாவது வீடாக இருந்து வந்தது. ஒரு வீரராக, மும்பை இந்தியன்ஸ் அணியுடன் பயணம் செய்துவந்தேன்.

இப்போது பந்து வீச்சு ஆலோசகராக தொடர உள்ள புதிய பயணத்தை எதிர்நோக்கி காத்திருக்கிறேன் என்று கூறியுள்ளார்.

மேலும் இலங்கை அணியின் முன்னாள் வீரர் மகிலா ஜெயவர்தனே மும்பை அணியின் தலைமை பயிற்சியாளராக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். (க)

# விக்ரம்-ராஜன்-கங்கு வெற்றிக் கிண்ணம்
# இறுதிப் போட்டியில் ஓல்ட்கோல்ஸ் அணி

விக்ரம்-ராஜன்-கங்கு வெற்றிக் கிண்ணத்திற்கான லீக் முறையில் 4 ஆவது போட்டியில் ஓல்ட் கோல்ஸ் அணி, கே.சி.சி.சி. அணியை 15 ஓட்டங்களால் வெற்றி பெற்றதன் மூலம் இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது..

முதலில் துடுப்பெடுத்தாடிய ஓல்ட்கோல்ஸ் அணி ஜொலிஸ்ரார் அணியை 15 ஓட்டங்களால் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஓல்ட் கோல்ஸ் அணி 30 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 178 ஓட்டங்களை பெற்றது. மதூஸன்-12, நிமலேண்டிரா- 24, நிரோஜன்-14, பிரியலக்ஸன்-58, சீராளன்-22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பகீரதன்- 03, சந்துரு-02, வாமணன்-03, ஜனார்த்தன்-01, மதூஸன்-01 இலக்கினைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 24:2 ஓவர்களின் சகல இலக்குகளையும் இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றது.

உமாதரன்- 58, சஜீவன்-22 , சந்தோஸ்- 25, தீபன்-14, ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜனார்த்தனன் -01, நிலக்ஸன்-02, பிரியலக்ஸன்-02, சிறிகுகன்- 02 நிறோஸன்-02 இலக்குகளைப் கைப்பற்றினர்.

ஓல்ட்கோல்ஸ் அணியினர் இந்த 2 ஆவது வெற்றியுடன் இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. கடினப் பந்து சுற்றுப் போட்டி ஆரம்பமான காலத்தில் இருந்து யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தில் அனுமதி பெற்று நடத்தப்பட்ட போட்டிகளில் முதன் முறையாக ஓல்ட் கோல்ஸ் அணியினர் இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க)

## யாழில் உள்ளூராட்சி...

அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வாக்களிப்பதற்காக இம்முறை யாழ்.மாவட்டத்தில் 4 லட்சத்து 68 ஆயிரத்து 476 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். 521 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் 243 வாக்கு எண்ணும் நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

கடந்த தேர்தல்களை போலல்லாது இம்முறை அந்தந்த வாக்களிப்பு நிலையங்களில் தான் வாக்கு எண்ணும் பணிகள் நடைபெறவுள்ளது. இம்முறை அனைத்து வாக்கெண்ணும் நிலையங்களும் அந்தந்த வட்டாரத்துக்கு ஏற்றவகையில் அமைக்கப்பட்டுள்ளன.

எமது மாவட்டத்தில் 243 வட்டாரங்கள் உள்ளன. இந்த வட்டாரங்களுக்கு ஒன்று என்ற ரீதியில் வாக்கெண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வட்டாரத்துக்குரிய முடிவுகள் அந்த வாக்கெண்ணும் நிலையத்தில் வைத்து அறிவிக்கப்படும்.

பின்னர் இறுதிமுடிவுகள் அறிவிக்கும் வாக்கு எண்ணும் நிலையமாக யாழ்.மத்திய கல்லூரியை தெரிவு செய்துள்ளோம்.

எமது மாவட்டத்தில் 17 உள்ளூராட்சி அதிகார சபைகள் அதில் ஒரு மாநகர சபையும் 3 நகரசபையும் 13 பிரதேச சபைகளும் உள்ளன. தேர்தல் முடிவுகள் ஒவ்வொரு வட்டாரத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டு இறுதியாக அறிவிக்கப்படும்.

தபால் மூல வாக்குகள் ஒவ்வொரு வாக்கெண்ணும் நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்படும். 50இற்கு மேற்பட்ட தபால் மூல வாக்குகள் இருக்குமாயின் தனி அறையில் எண்ணப்படும். அதற்கு குறைவாக இருந்தால் ஏனைய வாக்குகளுடன் சேர்த்து எண்ணப்படும்.

10ஆம் திகதி மாலை 4 மணிக்கு பின்னர் வாக்கெண்ணும் பணி ஆரம்பமாகும். இரவு 8 மணியளவில் முடிவுகளை பெறக்கூடியதாக இருக்கும்.

இன்று காலையில் இருந்து வாக்களிப்பு நிலையங்களுக்கான பெட்டிகள் எடுத்துச் செல்லப்படவுள்ளன.

இப்பணிகளுக்கு இ.போ.ச மற்றும் தனியார் பேருந்துகள் பயன்படுத்தப்படவுள்ளன. மீள்குடியேற்றப்பட்ட பிரதேசங்களில் உள்ள வாக்காளர்களுக்கு பேருந்து சேவை வழங்கப்படும்.

வாக்களிப்பு நிலையங்களுக்கு 2 பொலிஸார் கடமைக்கு அமர்த்தப்படுவர். வாக்கெண்ணும் நிலையங்களுக்கு அதிகளவான பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். இம்முறை 6 ஆயிரத்து 500 அரச அலுவலர்கள் தேர்தல் கடமையில் ஈடுபடவுள்ளார்கள்.

வாக்களிப்பு நாளை காலை 7 மணியில் இருந்து மாலை 4 மணிவரை நடைபெறும். வாக்காளர்கள் தம்மை உறுதிப்படுத்தும் வகையில் அடையாள அட்டை, தற்காலிக அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு என்பவற்றை கொண்டு சென்று வாக்களிக்க முடியும்.

யாழ்ப்பாணத்தில் இதுவரை தேர்தல் வன்முறை சம்பவங்கள் 40 இடம்பெற்றுள்ளன. அதற்கான உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என மேலும் தெரிவித்துள்ளார். (ம-9)

## கறுப்பு பட்டியலில்...

இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட வாக்கெடுப்பிற்கு அமைய இந்த பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

பணச்சலவை மற்றும் பயங்கரவாத நிதியளிப்பு அதிகம் இடம்பெறுவதாக குற்றம்காட்டப்பட்ட இலங்கை, டியூனீசியா, ட்ரினிடாட் மற்றும் டொபாகோ குடியரசு ஆகிய நாடுகளை குறித்த கறுப்பு பட்டியலில் இணைக்க வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டது.

அதற்கமைய இதற்கான வாக்கெடுப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது. இதன்போது, குறித்த பரிந்துரைக்கு ஆதரவாக 375 பேரும், எதிராக 283 பேரும் வாக்களித்துள்ளனர்.

அதற்கமைய ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி முறைக்கேடுகள் குறித்த கறுப்பு பட்டியலில் இலங்கையும் இணைக்கப்பட்டுள்ளது. (ம)

## தேர்தலை கண்காணிக்க...

உள்ளூராட்சிமன்ற தேர்தல் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொள்ள வெளிநாடுகளிலிருந்து 10 உறுப்பினர்கள் நேற்று இலங்கைக்கு வந்துள்ளதாக தேர்தல் திணைக்களத்தின் மேலதிக ஆணையாளர் எம்.எம் மொஹமட் தெரிவித்தார்.

இவர்கள் அனைவரும் தேர்தல் நடவடிக்கையுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளாவர்.

இந்தியாவிலிருந்து 4 பேரும், தென்கொரியாவிலிருந்து 2 பேரும், மாலைதீவிலிருந்து 2 பேரும் இந்தோனேசியாவிலிருந்து 2 பேரும் வருகைதந்துள்ளனர். இவர்கள் தேர்தல் நடைபெறும் மாவட்டங்களுக்கு விஜயம் செய்து வாக்களிப்பு நடைமுறைகள் உள்ளிட்ட தேர்தல் தொடர்பிலான ஆய்வுகளை மேற்கொள்வர்.

இதன் பின்னர் தமது நாட்டிற்கு இது தொடர்பிலான ஆய்வு அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளதாக தேர்தல் திணைக்களத்தின் மேலதிக ஆணையார் எம்.எம் மொஹமட் மேலும் தெரிவித்தார். (ம)

## காங்கிரஸ் வேட்பாளர்...

யில் அழைத்து கொட்டன்களால் தாக்கியதாகவும் இதில் தலையில் படுகாயங்களுக்குள்ளான அவர் உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி வேட்பாளரின் மோட்டார் சைக்கிள் கடந்த 2ஆம் திகதி இரவு வீட்டுக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போது அதன் இலக்கத்தகடு இனந்தெரியாத நபர்களால் உடைத்து எடுத்துச் செல்லப்பட்டதாக நெல்லியடிப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. (ம-60)

## கையடக்கத் தொலைபேசி...

தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

குறித்த பகுதியில் கையடக்க தொலைபேசியை பயன்படுத்தல், காணொளி எடுத்தல், புகைப்படம் எடுத்தல், புகைத்தல், மதுபானம் அருந்துதல் என்பன தடைசெய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது. (ம)

## சர்வதேச விசாரணை...

கால அவகாசத்தை நீட்டிச் செல்வதற்கும் நம்மவர்கள் அனுமதி கொடுத்தனர். இதன் காரணமாக நாங்கள் நடுவீதியில் குந்தியிருந்து போராட வேண்டியுள்ளது.

காணாமல்போன தங்கள் பிள்ளைகள் வருவார்கள் என்று ஏங்கி ஏங்கி இருந்த பெற்றோர்கள் சிலர் அந்தக் கவலையிலேயே இறந்துபோய்விட்டனர் என்றும் அவர்கள் கண்ணீருடன் கூறினர். (ம)

## 15.8 மில்லியன்...

வித்தார். நான்கு பில்லியன் ரூபாய்கள் செலவிடப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

தேர்தலில் சுமார் 13,000 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. வடக்கு கிழக்கில் 79 உள்ளூராட்சி சபைகள் உள்ளன. இலங்கை முழுவதிலும் 341 உள்ளூராட்சி சபைகள் உள்ளன. அவற்றில் 24 மாநகராட்சிகள், 41 நகரசபைகள், 276 பிரதேச சபைகள் அடங்கியுள்ளன. 8,293 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இதற்காக 71 ஆயிரத்திற்கும் அதிகமான உறுப்பினர்கள் போட்டியிடவுள்ளதாகவும் தெரிவித்தார்.

2015, 2017ஆம் ஆண்டுகளில் திருத்தியமைக்கப்பட்ட புதிய தேர்தல் முறையின் மூலம் 60 வீதமான உறுப்பினர்கள் வட்டாரங்களில் இருந்து நேரடியாகவும், 40 சதவீதமான உறுப்பினர்கள் விகிதாசார அடிப்படையிலும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

அதேவேளை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஒவ்வொரு அரசியல் கட்சிகள் சுயேட்சைக்குழுவில் இருந்து 25 வீதம் பெண்கள் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற திருத்தச் சட்டமூலம் ஒன்றை 2016 ஆம் ஆண்டு பெப்ரவரியில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியிருந்தது.

25 வீத உறுப்பினர்களை தெரிவு செய்யும் அளவிற்கு பெண் வேட்பாளர்கள் தெரிவு செய்யப்படவில்லையானால் தோல்வியடைந்த பெண் வேட்பாளர்களில் கணிசமான வாக்குகளைப் பெற்றவர்கள் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்படுவார்கள் எனவும் அந்த சட்டமூலத்தில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை 2012ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12ஆம் திகதி உள்ளூராட்சி சபைகளின் எல்லைகளை நிர்ணயிக்க ஜயலத் திசாநாயக்கா தலைமையில் ஐந்து உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்றை மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் நியமித்தது.

ஆனால் அந்தக்குழுவின் அறிக்கை 2015 யூன் மாதம் 19ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது. இந்த அறிக்கையின் பிரகாரம் உறுப்பினர்களின் எண்ணிக்கை 5,081 ஆக அதிகரிக்கப்பட்டது.

ஆனால் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள மீளாய்வுகள் தொடர்பாக ஆயிரத்துக்கும் அதிகமான முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன. இதனால் அசோக்கா பீரிஸ் தலைமையில் புதிய குழு ஒன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்தார்.

இந்த குழுவின் அறிக்கை 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கைளிக்கப்பட்டது. பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி வர்த்தமானியில் அந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

அதன் அடிப்படையில் 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி சனிக்கிழமை உள்ளூராட்சிசபைத்தேர்தல்நடைபெறுகின்றது.

93 உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்பு மனுத்தாக்கல் 2017 டிசம்பர் 11ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டன. 466 வேட்பு மனுக்கள் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளில் இருந்தும், 57 மனுக்கள் சுயேட்சைக் குழுக்களிடமும் இருந்து மொத்தம் 523 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இவற்றில் 500 மனுக்கள் 447 கட்சிகளில் இருந்தும், 53 சுயேட்சைக் குழுக்களிடமும் இருந்து ஏற்றுக் கொள்ளப்பட்டன.

ஏனைய 248 சபைகளுக்கு வேட்பு மனுக்கள் 2017 டிசம்பர் 18 முதல் 21ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்பட்டன என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

தேர்தல் நடைபெறும்போது 300,000 ஊழியர்கள் பணியில் அமர்த்தப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தத் தேர்தலில் பாதுகாப்பு கடமைகளுக்காக மொத்தம் 65 ஆயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப்படவுள்ள அதேவேளை அவசர தேவைகளுக்காக மேலதிக ஆறாயிரத்து 500 முப்படை வீரர்கள் தயார் நிலையில் உள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் குறிப்பிட்ட சில வாக்குச் சாவடிகளில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட 855 இராணுவச் சிப்பாய்கள் தயார் நிலையில் உள்ளதாக பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது. (ம)

# இந்தியாவில் மகன் மரணம்
# யாழ்.சிறையில் இருக்கும் தமிழக மீனவர் பிணை மனு

(யாழ்ப்பாணம்)

கடற்படையால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களில் ஒருவர் தற்காலிகப் பிணையில் (பரோல்) விடுவிக்கப்பட்டுள்ளார்.

மண்டபம் பகுதியைச் சேர்ந்த மீனவர் ஜெயசீலன். இவர் இலங்கை கடல் எல்லையைத் தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றத்துக்காக கடற்படையால் கைது செய்யப்பட்டு, யாழ்ப்பாணம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், ஜெயசீலனின் மகன் நோய் தாக்கி மரணமானார். இதையடுத்து, மகனின் மரணச் சடங்கில் கலந்துகொள்ள ஜெயசீலனுக்கு அனுமதி கோரி, ஊர்காவற்றுறை நீதிமன்றில் இந்தியத் தூதரக அதிகாரிகள் நேற்று மனுத் தாக்கல் செய்தனர்.

இந்த மனு சட்டமா அதிபரின் ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கப்படுவதாகத் தெரிவித்த நீதவான், ஒப்புதல் கிடைத்ததும் உடனடியாக தற்காலிகப் பிணையில் ஜெயசீலன் அனுப்பி வைக்கப்படுவார் என்று தெரிவித்தார்.

ஒப்புதல் கிடைக்கும் பட்சத்தில் ஜெய சீலனை மண்டபத்துக்கு அழைத்துச் செல்ல இந்திய அதிகாரிகள் ஏற்பாடு செய்துள்ளனர். (ம)

# தேர்தலை முன்னிட்டு
# தேசிய அடையாள அட்டை நள்ளிரவு வரை விநியோகம்

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு தேசிய அடையாள அட்டைகள் விநியோகிக்கும் ஒரு நாள் சேவை இன்று நள்ளிரவு வரை இடம்பெறவுள்ளது.

இந்த சேவை இன்று நள்ளிரவு 12 மணி வரை இடம்பெறவுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் வியானி குணதிலக தெரிவித்தார்.

அந்த வகையில் தேர்தலில் வாக்களிப்பதற்கு அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு அடையாள அட்டை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக ஆட்பதிவுத் திணைக்களம் இன்றைய தினம் நள்ளிரவு 12மணி வரை திறந்திருக்கும் என்பதுடன் நள்ளிரவு 12 மணிவரை விண்ணப்பங்கள் ஏற்கப்படும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ம)

# உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக 13, 374 வாக்களிப்பு நிலையங்கள்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வாக்களிப்பு நாளை 10ஆம்திகதி காலை 7.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை இடம்பெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்காக 13, 374 வாக்களிப்பு நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

340 உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கு 8325 மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்வதற்காக வாக்களிப்பிற்கான சகல அடிப்படை ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வாக்காளர் அறிவிப்பு அட்டையை பெற்றுக்கொள்ளாதவர்கள் அருகிலுள்ள தபால் அலுவலகத்தில் தமது ஆள் அடையாளத்தை உறுதிசெய்து அவற்றை பெற்றுக்கொள்ளுமாறு தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். (ம)

# கச்சதீவுக்கு அருகே இந்திய மீனவர்கள் 7 பேர் கைது

(சென்னை)

கச்சத்தீவு அருகே மீன்பிடித்து கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் 7 பேரையும், ஒரு விசைப்படகையும் நேற்று வியாழக்கிழமை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டில் இந்த 7 தமிழக மீனவர்களும் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தலைமன்னாரில் உள்ள கடற்படை முகாமுக்கு அழைத்து வரப்பட்டனர்.

இதேவேளை ஏற்கனவே இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 159 மீனவர்கள் இலங்கை சிறைகளில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# ஒடியல் கூழ்

சைவம், அசைவம்

பைறட் சிக்கன் -றைஸ் & பைட்ஸ்

**Fried Chickan - Rice & Bites**

யாழ் பாடியில் (S-1607)

49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

021 222 6868, 077 736 0353, 075 987 5800

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
- வெளிநாட்டு சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு ... டோட்டல் சர்வீஸ்கள் பெற்றும் வாய்ப்பு (C-1509)

UK-550*/=Kg

மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்

DELIVERY IN 3 - 5 DAYS

**V2 TRAVELS-0768226240**

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

## BIO TECH - A/L - 2018

## Royal Exame Center

- முன்னோடிப் பரீட்சை Part I/II. Practical Exame (B1, B2 & Sport Test)
- யாழ், கொழும்பு முன்னணி ஆசிரியர்களினால் தயாரிக்கப்பட்ட வினாத்தாள்கள்.
- வினாத்தாள்கள் திருத்தப்பட்டு செயன்முறை பரீட்சை புள்ளிகளுடன் வழங்கப்படும்.
- வெளிமாணவர்களும் தோற்றமுடியும்.
- பரீட்சை நிலையம்: DMI – யாழ். நகர், HAC - மீசாலை

**T.P: 0774012800/ 0773119256**

(Coordinator, Royal Exame Center) (C-1532)

## VISA CONSULTANCY SERVICES

**Visitor Visa/Tourist Visa, Permanent visa (Sponsor Visa) & Schengen Visa**

- India, UK, Canada, USA, Norway, Australia, New Zealand etc... போன்ற நாடுகளுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு சகல விதமான ஆவண ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்.
- விசா விண்ணப்பங்கள் Online மூலம் பூர்த்தி செய்து கொடுக்கப்படும் மற்றும் விண்ணப்பதாரிகளின் வசதிகளுக்கேற்ப Scheduled Appointment பெறலாம்.
- பயணச்சீட்டுக்கள் (Air Tickets), பயணக்காப்பீடு (Travel Insurance) மற்றும் விசா நீடிப்பு செய்து கொடுக்கப்படும்.
- வெளிநாடு செல்லவிருப்போர், பணிபுரிபவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான 6-12 மாத Spoken English Course (பேச்சுப் பயிற்சி) 100% உத்தரவாதம் குறைந்த கட்டணம்.

தொடர்பு: NALTC, 134, ADIYAPATHAM ROAD, THIRUNELVELY. JAFFNA. T.P: 0711418711 (C-1535)

## காசி யாத்திரை

**ஆரம்பம்: 09.03.2018 யாத்திரீகர்: 10 நாட்கள்: 10**

தரிசிக்குமிடங்கள்: டெல்லி நாராயணர் கோவில் வேறு இடங்களும், காசியில் 15 இடங்கள் கங்கா பூசை, கயா, புத்தகயா, அலகாபாத் (கங்கா, யமுனா, சரஸ்வதி) திருவேணிசங்கமம், சீத்தாமடி, ஆக்ரா (தாஜ்மகால்), மதுரா கிருஷ்ண ஜென்மபூமி, பிரேம்மந்திர், பிரமாண்டமான கிருஷ்ணர்கோவில், செங்கோட்டை, இராமேஸ்வரம், உத்திரகோசமங்கை, திருப்புலானி, நவபாஷானம், பஞ்சமுக ஆஞ்சநேயர், அப்துல்கலாம் மணிமண்டபம், மதுரை மீனாட்சி அம்பாளையும் தரிசிக்கலாம்.

**ஒரு நாள் சென்னையில் சொப்பிங்**

**பெற்றுக்கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை**

4 விமான பயணடிக்கட், மூன்று வேளை மடப்பள்ளி ஆட்கள் சமைத்த உணவு, காப்பி, டீ, குடிநீர் 2 பேருக்கு. வெஸ்ரன் கொமட், குளியலறை இணைந்த அறைகள். பயணம் முழுவதும் A/C வாகன வசதி யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வரவும் திரும்ப யாழ் செல்லவும் வாகன வசதி ஒழுங்கு செய்து தரப்படும். பதிவு செய்யவும்.

விபரங்கட்கு: கலாநிதி. T.ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்

59, 3/6 செட்டியார் தெரு, கொழும்பு - 11

077 768 0102, 077 736 2154 (C-1526)

## Techno World

(வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை - யாழ்)

**A/L தொழில்நுட்ப பிரிவு**

A/L 2020 - திங்கள் - வெள்ளி 8.00 - 12.00

A/L Day Class - திங்கள் - வெள்ளி 8.00 - 1.00

வார நாட்களில் பகலில் நடைபெறும் ஒரேஒரு தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் **0770175346** (C-1534)


## வாக்குரிமையை தடையின்றி...

ஏற்படுத்தக் கூடாதென்றும், மக்கள் தமது வாக்குரிமையை தடையின்றி பயன்படுத்த உதவ வேண்டும் என்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பப்ரல் கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி இதனைத் தெரிவித்தார்.

தேர்தலுக்கு இன்னும் ஒரு நாள் மாத்திரம் எஞ்சியுள்ள நிலையில், இக்காலப்பகுதியை அமைதியான காலகட்டமாக தேர்தல்கள் ஆணைக் குழு பிரகடனப்படுத்தியுள்ளது.

இந்நிலையில் இக்காலகட்டத்தில் நேரடியாகவோ மறைமுகமாகவோ தேர்தல் தொடர்பான எந்தவித நடவடிக்கையிலும் ஈடுபட வேண்டாம் என பப்ரலின் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

சில குழுக்கள் வாக்குகளைப் பெறுவதற்காக சமய மற்றும் விளையாட்டு நிகழ்வுகளை நடத்துகின்றமை தொடர்பில் தமது அமைப்பு அவதானித்துள்ளதென குறிப்பிட்டுள்ள ரோஹண ஹெட்டியாராச்சி, இவ்வாறான செயற்பாடுகளை தவிர்த்து மக்கள் தமது வாக்குரிமையை சுதந்திரமாக செயற்படுத்த அனுமதிக்குமாறு வலியுறுத்தியுள்ளார். (ம)

## சளி அடைப்பினா...

என்ற ஆண்குழந்தையே மேற்படி உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தைக்கு கடந்த 26 ஆம் திகதி சளி அடைப்பதாக கூறி பெற்றோர், சாவகச்சேரி வைத்திய சாலைக்கு கொண்டு சென்று சிகிச்சை பெற்றுள்ளனர்.

பின்னர் நேற்று முன்தினம் மீண்டும் சளி அடைப்பதாக கூறி சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு வந்து பரிசோதித்துள்ளனர். அங்கு குழந்தையை பரிசோதிக்கும் வைத்தியர் இல்லாத நிலையில் ஏனைய வைத்தியர்கள் சிகிச்சை வழங்கியுள்ளனர்.

இருப்பினும் குழந்தையின் நிலைமை மோசமடைந்த காரணத்தினால் அன்றைய தினம் இரவே யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனால் சிறிது நேரத்தின் பின்னர் குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

இது தொடர்பான மரண விசாரணையை தென்மராட்சி பிரதேச மரண விசாரணை அதிகாரி சி.கி. இளங்கீரன் மேற்கொண்டிருந்தார். (ம-9)

# மரண அறிவித்தல்



### திருமதி லில்லி அக்னஸ் ஆசீர்வாதம்பிள்ளை (முத்தையா)

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், செல்வபுரம் முல்லைத்தீவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லில்லி அக்னஸ் ஆசீர்வாதம்பிள்ளை (முத்தையா) நேற்று முன்தினம் (07.02.2018) புதன்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற செலஸ்ரின் - இன்னேசிக்கம் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மரியநாயகம் - யோசப் தம்பதியினரின் அன்பு மருமகளும், ஆசீர்வாதம்பிள்ளை (முத்தையா) (ஓய்வுபெற்ற கட்டளைச்சேவ்கர், முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம்) அவர்களின் பாசமிகு மனைவியும், ஜோர்ஜ் ஜெயக்குமார் (ஆசிரியர்-வவு/அறபா மகா வித்தியாலயம்), லூட்ஸ் ஜெயறஞ்சினி (ஆசிரியர்-முல்/றோ.க.த மகளிர் பாடசாலை), டொறின் சாந்தினி (பள்ளிமுனை), அருட்பணி அன்ரன் புனிதகுமார் (பங்குத்தந்தை மல்வம், உடுவில்), யோண்சன் தேவகுமார் (லண்டன்), கொண்சன் அருட்குமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஆன்ஸ் றஜினி (ஆசிரியர் -வவு/இராசேந்திரகுளம் அ.த.க பாடசாலை), யேசுதாசன் றோச் (கட்டளைச்சேவகர், நீதிமன்றம் மன்னார்), வின்சன்ற் யேசுராஜா (பாடசாலை அலுவலர் முல்/மகா வித்தியாலயம்), ஆன் யான்சியா றாபா (லண்டன்), வினோ (லண்டன்) ஆகியோரின் மாமியாரும், டனுசியன், கிசோஜியா, மரிய சயோன், ஆன் டிபேறிகா, லுக்சன், பியூஸ்ரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், செபமாலைநாயகி (இந்தியா), பிலிப் யோசவ்வாஸ் வலன்ரைன் (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு நாளை (10.02.2018) சனிக்கிழமை மாலை 2 மணிக்கு முல்லைத்தீவு செல்வபுரம் புனித யூதாததேயு ஆலயத்தில் இரங்கல் திருப்பலியைத் தொடர்ந்து உணாப்பிலவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செல்வபுரம்,
முல்லைத்தீவு.
தொ.பே: 0774525802

தகவல்:
அருட்தந்தை அன்ரன் புனிதகுமார்
பங்குத்தந்தை, மல்வம், உடுவில்

(2702)


## TECHNO WORLD

### A/L தொழில்நுட்பப் பிரிவு

A/L 2018 இல் செயல்முறைப் பரீட்சைக்கு (Practical Exam) தோற்றும் தொழில்நுட்ப பிரிவு மாணவர்களுக்கான விசேட தொடர்ச்சியான செயலமர்வு.

### பொறியியல் தொழில்நுட்பம் (E-TEC)

**ஆரம்பம் 09,11/02/2018 காலை 9.00 மணி**

(வெலிங்டன் சந்தி, புதிய லிங்கம் கூல்பார் அருகாமை)

| | | |
|---|---|---|
| பிரபல ஆசிரியர் ஜெகநாதன் | - | இயந்திரவியல் (Auto mobile) |
| சேரலாதன் (தொழில்நுட்ப பீடம்) | - | உற்பத்தி தொழில்நுட்பம் |
| அருண்குமார் (J/MHC) | - | நில அளவை |
| சிவயன் (தொழில்நுட்ப பீடம்) | - | குடிசார் தொழில்நுட்பம் |
| நிறோஜன் (பொறியியல் பீடம்) | - | நில அளவை |
| நிருபன் (தொழில்நுட்ப பீடம்) | - | நில அளவை |
| பிரசாந்தன் (தொழில்நுட்ப பீடம்) | - | Electrical & Electronics |
| றஜிதரன் (யாழ். பல்கலைக்கழக கல்லூரி) | - | Electrical & Electronics |

### உயிர்முறைமைகள் தொழில்நுட்பம் (BIO-TEC)

திருக்குமரன் (J/NCC)
கலைதீபன் (J/NCC)
சாரங்கன் (K/KCC)
விஷ்ணு (யா/ சிதம்பராக் கல்லூரி)
பொன் சிவ்குமார்

### குறிப்பு

- யாழ். பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட மாணவர்களின் விசேட கருத்தரங்கு இடம்பெறும்.
- அகில இலங்கை ரீதியாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட முதலிடம் பெற்ற மாணவர்களின் கருத்தரங்கு இடம்பெறும்.
- 2018 பரீட்சையில் எதிர்பார்க்கப்படும் வினாக்கள் (விடைகளுடன்)
- கடந்த 2015, 2016, 2017 செயல்முறை வினாக்கள் விடைகளுடன் தரப்படும்

**அனுமதிகள் இலவசம்**

**077 017 5346**


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.02.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.